# ஓசியா முதல் மல்கியா வரை

புத்தகம் - 9

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்,
சென்னை-600 010.

Hosea through Malachi
Booklet - 9
Tamil

© IBL
2004

Cover Credit : Cynthia Kingston
Printed by :

*For additional booklets write to*

**India Bible Literature,**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

Ph : 6425166 Fax : 6428298
E-mail : ibl.maa@iblchennai.org

Hosea through Malachi
Booklet - 9
Tamil

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

*(For private circulation only)* ICM / Tam - 9 / 2004



# ஓசியா முதல் மல்கியா வரை

## தரிசனங்களும் வெளிப்படுத்தல்களும்

## சின்ன தீர்க்கதரிசிகள்: ஓர் பொது அளவை

நாம் இப்பொழுது, கடைசி பன்னிரண்டு தீர்க்கதரிசிகளைப் பற்றி ஒரு பொது ஆய்வு செய்யப் போகிறோம். இவர்கள் சில சமயங்களில் சின்ன தீர்க்கதரிசிகள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இப்படிப் பெயர் சூட்டப்படுவதன் பொருள் என்னவெனில், இந்தப் புத்தகங்கள், நாம் ஏற்கனவே ஆய்வு செய்து முடித்த தீர்க்கதரிசனப் புத்தகங்களைக் காட்டிலும் சிறியவனாய் உள்ளன என்பது தான். பழங்கால வேதபாரகர்கள் இந்தச் சின்ன புத்தகங்களை "பன்னிரண்டு" என்று ஒரே பகுதியாக வைத்தார்கள். ஏனென்றால், இவைகளை மிகவும் அதிகமாக மதித்தார்கள்; இவைகளில் ஒன்றையும் இழந்து விட அவர்கள் விரும்பவில்லை.

வரலாற்றின் எந்தெந்தக் கால கட்டத்தில் இப்புத்தகங்களை எழுதிய தீர்க்கதரிசிகள் வாழ்ந்தார்கள் என்பதைப் பழைய ஏற்பாட்டிலுள்ள பன்னிரண்டு வரலாற்றுப் புத்தகங்களும் நமக்குத் தெரிவிக்கின்றன. உங்கள் வரலாற்று அறிவைச் சமநிலையில் காத்துக்கொள்ள, பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்களை நாம் ஆய்வு செய்தபோது கற்றுக்கொண்ட எபிரெய வரலாறில் தீர்க்கதரிசிகள் எங்கெங்கு வருகிறார்கள் என்பதைக் காட்டும் விளக்கப்படம் (chart) ஒன்றைத் தயார் செய்து கொள்ளுங்கள். இது ஒரு மாணவனுக்கான புத்தகம் இல்லை; ஆனால் வேதத்தைத் தியானித்துப் படிக்க உதவுவது. எனினும், இந்தத் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களைப் படிக்கும்பொழுது, எபிரெய வரலாற்றின் ஏழு உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. இராஜ்ஜியம்.
2. பிரிக்கப்பட்ட இராஜ்ஜியம்.
3. வடதிசை இராஜ்ஜியத்தை அசீரியர் வெற்றி கொண்டது.
4. வடதிசை இராஜ்ஜியத்தின் அழிவு.
5. தென்திசை இராஜ்ஜியத்தின் பாபிலோனிய சிறையிருப்பு.
6. பாபிலோனை பெர்சியர் வெற்றி கொண்டது.
7. பாபிலோனிய சிறையிருப்பினின்று மீண்டு வந்தது.



அத்தியாயம் 1

# ஓசியாவின் தீர்க்கதரிசனம்

தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதை நம்மில் பெரும்பாலோர் அறிவோம். ஆனால் தேவனுடைய அன்பு என்னும் பொருள் பற்றி, எத்தனை புத்தகங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லது படித்திருக்கிறீர்கள்? தேவனுடைய அன்பைப் பற்றி, ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட ஓசியாவின் புத்தகம், தேவனுடைய பரிசுத்த நூலகத்திலுள்ளது. வடதிசை இராஜ்ஜியம் என்றும் 'இஸ்ரவேல்' என்றும் அழைக்கப்பட்டப் பத்துக் கோத்திரங்களுக்கு, தேவ அன்பைக் காட்டும் தீர்க்கதரிசியாக இருக்க தேவனால் ஆணையிடப் பெற்றவர் ஓசியா. தேவனை விட்டு விலகி, அவர்கள் விக்கிரகங்களை வணங்கிக் கொண்டிருந்தபொழுது, ஓசியா அவர்களுக்கு தேவனுடைய அன்பைப் பற்றிப் பிரசங்கித்தார்.

ஒரு மாபெரும் வேலையை நாம் அவருக்கெனச் செய்யவேண்டுமென்று தேவன் நம்மை அழைக்கும்போது, அவர் நமது அநுபவங்களின் மூலமாகவே அவ்வேலைக்கென நம்மை ஆயத்தப்படுத்துகிறார். நாம் வாழும் ஒவ்வொரு நாளையும், அவருக்காக ஊழியம் செய்யப்போகும் அடுத்த ஒவ்வொரு நாளுக்காகவும் ஆயத்தம் செய்ய தேவன் பயன்படுத்துகிறார்.

### வேதனைக்குரிய ஒரு உருவகம்

உண்மையற்ற மக்களுக்கு தேவ அன்பைப் பற்றிப் பிரசங்கிக்க ஓசியா ஆயத்தமாக்கப்பட்டிருந்ததாக தேவன் எண்ணினார். ஏனெனில் 'கோமேர்' என்ற ஒரு வேசியை ஓசியா மணந்திருந்தான் (1:2,3). அவளே தேசத்தின் மிகச் சிறந்த பெண்மணி என்பது போல, அவளை நேசித்துத் தன் பிள்ளைகளுக்கு அவளைத் தாயாக்கினான். அநேக ஆண்டுகளாக கோமேர் தன் பழைய நாயகர்களிடம் அல்லது நேசர்களிடம் சென்ற

பின்னர், அவளைத் திரும்ப ஓசியா தன் வீட்டில் சேர்த்துக் கொண்டு, தொடர்ந்து நேசிக்க வேண்டுமென தேவன் ஓசியாவை வழிநடத்தினார் (3:1). இஸ்ரவேலுக்கு தேவன் தரும் நிபந்தனையற்ற அன்பினையும், அங் கீகரிப்பையும் பற்றி ஓசியா பிரசங்கிப்பதற்கு ஆயத்தப்படுத்த இவைக ளெல்லாம் தேவனால் அனுமதிக்கப்பட்டவையென நாம் கொள்ளலாம்.

கோமேர் ஒரு வேசியாயிருந்தாலும், ஓசியா அவளைத் தன் மனை வியாகத் தெரிந்துகொண்டது போல, இஸ்ரவேலர் தகுதியற்றவர்களாயி ருந்தும் தேவனுடைய மக்களாகத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களாயிருந்தார்கள். உருவகத்தில் ஓர் உண்மைக் கதை வடிவத்தில் கூறப்படுகிறது. அதில் இடம் பெறும் மக்கள், இடங்கள் மற்றும் பொருள் களுக்கு சன்மார்க்க ரீதியாகவும் ஆவிக்குரிய விதமாகவும் போதிக்கக் கூடிய ஆழமான அர்த்தங்களுண்டு. இஸ்ரவேலர் பால் தேவன் கொண் டிருந்த நிபந்தனையற்ற அன்பைப் பிரதிபலிக்கும் வேதனை தரும் உரு வகமாக ஓசியாவின் திருமணம் அமைந்தது.

## ஓசியாவின் பிரசங்கம்

வடதிசை இராஜ்ஜியத்தின் மக்கள் காலங்காலமாகத் தொடர்ந்து செய்து வந்த பாவம் விக்ரகாராதனை. ஓசியா அந்த நாட்களில் தான் தைரியமாக, அவர்களுக்கு ஏற்ற, சரியான பிரசங்கங்களைச் செய்து வந்தான். விக்கிரக வணக்கத்தோடு தொடர்புடைய மிகப் பெரிய ஒழுக்கச் சீர்கேடும் அங்கு இருந்தது. நேரடியாகத் தாக்கித் தெளிவாகவே ஓசியா பிரசங்கித்தான்.

அவனுடைய பிரசங்க பாணியை நீங்கள் விளங்கிக் கொள்ளத்தக்க தாக, எளிய நடையில் சில பிரசங்கப் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன: *“இஸ்ரவேலிலுள்ள மனுஷர் தங்கள் திராட்சரசத்தைக் குடித்துத் தீர்ந்த பின், சில வேசிகளைத் தேடிப் போகிறார்கள். கனத்தைக் காட்டிலும், வெட்கம் அவமானத்தையே அதிகம் நேசிக்கிறார்கள். மதுபானமும் மங் கையரும், பாட்டும் என் மக்களின் சிந்திக்கும் ஆற்றலைக் கொள்ளை யிட்டன. தாங்கள் என்ன செய்ய வேண்டும் என ஒரு கட்டையினிடத் தில் ஆலோசனை கேட்கிறார்கள். குறி தப்பிப்போகும் ஒரு கோணலான வில்லைப்போல் இருக்கிறார்கள், அவர்கள் காற்றை விதைத்தார்கள்; சூறைக் காற்றை அறுப்பார்கள். இஸ்ரவேலர் விழுங்கப்படுகிறார்கள். புற ஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத உடைந்த பாத்திரத்தைப் போலிருப்பார்கள். இஸ்ரவேலின் மகிமை ஒரு பறவையைப் போல் பறந்துபோம்.”*

ஒரே மெய்யான தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாதலால், அவர்கள் வேறே தேவர்களைச் சேவிக்கத் திரும்பியதை ஓசியா, தேவ னுக்கு விரோதமான *“ஆவிக்குரிய விபசாரமாகக்”* கருதினான்.



*“என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர் களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கி றார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப் பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள்.”*

*“அவர்கள் எலலாரும் விபசாரக்கள்ளர்; அப்பஞ் சுடுகிறவன் எரிக்கும் அடுப்பைபோல் இருக்கிறார்கள்; அவன் மாவைப் பிசைந்தது முதல் அது உப்பிப்போகு மட்டும் அனலை மூட்டாமல் ஓய்ந்திருக்கிறான். இந்த மக்கள் எப்போதும் இச்சையினால் பற்றியெரிகிறார்கள். என் ஜனங்கள் அந்நிய ஜனங்களோடே கலந்திருக்கிறார்கள். அவர்கள் பொல்லாத வழி களைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அவர்கள் ஒன்றுக்கும் உத வாதவர்களாய் திருப்பிப் போடாத அப்பமாயிருக்கிறார்கள்”.* ஓசியா பிர சங்கிக்கும் போது *“ஜனங்களுக்கு எப்படியோ, ஆசாரியனுக்கும் அப்ப டியே, ஆசாரியனே, அடுத்தவன் மேல் உன் விரலை நீட்டாதே. நான் என் விரலை உன்னை நோக்கி நீட்டி உன்மேல் குற்றஞ்சாட்டுகிறேன்”* என உரத்த சத்தமாய்ப் பிரசங்கித்தான்.

அவர்களுடைய விக்ரகாராதனையின் விளைவினால் அவர்கள் சிறை பிடிக்கப்பட்டுப் போனார்கள்: *“இஸ்ரவேலர் விழுங்கப்படுகிறார்கள்; அவர் கள் இனிப் புறஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள். அவர்கள் தனித்துத் திரிகிற காட்டுக் கழுதையைப்போல் அசீரியரண்டைக்குப் போனார்கள்.”* (8:8-9). வடதிசை இராஜ்ஜியத்திற்கு, அசீரிய சிறையிருப்பு மரணஅடியாக ஆனது. ஏனெனில் இனி ஒருபோ தும் தன் சொந்த தேசத்துக்கு அவர்கள் திரும்பி வந்து ஒரு இராஜ்ஜிய மாக ஆகமாட்டார்கள். அசீரியனின் வெற்றிக்கும், ஆசீரியச் சிறையி ருப்புக்கும் தப்பியவர்கள் உலகின் பறஜாதி தேசத்தார் மத்தியில் சிதற டிக்கப்பட்டுப் போவார்கள்.

## தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு

இஸ்ரவேல் சிறையிருப்பில் சென்றாலும், தேவன் அவர்களை நேசித் துத், தம்மண்டை சேர்த்துக் கொள்வதால் மீண்டும் ஆவிக்குரிய நன்னி லைக்கு அவர்களைக் கொண்டு வருவார்: *“நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன், நீதியும், நியாயமும், கிரு பையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளு வேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்து கொள்ளுவாய்”* (2:19-20). இஸ்ரவேலின் இந்த *‘ஆவிக் குரிய மீண்டு வருதலை’* அநேக தீர்க்கதரிசிகள் பிரசங்கித்துள்ளார்கள்; ஆனால் இன்னும் அது நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் நிறை வேறுதலைக் காண நாம் கடைசி காலம் வரைக் காத்திருக்க வேண்டியி ருக்கும்.

ஓசியா, தேவனுடைய அன்பைப் பற்றித் திறமையாகப் பிரசங்கித்தான்: *“உன் பலிகள் எனக்கு வேண்டாம், எனக்கு வேண்டியது உன் அன்பே; உன் காணிக்கைகள் எனக்கு வேண்டாம், நீ என்னை அறிந்து கொள்வதையே விரும்புகிறேன்.”* அவர்கள் இருதயங்களை தேவனிடமாகச் சீராக்க, எரேமியாவைப் போலவே ஓசியா பிரசங்கித்தான். *“உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது. இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு”* (10:12; 12:6).

### தனி மனிதனுக்கு தியானமும், வாழ்க்கைப் பாடமும்

இஸ்ரவேலின் ‘ஆவிக்குரிய மீண்டு வருதலின்’ நிறைவேறுதலுக்காக நாம் காத்திருக்க வேண்டியிருப்பினும், நம் அன்பான தேவனிடம், நமது சொந்த ஆவிக்குரிய ஜீவியத்தில் திரும்பி வருவதற்கு நாம் காத்திருக்கத் தேவையில்லை. இந்தக் குறுகிய புத்தகச் சுருக்கத்தை நிறைவு செய்வதற்கு நல்லதோர் வழி, ஓசியாவில் எனக்கு மிகவும் பிடித்தமான பகுதியைக் கூறுவது தான்.

*“கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம். அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம் போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப் போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்”* (6:1-3).



அத்தியாயம் 2

# யோவேலின் தீர்க்கதரிசனம்

பன்னிரண்டு சின்ன தீர்க்கதரிசிகளில், யோவேல் இரண்டாமவர். மற்ற சின்ன தீர்க்கதரிசிகள் பயன்படுத்தும் *“கர்த்தருடைய நாள்”* என்ற பதத்தை முன் நிறுத்தியே யோவேல் தீர்க்கதரிசியின் செய்தி அமைந்துள்ளது. தென்திசை இராஜ்ஜியத்தைப் படையெடுத்து வந்த வெட்டுக்கிளிகளின் பயங்கரமான வாதையை யோவேல் *“கர்த்தருடைய நாள்”* என்றழைக்கிறார். இப்படி வெட்டுக்கிளிகளின் வாதையைக் *“கர்த்தருடைய நாள்”* என்றழைக்கும்போது, இந்த வாதையை, வரப்போகும் பாபிலோனிய சிறையிருப்போடு தொடர்பு படுத்துகிறார். பெரிய தீர்க்கதரிசிகளைப் போல, பாபிலோனிய சிறையிருப்புபற்றிய தீர்க்கதரிசனங்களை, கிறிஸதுவின் இரண்டாம் வருகை பற்றிய தீர்க்கதரிசனங்களோடு கலந்து எழுதுகிறார்.

அநேகருக்கு யோவேலை நன்றாகத் தெரியும். பெந்தெகொஸ்தே நாளைப் பற்றிய அவரது தீர்க்கமான தீர்க்கதரிசனமே அதற்குக் காரணம். சபை பிறந்த நாளன்று அங்கிருந்தவர்கள், “இதெப்படி? இதென்னமாய் முடியுமோ?” என்று கேள்வியெழுப்பினார்கள். பேதுரு பெந்தெகொஸ்தே நாளின் தனது பிரசங்கத்தின் போது *“தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது”* எனக் கூறினார் (அப். 2:12, 16). நமது வாழ்வின் கடந்தகால, நிகழ்கால, வருங்கால நாட்களெல்லாவற்றிலுமே உங்களுக்கும் எனக்கும் கர்த்தருடைய நாள் உண்டு என யோவேல் பிரசங்கித்தார்.

### வெட்டுக்கிளிகளின் வாதை

தெற்கு இராஜ்ஜியத்தை நோக்கித் திரள் திரளாக வரும் வெட்டுக்கிளிகளின் வாதையை விவரிப்பதோடு யோவேலின் புத்தகம் ஆரம்பமாகிறது. *“பச்சைப் புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி*

*விட்டதைப் பச்சைக் கிளி தின்றது; பச்சைக் கிளி விட்டதை முசுக்கட்டைப் பூச்சி தின்றது"* (1:4) என யோவேல் பிரசங்கிக்கிறார். வெட்டுக்கிளியின் வாதை நாடு முழுவதும் பரவியது. பூமியின் மீது செடி கொடி இல்லாமல் செய்து, அழிவு ஒன்றே அங்கு மீதமாயிற்று.

இந்த வெட்டுக்கிளிகளின் வாதையைக் *"கர்த்தருடைய நாள்"* எனக் குறிப்பிடும்போது, யோவேல் கர்த்தருடைய நாளை நிகழ்காலத்துக்குரிய சம்பவமாக்குகிறார். இப்படி கர்த்தருடைய நாளைப் பற்றிக் குறிப்பிடும் யோவேல் இதற்கு என்னதான் அர்த்தம் கொள்கிறார்? பயங்கரமான வாதையைப் பார்த்த போது, அதற்கு மூல காரணம் கர்த்தரே என்று கூறுகையில், நம்முடைய பேரழிவுகளிலும் தேவனே இறையாண்மை பெற்றவராயுள்ளார் என நமக்கு எடுத்துச் சொல்கிறார். வறுமை, செழுமை – இரண்டையுமே இயக்கும் சக்தியாக தேவன் இருக்கக்கூடும் என அனைத்து வேதாகம எழுத்தாளர்களும் ஒன்று சேர்ந்து கூறுவதை யோவேல் ஆமோதிக்கிறார். ஏனென்றால் பயங்கரமான அந்த வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு, தேவன் தங்களைக் கைவிட்டார் என மக்கள் நினைக்கத் தூண்டியிருக்கலாம். அந்த நாளிலும் தேவன் அங்கே இருக்கிறார். அதாவது சில சமயங்களில் பேரழிவின் நாளும் கூட அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குக் *"கர்த்தருடைய நாளாய்"* அமையலாம் என யோவேல் கூறுகிறார் (ரோமர் 8:28).

## பாபிலோனியச் சிறையிருப்பு

வெட்டுக்கிளிகளின் திரள் கூட்டம் ஒரு சேனையைப் போல வேலை செய்கிறது. ஒன்றாகச் சேர்ந்து அவைகளின் பாதையிலுள்ள எல்லாவற்றையும் அழித்து விடுகிறது. யூத மக்களின் கவனத்தை ஈர்த்து, பாபிலோனிய சேனைகளின் படையெடுப்பினால் அவர்கள் அனுபவிக்கப் போகும் அழிவைக் குறித்த அவனது தீர்க்கதரிசனத்துக்கு அவர்களை ஆயத்தப் படுத்த, யோவேல் வெட்டுக்கிளிகளின் 'சேனை'யால் வரும் ஒட்டு மொத்த அழிவைக் கூறுகிறான். யோவேல் இப்படி எழுதுகிறான். *"அவைகள் (வெட்டுக்கிளிகள்) பராக்கிரமசாலிகளைப் போல ஓடும்; யுத்த வீரரைப்போல மதிலேறும்; வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும். அவைகள் பட்டணம் எங்கும் செல்லும்; மதிலின் மேல் ஓடும், வீடுகளின் மேல் ஏறும்; பலகணிவழியாய்த் திருடனைப் போல உள்ளே நுழையும்"* (2:7, 9).

## பெந்தெகொஸ்தே நாள்

வெட்டுக் கிளிகளின் படையெடுப்பை இன்றைய கர்த்தருடைய நாளென்றும், பாபிலோனிய சிறையிருப்பை எதிர்கால கர்த்தருடைய



நாளென்றும் யோவேல் அறிவித்த பின்னர், இன்னொரு கர்த்தருடைய நாளாகிய பெந்தெகொஸ்தே நாள் பற்றிப் பேச ஆரம்பித்தார். *"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்"* (2:28) என தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை யோவேலை பகிர்ந்து கொண்டார்.

இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவாவது பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது (அப்போஸ்தலர் 2:1–4). பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் என வாசிக்கிறோம். அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அப்போஸ்தலர்களுடைய தலைமேல் அமர்ந்திருப்பதைக் கண்ட மக்கள், தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதைக் கேட்டதோடல்லாமல், பலத்த காற்று அடிக்கிற முழக்கத்தையும் கேட்டதினால் பேதுருவிடம், *"இதன் பொருள் என்ன?"* என்று கேட்டார்கள். பேதுரு, *"தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது,"* என்றார் (அப்போஸ்தலர் 2:16).

## இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

யோவேலின் பெந்தெகொஸ்தே பற்றிய தீர்க்கதரிசனம் மூலமாக, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னால் வரும் நாட்களிலே நடக்கப் போகும் கர்த்தருடைய நாள் பற்றிய காரியங்களைப் பற்றி தேவன் நம்மிடம் கூறுகிறார். *"வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்"* (2:30–32).

பெந்தெகொஸ்தே நாளைப் பற்றி யோவேல் தெளிவாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார். அந்தத் தீர்க்கதரிசனத்தை நீங்கள் ஆழ்ந்து படித்தால், பெந்தெகொஸ்தே நாளில் நடக்காத சம்பவங்களையும் அவர் முன்னறிவிக்கிறார். சின்ன தீர்க்கதரிசிகள் பற்றியபடிப்பில் நிபுணர் ஒருவர், யோவேலின் இந்த தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவேறும் என்று எழுதினார்.

பாபிலோனிய வெற்றி அல்லது பெந்தெகொஸ்தே போன்ற சம்பவங்கள் பற்றிய யோவேலின் தீர்க்கதரிசனங்கள் வார்த்தை தப்பாமல் நிறைவேறினது போல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய அவரது தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்போது நாம் பரவசமடையக் கூடும்.

வரப்போகும் இந்தக் கர்த்தருடைய நாளை *"கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்"* என பேதுரு அழைக்கிறார். இந்த நாளைப் பற்றிப் பேதுரு எழுதும்போது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிகழப் போகும் பல சம்பவங்களில் ஒன்றே ஒன்றைப் பற்றி மட்டும் குறிப்பாகச் சொல்கிறார். *"பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்"* (2 பேதுரு 3:10) என பேதுரு கூறுகிறார்.

### வாழ்க்கைப் பாடம்

யோவேல் இப்போதைய கர்த்தருடைய நாள் மற்றும் வருங்கால கர்த்தருடைய நாள் பற்றி மட்டும் பிரசங்கிக்கவில்லை. தேவனுடைய மக்களாகிய நாம் நம் தலைமுறைக்கும் நம் பிள்ளைகளுக்குச் சொல்வதன் மூலம் வருங்கால சந்ததிகளுக்கும் கர்த்தருடைய நாளைப் பற்றிச் சொல்லவேண்டும் என அறிவுறுத்துகிறார் (1:2-3). ஒவ்வொரு நாளும் (அது இறந்த காலமோ, நிகழ்காலமோ, வருங்காலமோ) கர்த்தருடைய நாளென்று கருதப்பட வேண்டுமென்பதை நாம் உணர வேண்டுமென அவர் அறிவுரை கூறுகிறார். கடந்த கால சம்பவங்களை நமது நன்மைக்கேதுவாக தேவன் நடத்தியதை நாம் நினைவுகூரும்போது, அந்த நம்பிக்கையை இப்போதைய சந்தர்ப்பங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் (ரோமர் 8:28).

வரப்போகும் அந்த பெரிதும் பயங்கரமுமான கர்த்தருடைய நாளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென தேவன் ஏன் விரும்புகிறார்? நாம் எப்படிப்பட்ட மனிதர்களாய் இருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்ப்பதற்காக வரப்போகும் கர்த்தருடைய நாளைப் பற்றிப் பேதுரு நமக்குச் சொல்லும்போது, தனி மனிதனுக்கு வாழ்க்கைப் பாடமாக அவர் சொல்வதைக் கவனியுங்கள். *"ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்" (2 பேதுரு 3:14-15).* வரப்போகும் கர்த்தருடைய நாளை நாம் எதிர்நோக்கியிருக்கும்போது கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்குப் பேதுரு சவாலாகக் கூறுவதுபோலவே, யோவேலும் பிற தீர்க்கதரிசிகளும் அறிவுரை வழங்குகிறார்கள்.



அத்தியாயம் மூன்று

# ஆமோஸின் தீர்க்கதரிசனம்

ஆமோஸ், எருசலேமுக்குத் தெற்கே, சுமார் பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள தெக்கோவா என்னும் சிறு கிராமத்தில் வாழ்ந்த அத்திப்பழம் பொறுக்குபவரும் மேய்ப்பனுமாய் இருந்தவர். அசீரியச்சிறையிருப்புக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன், வடதிசை இராஜ்ஜியத்துக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் சொல்லும்படி, தேவன் இவரைத் தென்திசை இராஜ்ஜியத்தினின்று அழைத்தார். இராணுவத்திலும், பொருளாதாரத்திலும் தென்திசை இராஜ்ஜியத்தை ஆண்ட உசியா ராஜாவின் ஆட்சியின் கீழ் யூதா தேசம் மேலோங்கியிருந்தது. அக்காலத்தில் தான் ஆமோஸ் ஊழியம் செய்தார். யூதா தேசத்தார் கண் எட்டும் தூரம் வரை எந்த சத்துருவும் இல்லை, பயமுறுத்தும் காரியமும் இல்லை என நம்பினார்கள். ஆனால் ஆமோஸின் தீர்க்கதரிசனமோ செழிப்பான யூதா தேசத்துக்கு விரோதமாகவும் வடதிசை இராஜ்ஜியமான இஸ்ரவேலுக்கு விரோதமாகவும் இருந்தது.

### தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது

வடதிசை இராஜ்ஜியத்தின் குடிமக்கள் கேட்க விரும்பிய வார்த்தைகளைச் சொல்லி ஆமோஸ் தன் தீர்க்கதரிசனத்தை ஆரம்பித்தார். அவர்களுடைய சத்துருக்களை தேவன் நியாயந்தீர்ப்பார் என்று அவர்களுக்குச் சொன்னார் (1:3, 2:3). அந்தப் பகை தேசங்களின் பெயர்களையும், அவர்கள் மீது வரப்போகும் நியாயத்தீர்ப்புகளையும் அவர் சொன்னதைக் கேட்டவர்கள், அவருடைய செய்தியால் பூரிப்படைந்தார்கள் - அவர்கள் வெறுத்தவர்களை தேவன் எப்படித் தண்டிக்கப் போகிறார் என்பதைக் கேட்கப் பிரியப்பட்டிருப்பார்கள். இந்தப் பிரசங்கங்களால் அவர்களுடைய கவனத்தை ஈர்த்த பிறகு, அவர்களுக்குக் கெட்ட செய்தியை ஆமோஸ் கூறினார்: யூதாவும் இஸ்ரவேலும் கூட

நியாயந்தீர்க்கப்படப் போகிறார்கள் (2:4-8). யூதா தேசத்தார் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் போனதாக யூதாவைக் குற்றஞ்சாட்டினான். இஸ்ரவேலின் பேராசை, சமூக அநீதி, கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கும் படியான ஒழுக்கக்கேடு பற்றி இஸ்ரவேலைக் குற்றஞ்சாட்டினான்.

அசீரிய சிறையிருப்பைப் பற்றி இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தொடர்ந்து, ஆமோஸ் தீர்க்கதரிசனம் உரைத்தார்.

*"வேகமானவன் ஓடியும் புகலிடமில்லை; பலவான் தன் பலத்தினால் பலப்படுவதுமில்லை; பராக்கிரமசாலி தன் பிராணனைத் தப்புவிப்பது மில்லை. வில்லைப் பிடிக்கிறவன் நிற்பதுமில்லை; வேகமானவன் தன் கால்களால் தப்பிப் போவதுமில்லை; குதிரையின் மேல் ஏறுகிறவன் தன் பிராணனை இரட்சிப்பதுமில்லை. பலசாலிகளுக்குக்குள்ளே தைரியவான் அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போவான்"* (2:14-16).

வடதிசை இராஜ்ஜியம் இந்தச் செய்தியைக் கேட்டு ஏளனம் செய்திருப்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அது செழிப்பான காலமாயிருந்தது. ஆமோஸ் பிரசங்கத்தில் கூறிய எல்லாக் காரியங்களிலும் வடதிசை இராஜ்ஜியத்தின் இராணுவம் மிகச் சிறப்பாக மேன்மை பெற்று விளங்கியது. ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்குள் வடதிசை இராஜ்ஜியமான இஸ்ரவேல் தோற்கடிக்கப்பட்டு, அனைத்து மக்களும் அசீரிய இராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள்.

மனந்திரும்புவதற்குத் தருணங்களை இஸ்ரவேலுக்கு அளித்ததன் மூலம் அசீரியச் சிறையிருப்பைத் தடுக்க தேவன் விரும்பினார் (4:6-13). அப்பக்குறைவை அனுப்பினார், மழை பெய்யாமலிருக்கப் பண்ணினார், கருக்காய், விஷப்பனி மற்றும் கொள்ளை நோயை அனுப்பினார். ஆனாலும் கூட தேவன் தீர்க்கதரிசி மூலமாக *"ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள்"* என்றார் (4:8,9,10,11). மனந்திரும்புதலுக்குத் தேவன் அழைத்த அழைப்பிற்கு இஸ்ரவேல் செவி கொடாமற் போனதினால் அவர்கள் மேல் வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார், இந்த நியாயத்தீர்ப்பு நிரந்தரமானது - அசீரியச் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் இனித் திரும்பத் தன் நாட்டிற்கு வரவே வராது.

ஆமோஸ் தேவன் தமக்குத் தந்த ஐந்து தரிசனங்கள் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பை முன்னறிவித்தார். முதல் இரண்டு தரிசனங்கள் காட்டிய வெட்டுக் கிளிகளின் வாதை மற்றும் பட்சிக்கும் அக்கினி என்ற நியாயத்தீர்ப்பு, ஆமோஸ் தேவனின் இரக்கத்திற்காகக் கெஞ்சிய பொழுது, தடுக்கப்பட்டது (7:1-6). மூன்றாவது தரிசனம், ஒரு சுவர் நேராகக் கட்டப்படுவதைக் காணும் தூக்கு நூல் பற்றியது. இது தேவன்



கோபப்படக் காரணம் இருக்கிறது - அவருடைய மக்கள் 'நேர்மையாய் இல்லை, தேவனுடைய நியாயப்பிரமாணங்களின்படி வாழாமல், 'கோணலான' மக்களாய், தேவனுடைய சட்டத்தை வெறுத்து, அவருடைய கோபத்துக்கு ஆளானார்கள்.

நாலாவது தரிசனம் மிகவும் பழுத்த பழங்களுள்ள கூடை பற்றியது. இது நியாயத்தீர்ப்பு வெகு நாளாய்க் காத்திருப்பதைக் காட்டியது. ஐந்தாவது தரிசனத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு முன்னுரைக்கப்பட்டது. அவர் ஒரு பலிபீடத்தண்டை நின்று, *"நீ வாசல் நிலைகள் அசையும்படி போதிகையை அடித்து, அவர்கள் எல்லாருடைய தலையின்மேலும் விழ உடைத்துப் போடு; அவர்களுக்குப் பின்னாக வரும் மீதியானவர்களை நான் பட்டயத்தினால் கொன்றுபோடுவேன்; அவர்களில் ஓடுகிறவன் ஒருவனும் தப்புவதுமில்லை, அவர்களில் தப்புகிறவன் ஒருவனும் இரட்சிக்கப்படுவதுமில்லை"* (9:1). இந்தத் தரிசனத்தில் இஸ்ரவேலின் மேல் அவருடைய நியாயத்தீர்ப்பு முடிவானது என தேவன் காட்டினார். ஒருவரும் தப்ப முடியாது, ஒருவரும் விடப்படுவதில்லை, மேலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு மிக நெருங்கி வந்துவிட்டது.

## ஆவிக்குரிய வாழ்வில் மேம்பட்ட பொறுப்பை அதிகமாக்குகிறது

தேசங்களின்மேல் வரும் நியாயத்தீர்ப்பிலிருந்து யூதாவையோ, இஸ்ரவேலையோ ஆமோஸ் தனியே பிரித்துவிடவில்லை. அதற்குப்பதில் புறஜாதி மக்களுக்கு வரும் நியாயத்தீர்ப்பை விட அவர்களுக்கு வருவது அதிகக் கடுமையாயிருக்குமெனக் கூறினார். அவர்கள் பாவங்களுக்கான விளைவு பெரிதாயிருக்கும். ஏனெனில் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அவர்களது அறிவால் ஆவிக்குரிய அனுகூலமான சூழ்நிலை இருந்தும் கூட, கற்பனைகள் மற்றும் தேவனுடைய வார்த்தையிலுள்ள கட்டளைகளில் அவர்கள் நிலைத்து நிற்கவில்லை. ஆமோஸின் கூற்றுப்படி, ஆவிக்குரிய மேம்பட்ட நிலைக்குத் தக்கவாறு ஆவிக்குரிய கணக்கு ஒப்புவித்தலும் அளக்கப்படுகிறது. மேலும் நமக்கிருக்கும் ஆவிக்குரிய நன்மை நாம் வாழும் வாழ்க்கை முறையை அதிகமாய் நல் முறையில் பாதிக்க வேண்டும்.

நமக்குத் தெரிந்ததை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்கிறோம் என்பது, நமக்கு என்ன தெரியுமென்பதை விட மிக மிக முக்கியமானது. அறிவைப் பெற்றுக் கொள்வதை விட, நம் அறிவின்படி வாழ்வது அதிக முக்கியம் என்று நாம் நினைவுறுத்தப்பட வேண்டியது அவசியம். மதச் சார்பில்லாத உலகம் அறிவே நற்குணம் என்று எப்போதும் நம்பி வருகிறது. தீர்க்கதரிசிகளோ அறிவை அல்லது ஞானத்தைப்

பயன்படுத்துவது தான் நற்குணத்தைக் கொடுக்கிறது எனப் பிரசங்கித்தார்கள்.

## பழைய நிலைக்குக் கொண்டு வருதல் பற்றிய வாக்குத்தத்தம்

கடைசியில் இஸ்ரவேல் மக்கள் மீட்கப்படுவார்கள் என ஆமோஸும் பிற தீர்க்கதரிசிகளைப் போல் பிரசங்கித்தார். *"ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக் கொள்ளும்படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன்"* (9:11-12). இந்தத் தீர்க்கதரிசனம் இஸ்ரவேல் தன் தேவனிடத்திற்கு ஆவிக்குரிய வாழ்க்கையில் திரும்புவதைப் பற்றியது. இஸ்ரவேலின் இந்த 'ஆவிக்குரிய மீண்டு வருதல்' இன்னும் நிகழவில்லை. உலகமெங்கும் சிதறியிருந்த யூதர்கள் திரும்பி வந்ததை நாம் கண்டிருக்கிறோம். அரசியல் ரீதியாக இஸ்ரவேல் தேசம் மீண்டும் உருவானதைக் கண்டோம். ஆனால் இன்னும் யூதர்களின் ஆவிக்குரிய "மீண்டுவருதலை" நாம் இன்று வரை காணவில்லை.



அத்தியாயம் நான்கு

# ஒபதியாவின் தீர்க்கதரிசனம்

*"கர்த்தராகிய ஆண்டவர் ஏதோமைக் குறித்துச் சொல்லுகிறது என்னவென்றால்... இதோ நான் உன்னை ஜாதிகளில் சிறுகப் பண்ணினேன்; நீ மெத்தவும் அசட்டைபண்ணப்பட்டிருக்கிறாய். கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்குகிறது. நீ கழுகைப் போல உயரப் போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன்"* (ஒபதியா 1:2-4).

இப்படித்தான் ஒபதியாவின் புத்தகம் துவங்குகிறது. கன்மலை வெடிப்புகளில் வாழும் அகந்தைக்காரர்கள் தங்களை யாரும் விழத்தள்ள முடியாது என்று சொல்வதைப் பற்றிக் கூறுகிற ஒபதியாவின் பேச்சு எதைப் பற்றியது? பிற கோள்களில் உயிரினம் உண்டா என்று ஆராய விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் இருபத்தோராம் நூற்றாண்டு மக்களாகிய நம்மை இந்தப் புத்தகம் எச்சரிக்கிறது என சிலர் கூறுகிறார்கள். முந்தைய தலைமுறைகளில் இந்த வசனங்கள், தேவன் நாம் உயரமான கட்டிடங்களில் வாழ்வதை விரும்பவில்லை என்ற பொருள் தருவதாகக் கூறினார்கள். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் *"நாம் அறிவியல், தொழில்நுட்பம் பற்றிப் பெருமை கொண்டு, விண்வெளியிலுள்ள பிற கோள்களில் வாழ முயன்றால், தேவன் நம்மைத் தாழ்த்தி, திரும்பவும் பூமிக்குக் கொண்டு வருவார்,"* என இந்த வசனங்களுக்குச் சிலர் மொழியாக்கம் செய்கிறார்கள்.

ஒபதியா உயரமான கட்டிடங்கள் பற்றியோ விண்வெளியைப் பற்றியோ எழுதவில்லை. தீர்க்கதரிசன புத்தகங்களிலே மிகவும் சிறியதான இதிலே, ஒபதியா ஒரு பரிசுத்தமான ஆக்ரோஷத்துடன், பகை உணர்ச்சி

கொண்ட மக்களுக்கு எழுதுகிறார். இவர்கள், எருசலேம், பாபிலோனியர் கையில் வீழ்ந்தபோது யூத மக்களுக்கு விரோதமாகப் பயங்கரமான காரியங்களைச் செய்திருந்தார்கள்.

## ஏதோமின் வழி ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டது

'ஏதோம்' என்ற தேசத்தைக் கடுமையாகக் கண்டிக்க தேவன் ஒபதியாவின் மூலம் பேசினார். இந்த தேசத்து மக்கள் வாழ்ந்த இடத்தை இன்றும் நீங்கள் காணலாம். 'ரோஜாவின் சிவப்பு நிற பெட்ரா' என்ற அந்தப் பட்டணம் யோர்தான் தேசத்திலுள்ளது. சிவப்புநிறக் குன்றுகள் எழுநூறு அடி உயரம் கொண்டவை. அக்குன்றுகளுக்கிடையே அகன்ற இடைவெளியில் நீங்கள் குதிரை சவாரி செய்யலாம். இந்த அகன்ற இடைவெளிகள் ஒரு காலத்தில், ஒபதியா குறிப்பிடும் மக்கள் வாழ்ந்த நகரமாயிருந்தன.

இந்த மக்கள் தங்கள் பகைவர்களின் நகரங்களை அல்லது பணக்கார வியாபாரிகளின் வண்டிகளைக் கொள்ளையடித்த பின் கயிற்றேணிகள் மூலம் ஏறித் தங்கள் கன்மலை வாழிடங்களிலே ஒளித்துக் கொள்வார்கள். அங்கே பகைவர்கள் வரவே முடியாது. அவர்களின் உயரமான குடியிருப்புகள், அவர்களை யாரும் அழிக்க முடியாது என்று எண்ணத் தூண்டின. அதனால் தான் *"என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்குகிறது"* என்று ஒபதியா எழுதுகிறார் (3).

இந்த மக்கள் தாம் யார்? இவர்கள் யாக்கோபின் சகோதரனாகிய ஏசாவின் சந்ததியினர். யாக்கோபும் ஏசாவும் இரட்டையர்கள் என ஆதியாகமம் நமக்குக் கூறியது. ஆனால் அவர்களின் மதிப்பீடுகளும், வாழ்க்கை முறைகளும் முற்றிலும் எதிர்மாறாயிருந்தன. யாக்கோபு நேர்மையற்றவனாயிருந்தான். ஆனால் ஆவிக்குரிய பக்தியும் இருந்தது. ஏசாவோ சீர்கெட்டவனாகவும், பக்தியற்றவனாகவும் இருந்தான். இக்காலத்து வழக்கின்படி 'மதச் சார்பற்றவனாக' இருந்தான். ஒரு கோப்பைக் கூழுக்காக ஏசா தன் சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்றதில் இக்கருத்து உருவகமாக ஆதியாகமப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

யாக்கோபின் சந்ததியார் இஸ்ரவேல் என்னும் பெயரை அவனிடமிருந்து பெற்று யூதர்கள் என்றார்கள். ஏசா, ஏதோமின் மக்களுக்குத் தகப்பனானான். இவர்கள் யூதர்களுக்கு ஜென்மப் பகைவர்கள். ஏதோமியர்கள், யூதர்களுக்குத் தீவிரப் பகையாளிகள். யூதர்களைக் கொல்வதற்குப் பிற தேசத்தாருடன் கூட்டுச் சேர எப்போதும் தருணம் தேடிக் கொண்டே இருப்பார்கள்.



யூதர்களைப் பகைத்து அவர்களுக்குக் கொடுத்த உபத்திரவத்தின் நேரடி பலனாக ஏதோமியரின் வீழ்ச்சியைப் பற்றி ஒரு சின்ன தீர்க்கதரிசனத்தை ஒபதியா எழுதினார். ஏதோமுக்குக் குறிப்பிட்டக் குற்றச்சாட்டுகளை அவர் முழங்கினார். எட்டுத் தடவை "...இருக்கவேண்டியதாயிருந்தது", எனக் கூறுகிறார். இந்தக் காரியங்களையெல்லாம் ஏதோமியர்கள் செய்திருக்கிறார்கள் என விளங்குகிறது.

*"உன் சகோதரன் அந்நியர் வசமான நாளாகிய அவனுடைய நாளை நீ பிரியத்தோடே பாராமலும், யூதா புத்திரருடைய அழிவின் நாளிலே அவர்கள் நிமித்தம் சந்தோஷப்படாமலும், அவர்கள் நெருக்கப்படுகிற நாளிலே நீ பெருமையாய்ப் பேசாமலும் இருக்க வேண்டியதாயிருந்தது. என் ஜனத்தின் ஆபத்து நாளிலே நீ அவர்கள் வாசல்களுக்குள் பிரவேசியாமலும், அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் அநுபவிக்கிற தீங்கை நீ பிரியத்தோடே பாராமலும், அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் ஆஸ்தியில் கை போடாமலும், அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழி சந்திகளிலே நிற்காமலும், இக்கட்டு நாளில் அவர்களில் மீதியானவர்களைக் காட்டிக் கொடாமலும் இருக்க வேண்டியதாயிருந்தது"* (12-14).

சிதேக்கியாவின் காலத்தில் எருசலேம் வீழ்ச்சியுற்ற காலத்தில், பட்டணம் தரைமட்டமாக்கப்பட்டு, யூத மக்கள் படுகொலை செய்யப்பட்டு அல்லது சிறையாகக் கொண்டு போகப்பட்டபோது ஏதோமின் நடவடிக்கையை ஒபதியா கடுமையாகக் கண்டித்ததாக அறிஞர்கள் நம்புகிறார்கள். எருசலேமை பாபிலோனியர் முற்றுகை போட ஏதோமியர் உதவினார்கள். நகரத்தைக் கொள்ளையடிப்பதிலும் பங்கெடுத்தார்கள். அழிவுக்குத் தப்பிய யூதர்களை ஏதோமியர் பிடித்து பாபிலோனியர் வசம் ஒப்படைத்தனர்.

ஒபதியா ஏதோமின் இந்த ஆக்கினையிலிருந்து திரும்பி, பிற தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து கர்த்தருடைய நாளைப் பற்றிப் பிரசங்கித்தார். ஏதோமியரைப் பார்த்து, *"நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்"* (15) என்றார். அவர் தீர்க்கதரிசனம் சொன்ன இந்த நாள் நிறைவேறும்போது, ஏதோம் தேசம் முற்றிலும் அழிக்கப்பட்டுப்போம். அவர்களை அழிக்க தேவன் பயன்படுத்தப் போகும் கருவியைப் பற்றியும் மிகச் சரியாகச் சொன்னார். அவர்களின் கூட்டாளிகள் அவர்களுக்கு விரோதமாக எழும்புவார்கள் ஏதோம் தேசத்தில் ஒன்றுமே மீந்திராது. *"யாக்கோபு வம்சத்தார் அக்கினியும், யோசேப்பு வம்சத்தார் அக்கினி ஜுவாலையுமாயிருப்பார்கள்; ஏசா வம்சத்தாரோ வைக்கோல் துரும்பாயிருப்பார்கள். அவர்கள் இவர்களைக் கொளுத்தி, ஏசாவின் வம்சத்தில் மீதியிராதபடி, இவர்களைப் பட்சிப்பார்கள்"* (18). இந்தத் தீர்க்கதரிசனம் ஒரு வார்த்தை விடாமல் நிறைவேறியது. வரலாற்றுப் பக்கங்களிலிருந்து ஏதோம் தேசம்

மறைந்து போயிற்று. கி.பி. 70ல் ரோமர்களால் அது முற்றிலும் அழிக்கப் பட்டது.

## தியானத்தைச் செயல்படுத்துவது

வேதாகமம் முழுவதிலுமே பக்தியுள்ளவன் பக்தியற்றவனிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுகிறான் (சங்கீதம் 1 :மத்தேயு 7:13-27; 1 கொரிந் தியர் 2:14-16). ஆதியாகமத்தில் வரும் யாக்கோபு, ஏசா பற்றியும், அவர் களின் வரலாறு பற்றி பவுல் தரும் விளக்கவுரையையும் நாம் நான்கு அறிந்திருந்தோமெனில், ஒபதியா உருவகமாகக் கூறும் இந்தக் குறுகிய தீர்க்கதரிசனத்தில் ஆவிக்குரிய மனுஷனை பக்தியற்ற சுபாவ மனுஷ னிலிருந்து வேறு படுத்திக் காட்டுவதை நாம் விளங்கிக் கொள்வது கடி னமில்லை (ஆதியாகமம் 25:29-34; 27; ரோமர் 9:10, 11). யாக்கோபின் வாழ்க்கை ஆவிக்குரிய மனுஷனுக்கு எடுத்துக்காட்டு. ஏனெனில் அவன் தேவனையும், ஆவிக்குரிய காரியங்களையும் ஆசீர்வாதங்களையும் கருத் தாய்த் தேடினான்.

ஆதியாகமத்தில், யாக்கோபு தேவனோடு போராடியபோது அவன் பெயர் இஸ்ரவேல் என மாற்றப்பட்டது. *"இனி உன்பேர் யாக்கோபு எனப் படாமல் இஸ்ரவேல் எனப்படும்; தேவனோடும்; மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே"* (ஆதியாகமம் 32:28). ஏசாவோ, பக்தியற்ற சுபாவ முள்ள மனுஷனாகக் காட்சியளிக்கிறான். ஒரு கோப்பைக் கூழுக்காகத் தன் சேஷ்ட புத்திர பாகத்தை (மூத்தமகனுக்கான சுதந்திரம்) ஏசா விற் றுப் போட்டு தன் முதிர்ச்சியற்ற தன்மையையும் தவறான ஆவிக்குரிய முன்னுரிமைகளையும் வெளிப்படுத்தினான். ஏசா விலை மதித்த காரி யங்களும், அவன் வாழ்க்கை முறையும், தேவனுடைய மக்களுக்குப் பகையாக, ஆவிக்குரிய காரியங்களுக்கும் தேவனுடைய நோக்கங்க ளுக்கு எதிராக செயல்படும் ஏதோம் தேசம் தோன்றுவதற்குக் காரண மாயிற்று என்பதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

நாம் முதன் முதலில் யாக்கோபு, ஏசாவை ஒன்றாகச் சேர்ந்து அவர் கள் தாய் ரெபேக்காவின் வயிற்றிலிருக்கும்போது சந்திக்கிறோம். தியான பாடமாக இதைச் சொல்லவேண்டுமெனில், இன்று நம் ஒவ்வொருவருக் குள்ளும் ஏசா, யாக்கோபு - இருவருமே இருக்கிறார்கள்.

இந்த இரு உள்ளார்ந்த ஆற்றல்களையும், கலாத்தியருக்கு எழுதும் நிருபத்தில் மிக அருமையாகப் பவுலடியார் கையாள்கிறார். ஆவியும் மாம்சமும் ஒன்றுக்கொன்று எதிராயிருக்கிறபடியினால், ஒன்றோடொன்று போராடுகிறதென்று அவர் எழுதுகிறார். பவுல் மாம்சம் என்று சொல்லும் போது தேவன் நமது மனித சுபாவத்தைத் தான் குறிப்பிடுகிறார். யாக் கோபைப் போல் ஆவிக்குரியவர்களாக இருக்க பரிசுத்த ஆவியான வர் ஆற்றல் தருகிறார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்



செய்ய வரும்போது, நமது மாம்சம் அல்லது மனித சுபாவம் நீக்கப்படு வதில்லை. நம்மை ஆவிக்குரியவர்களாக ஆக்க தீர்மானித்துள்ள ஒரு வர் நம் மாம்சத்தோடே சேர்க்கப்பட்டிருக்கிறார். இது அந்த இரு உள் ளார்ந்த ஆற்றல்கள் பற்றிக் (யாக்கோபு, ஏசாவை) குறிக்கிறது. தீரமிக்க ஒபதியாவின் தீர்க்கதரிசனம் நம்முன் இந்தக் கேள்வியை வைக்கிறது. எந்த உள்ளார்ந்த ஆற்றலை நாம் வளர்க்கப் போகிறோம்?

அத்தியாயம் ஐந்து

# யோனாவின் தீர்க்கதரிசனம்

தன் விரோதிகளுக்கு மனந்திரும்புதலையும் இரட்சிப்பையும் பிர சங்கிக்கும்படி தேவனால் அழைக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி யோனாவின் புத்தகம் கூறுகிறது. தேவனுடைய அழைப்புக்கு அவன் செவி கொடுத்தால், அவனுடைய பகைவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று அவனுக்குத் தெரியும். நிபந்தனையற்ற தேவனுடைய அன்பைப் பற்றி யோனா நன்றாக அறிந்திருந்ததினால் அவனுக்கு நினிவேக்குப் போகவிருப்பமில்லை. அங்கு போக விரும்பாததால் தேவனிடம் வர வும் விருப்பமில்லை. அதற்குப் பதில் அவன் தேவனை விட்டு ஓட முயன்றான். எதிர்த் திசையில் செல்வதற்கிருந்த ஒரு கப்பலில் ஏறி, அந் தக் காலத்தில் மனிதன் எந்த தூரத்திற்குப் பயணிக்க முடியுமோ, நினி வேயிலிருந்து அவ்வளவு தொலைவிற்குப் போக முயன்றான் (1:3; 4:2,3).

பண்டைய யூதர்களுடைய பெரிய எதிரிகளின் தலைநகரம் நினி வே. புராதன வரலாற்றில் அசீரியர்களின் மிருகத்தனமான கொடுமைக்கு ஈடு இணை எதுவுமில்லை. யோனாவோ அவன் குடும்பத்தினரோ அந் தக் கொடுமைக்கு ஆளாகியிருந்திருக்கலாம். நினிவே பட்டணத்தில் வாழ்ந்த மக்களை வெறுப்பதற்கு, அவனுக்குப் போதுமான காரணங் கள் இருந்திருக்க வேண்டும். சரியான வரலாற்றுக் காட்சியைப் பெற, 1940களில் தேவன் ஒரு யூதனை ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகருக்கு போகக் கட்டளை கொடுப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். உலகி லுள்ள யூதர்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் கொல்வதற்கு அங்கு தான் திட்டமிடப் பட்டது. அங்கு போய் அந்த ஜெர்மானியர்கள் தங்கள் பாவத்திற்காக மனந்திரும்பாவிடில் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு பட்டணத்தின் மேல் வரும் என அந்த யூதன் பிரசங்கிக்க வேண்டும் என்பதை கற்பனை பண்ணிப் பாருங்கள். அந்த யூதன் தனக்குக் கொடுக் கப்பட்ட வேலையைச் செய்யாமல் ஓடியிருக்க மாட்டானா?



## யோனா போகப் போகிறதுமில்லை, வரப்போகிறதுமில்லை (அதிகாரம் 1)

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும், பக்தியுள்ளோரும் தேவனுட னான தங்கள் உறவில், பொதுவாக ஒரு குறிப்பிட்ட மாதிரியைப் பின்பற் றினார்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் ஊழியத்தைப் பற்றி நாம் கவனித்த போது, இந்த மாதிரியைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். தேவனிடத்தில் வருவதிலே அவர்கள் அர்த்தமுள்ள அநுபவங்களைப் பெற்றிருந்தார் கள்; தேவனுக்காகச் செல்வதிலே அவர்கள் அநுபவங்கள் கனியுள்ள வையாயிருந்தன. யோனா கடவுளுடன் கொண்டிருந்த தொடர்போ இந்த மாதிரிக்கு, நேர் எதிராக இருந்தது.

யோனாவின் இந்த சிறிய தீர்க்கதரிசனப் புத்தகத்தின் முதல் அதி காரத்தில், நினிவேக்குப் போகும்படியாக தேவன் யோனாவுக்குக் கட்ட ளையிட்டபோது அவன் போக மறுத்தான் என வாசிக்கிறோம். நினி வேக்குப் போக அவனுக்கு சிறிதும் பிடிக்கவில்லை எனத் தீர்மானித்த பிறகு, தேவனிடம் வருவது, தேவனுக்காகப் போவது என்ற இரண்டு விஷயங்களையுமே அவன் விசுவாசித்தான் என்பதைக் காட்டுகிறான். தேவனிடம் வருவது பற்றி அவனுக்கு நல்ல அனுபவமிருந்ததால் தான், தேவனுக்காக நினிவே செல்லும் கட்டளை பெற்றான் என்று யோனா அறிந்திருந்தான். அவனால் அப்படிச் செய்ய முடியாததாலும், செய்ய விருப்பமில்லாததாலும் அவன் நினிவேக்குப் போகவேண்டாம் எனத் தீர்மானித்தான். அதன்படி அவன் தேவனிடமும் வரவில்லை.

யோனா கப்பலேறியபோது, தேவனிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்வதற்காகக் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப் போய்ப் படுத்துக் கொண்டு, அயர்ந்த நித்திரை பண்ணினான் (1:5). கப்பல் அமிழத்தக்க விதமாய்க் கர்த்தர் பெருங்காற்றை வரவிட்டார் என்று வாசிக்கிறோம். கப்பற்காரர் பயந்து அவனவன் தன் தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்தபோது, யோனாவோ தன்னுடைய பிரச்சினைகளிலிருந்து தப்பி யோட முயன்று, தூங்கிக் கொண்டிருந்தான். நினிவேயினின்று, தேவனி டமிருந்து அவனுடைய பிரச்சினைகளிலிருந்து யோனா தப்பியோட முயன் றுகொண்டிருந்தான்.

புயலின் மத்தியில் தூங்கிக் கொண்டிருந்த யோனாவைக் கப்பலின் மாலுமி விசாரித்தபொழுது, அவனுடைய தேவன் தான் கடலைப் படைத் தவர் என்றும், அவனுடைய தேவன் அவன்மேல் கோபமாயிருக்கிறா ரென்றும் ஒப்புக்கொண்டான். நினிவேக்குப் போக அவர் யோனாவுக் குக் கட்டளை கொடுத்திருந்தும், அவன் போக மறுத்ததால் அவர் புயலை அனுப்பியுள்ளார் என்றும் கூறினான் (9–10), மேலும் மாலுமியிடம், *"தேவ னுடைய உக்கிர கோபத்தைத் தணிக்க ஒரே வழி என்னைக் கடலில்*

*தூக்கி எறிவது தான்"* என்றான். கடைசியில், மனமில்லாமல் அவன் சொன்னபடி செய்தார்கள் (15). உடனே கொந்தளித்துக் கொண்டிருந்த கடல் அமைதியாயிற்று.

விக்கிரக வணக்கத்தாரான மாலுமிகளை அந்த அமைதியான கடல் விசுவாசிகளாக்கியது. தேவனை விட்டும், தேவன் செய்யச் சொன்ன பணியை விட்டும் யோனா தப்பியோடிய போதும் கூட அந்தக் கப்பலிலுள்ள மாலுமிகளுக்கு விசுவாசம் வர தேவன் யோனாவைப் பயன்படுத்தினார். *"அப்பொழுது அந்த மனுஷர் கர்த்தருக்கு மிகவும் பயந்து, கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினார்கள்"* (1:16) என வாசிக்கிறோம். யோனாவை விழுங்கும்படிக் கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார் எனவும் வாசிக்கிறோம். அவன் அந்த மீன் வயிற்றிலே இராப்பகல் மூன்றுநாள் இருந்தான். யோனா இந்தப் பெரிய மீனைத் திமிங்கலம் என்று அழைக்கவில்லை. இந்த முரட்டாட்டமான தீர்க்கதரிசிக்கு தேவனின் அற்புதமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு ஏற்பாடு இந்தப் பெரிய மீன்.

## யோனா தேவனிடம் வருகிறான் (அதிகாரம் 2)

தேவன் ஒருபோதும் நம்மை நாமாகச் செயல்பட விடுகிறதில்லை என்ற ஒரு எண்ணத்தைத் தந்தாலும், நமக்கு முன் இருக்கும் தீர்மானங்களை எடுக்க, சுதந்திரமாக சித்தத்தைப் பிரயோகிக்க தேவன் அனுமதிக்கிறார் என்று யோனாவின் புத்தகம் நமக்குப் போதிக்கிறது. அவருடைய சித்தமே நாம் செய்யக்கூடிய ஒரே சரியான, பகுத்தறிவுக்கொத்த காரியம் என்பதை நாம் தீர்மானிக்கும் வரை, அவர் ஒரு யானை போன்று நம்மீது, சந்தர்ப்ப சூழ்நிலைகள் மூலம் சாய்கிறார். இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் முதல் அதிகாரத்தின் மீது "நான் மாட்டேன்" என்று எழுதலாம். ஆனால் இரண்டாவது அதிகாரத்தின் மீது "நான் செய்வேன்" என்று எழுதலாம்.

தேவனுடைய அழைப்பை விட்டு ஓடியதற்காக மனந்திரும்புதலுக்குள் யோனாவைக் கொண்டு வர ஒரு பெரிய மீனின் வயிற்றுக்குள் மூன்று நாள் அவன் இருக்க வேண்டியிருந்தது. மனந்திரும்புதல் என்றால் "மறுபடியும் யோசிப்பது", அல்லது "மன மாற்றம், இருதய மாற்றம், சித்தத்தில் மாற்றம், வழியில் மாற்றம்." இரண்டாவது அதிகாரத்தின் முக்கியத்துவம் என்னவெனில், அந்தப் பெரிய மீனின் வயிற்றில் யோனா மெய்யாகவே மூன்று நாள் இருந்த பின் மனந்திரும்பினான். அந்த மீனின் வயிற்றிலிருந்த யோனா ஜெபித்தான். அந்த பயங்கரமான இடத்தில் ஒவ்வொரு வசனத்தையும் நினைவுக்குக் கொண்டு வந்தான். அவனுடைய ஜெபத்தில் யோபு, புலம்பல், 1 சாமுவேல், எரேமியா, 1 இராஜாக்கள் - இவைகளிலிருந்து அறுபதுக்கும் மேற்பட்ட வசனங்களை



மேற்கோளாகக் கூறினான். அதாவது அவன் மனம் வேத வசனத்தால் நிறைந்திருந்தது. அவன் நினைவுக்கு வந்த ஒவ்வொரு பாட்டையும், பெரிய மீனின் வயிற்றிலிருந்தபோது பாடினான்.

வேதாகம அடிப்படையிலான இந்த ஜெபத்தின் முக்கியமான காரியம் என்னவெனில் அவன் மனந்திரும்பினான். "நான் போகமாட்டேன்" என்று சொன்னதிலிருந்து யோனா "நான் போகிறேன்" என மூன்று முறை சொல்லும் நிலைக்கு வந்தான். அவன் தேவனிடம் "உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் (4); "நானோவெனில் ... உமக்குப் பலியிடுவேன்" (9) "நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்" (9) என்று கூறினான். யோனாவின் மனந்திரும்புதலின் விளைவாகக் "கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார்; அது யோனாவைக் கரையிலே கக்கி விட்டது".

## யோனா தேவனுக்காகப் போகிறான் (அதிகாரம் 3)

"இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி"(1) என மூன்றாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். தேவனுடைய பொறுமையான குணத்தால், யோனா தேவனுடைய அழைப்பை இரண்டாவது முறையாகக் கேட்டான் - அழைப்பு மாறவில்லை; *"நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி"* (2) என்றார்.

இந்தத் தடவை, விலகி ஓடிப்போவதற்குப் பதிலாக, யோனா அழைப்புக்கும் கீழ்ப்படிந்து நினிவேக்குப் போனான். தேவனுடைய நியாயத் தீர்ப்பின் செய்தியை பிரசங்கித்து அறிவித்தான் - *"இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்,"* என்று கூறினான். முழு நகரமும் - இராஜாவும் கூட மனம் மாறி தேவனை விசுவாசித்தார்கள் (5,6). நகரம் மனந் திரும்பியதால் *"தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்"* (10). கடைசியில் யோனா "நான் போவேன்" என்று சொன்னதன் விளைவு தேவன் - மனிதன் சார்ந்த வரலாற்றிலேயே மாபெரும் சுவிசேஷ எழுப்புதல் கூட்டம் நடந்தது.

## யோனா வந்து, தேவனுக்காகச் செல்கிறான் (அதிகாரம் 4)

யோனாவின் புத்தகத்திலுள்ள செய்தியின் மையக் கருத்து நாலாம் அதிகாரத்திலுள்ளது. இவ்வதிகாரத்தில் நினிவேயின் மனந்திரும்புதலுக்கு யோனா எவ்விதம் நடந்து கொண்டான் என்று பார்க்கிறோம். ஒரு முழுப் பட்டணமுமே தேவனிடம் திரும்பியது குறித்து, தேவனுடைய தீர்க்கதரிசியாக, யோனா சந்தோஷப்பட்டிருப்பான் என்று நமக்கு நினைக்கத் தோன்றினாலும், அவன் அதில் சந்தோஷப்படவில்லை. தேவன் நினிவேயின் மக்களை இரட்சிப்பதைப் பார்ப்பதைக் காட்டிலும், செத்துப்

போவதையே விரும்புமளவிற்கு அவன் அதிகக் கோபமாயிருந்தான் – அதை அவன் தேவனிடமே கூறுகிறான்! தேவனைத் துதிப்பதற்குப் பதி லாக, *“ஆ கர்த்தாவே நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும், மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவ னென்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னை விட்டு எடுத்துக் கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்”* (2, 3) என்று தேவனிடம் கூறினான். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் *“நீர் இந்த ஜனங்களை இரட்சிப்பதைப் பார்க்கிறதை விட, நான் செத்துப் போவதை விரும்புகிறேன்”.* என்று சொல்லலாம்.

## தவறான அபிப்ராயம் கொண்ட தீர்க்கதரிசி

யோனாவின் தவறு தான் என்ன? யோனா நினிவேயின் மக்களைப் பகைத்தான் என்பது தான் இவ்வினாவிற்கு விடை. அசீரிய உலக சாம் ராஜ்யத்தில் அவன் கண்ட அற்புதத்திற்காக தேவனைத் துதிக்காதபடி செய்தது அவனது தீய எண்ணம் (மனது) தான். இது, நாலாம் அதிகாரத் தின் ஆரம்பத்தில் அவன் அறிக்கையிடுவதிலேயே வெளிப்படுகிறது. அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிரசங்கித்தால், அன்பான தேவன் நினிவே பட்டணத்தை இரட்சிப்பார் என்று அவன் அறிந்திருந்ததனால் தான், தேவனை விட்டும் அவருடைய வேலையை விட்டும் அவன் ஓடியதை அறிக்கையிடுகிறான்.

யோனாவின் கோபத்திற்குப் பதில் தரும் விதமாக, தேவன் யோனா வுக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்தார். தேவன் அவனுடைய பகை வர்களைக் காப்பாற்றினாரென்று யோனா, கோபத்தில் நினிவேக்கு எதி ரிலுள்ள ஒரு குன்றின் மீது ஒரு கூரையைப் போட்டான். தேவன் இந்தப் பொல்லாத பட்டணத்தை அழித்துப் போடுவாரென அப்போதும் நம் பிக் கொண்டிருந்தான். அதிக வெப்பமான வெயில் யோனாவை வாட்டி யெடுத்தது. கூரைக்கு மேல் ஒரு பெரிய இலை படருமாற் போல் தேவன் செய்தார். அது யோனாவுக்கு வெயிலினின்று நிழல் தந்தது. இது யோனா வுக்கு மிகவும் சந்தோஷத்தைத் தந்தது. ஆனால் அந்தச் செடியின் வேர்களை அழிக்க ஒரு பூச்சியை அனுப்பினார். பூச்சி, இலையை அழித் துப் போட்டதினால், யோனா மற்றுமொரு முறை கோபத்தில் கொந்த ளித்தான்.

அப்பொழுது தேவன், *“நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோன துமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே, வலது கைக்கும் இடது*



*கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகர மாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலேயிருப்பேனா?”* (4:10, 11) என யோனாவிடம் கூறினார். தங்கள் செயல்களுக்குப் பொறுப்பாக முடியாத, கணக்குக் காட்ட முடியாத வயதிலுள்ள நினிவேயின் குழந் தைகளை ‘மனுஷர்’ எனக் குறிப்பிடுவதாக அறிஞர்கள் நம்புகிறார்கள். இங்கே முக்கியமான சத்தியம் என்னவென்றால் மனதிலே வேற்று எண்ணம் கொண்ட ஒரு தீர்க்கதரிசி மதிப்புகளையும் முன்னுரிமைக ளையும் தேவன், எந்த அளவுக்கு சரி என கேள்வி கேட்கிறார்.

## தடைகள்

ஒரு தீர்க்கதரிசியின் வேலைகளில் ஒன்று, உலகில் தேவனுடைய கிரியையைத் தடை செய்யும் பிரச்சினைகளை நீக்குவது என பார்த்தோம். யோனாவின் புத்தகத்தில் நினிவேயில் செய்ய விரும்பிய அற்புதமான கிரியையைத் தடை செய்தது யோனா தீர்க்கதரிசியின் தவறான எண்ணம் தான்.

ஓசியாவில் நாம் பார்த்தபடி, தேவனுடைய அன்பு நிபந்தனையற் றது; நேசிக்கப்படுவரின் சரியான அல்லது தவறான செயல்பாட்டைப் பொறுத்ததல்ல அந்த அன்பு. தேவன் ஒரு ஜனத்தை நேசித்து, அதே மக்களை தீர்க்கதரிசி பகைத்தால் அவர்களுக்குத் தம் அன்பை அறி விக்க, தேவன் எப்படி அந்த தீர்க்கதரிசியைப் பயன்படுத்த முடியும்?

## தனி நபருக்கு வாழ்க்கைப் பாடம்

உன்னை இந்தக் கதையில் பார்க்கிறாயா? உன் வாழ்க்கையில் தேவன் கொண்டுள்ள அழைப்பை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறாயா? அவருக் குக் கீழ்ப்படிய உன்னை இணங்கவைப்பதற்காக, தேவன் எதை அனுப்ப வேண்டும்? தீர்க்கதரிசி யோனாவின் வாழ்க்கையிலிருந்து – நினிவேக் குப் போக விரும்பாத, தேவனிடமும் வர விரும்பாத தீர்க்கதரிசியிடமி ருந்து பின்வரும் பாடத்தைக் கற்றுக் கொள். நம் வாழ்க்கையில் நடை பெறும் சம்பவங்களைப் பயன்படுத்தி நம்மை அவருடைய சித்தத்திற் குள் வழிநடத்துகிறார் – அவரைப் பின்பற்ற நாம் மனதில்லாதிருக்கும் போது கூட இந்தச் சின்ன தீர்க்கதரிசனப் புத்தகத்தில் தேவன் நமக்கு அருளுவது பற்றி நிறைய குறிப்புகள் உள்ளன. கர்த்தர் பெருங்காற்றை வரவிட்டார், ஒரு பெரிய மீனை ஆயத்தம் பண்ணினார்; இலையை வள ரவிட்டார், பூச்சியை அனுப்பினார். தேவனுடைய கிருபை உன் வாழ்க் கைச் சம்பவங்களில் கிரியை செய்வதைக் காண்கிறாயா?

இந்தத் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் விசேஷம் என்னவெனில், யோனாவை அதிக புத்தியற்றவனாகக் காட்டும் இந்தப் புத்தகத்தை

யோனாவே எழுதியிருக்கிறான். தேவனுடைய தீர்க்கதரிசியாக, தன் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் நடந்த முக்கியமானதொரு அத்தியாயத்தை எழுதுகிறான். நினிவே பட்டணத்தில், பொல்லாத பாவிகளின் மேல் தேவன் கொண்ட நிபந்தனையற்ற அன்பைப் பற்றியும், அந்த அன்பை வெளிப்படுத்த முடியாதபடி தடைசெய்த அவன் இருதயத்திலிருந்த தவறான எண்ணத்தைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறான்.

யோனாவின் பெயரைத் தாங்கிய இந்தச் சின்ன புத்தகத்தில், யோனா தனது உண்மையான அறிக்கையை இவ்வாறு பகிர்ந்து கொள்கிறான். “நான் நினிவேயிலிருந்தபொழுது எனக்கு தேவனுடைய அன்பு (agape) இருக்கவில்லை. ஆனால் தேவனுக்கு அந்த அன்பு இருந்தது. ஆகவே அவர் என்னோடு இருந்தார். நினிவேயின் பொல்லாத மக்களை என்னால் நேசிக்க முடியவில்லை என்று கண்டேன். ஆனால் தேவனால் அவர்களை நேசிக்க முடிந்தது. தேவன் என்னோடிருந்தார். நான் நினிவேயின் பொல்லாத மக்களை நேசிக்க விரும்பவில்லை; ஆனால் தேவன் அவர்களை நேசிக்க விரும்பினார். தேவன் என் மூலமாய் அவர்களை நேசித்தார். ஏனெனில் அவர் என்னோடு இருந்தார்” என்று யோனா அறிக்கையிட்டார். சில தேவபக்தியற்ற, நேசிக்கத்தகாத பொல்லாத பாவிகளை தேவன் நேசிக்க விரும்புவது சாத்தியமா? உன்னால் உன்னுடைய வேறுபட்ட மனநிலையும், அந்த மக்களை நீ அதிகமாக வெறுப்பதும் தான், அந்த மக்களோடு தேவன் பகிர்ந்து கொள்ள விரும்பும் அன்புக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதா? வேறுபட்ட மனநிலை கொண்ட ஒரு தீர்க்கதரிசியின் திறந்த, நேர்மையான அறிக்கையில் உன்னைப் பார்க்க முடிகிறதா?



## அத்தியாயம் ஆறு

# மீகாவின் தீர்க்கதரிசனம்

மீகாவின் புத்தகத்தில், மீகாவின் மூன்று பெரிய தீர்க்கதரிசனங்கள் உள்ளன. இவர் விவசாயம் பெருகிய கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆனால் சமாரியாவின் தலைநகரங்களிலும் எருசலேமிலும் பிரசங்கிக்கும்படியாகவும், வடதிசை, தென்திசை இராஜ்ஜியங்களின் தலைநகரங்களிலுள்ள அரசியல் மற்றும் பக்திமார்க்கத் தலைவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைச் சொல்லவும் அவர் தேவனால் அழைக்கப்பட்டார். இரு இராஜ்ஜியங்களிலுள்ள தேவனுடைய மக்களின் சன்மார்க்க மற்றும் ஆவிக்குரிய சீர்கேட்டுக்கு, ஆவிக்குரிய மற்றும் அரசியல் தலைவர்களே காரணம் என மற்ற தீர்க்கதரிசிகளைப் போலவே இவரும் குற்றஞ் சாட்டினார்.

### மீகாவின் முதல் பிரசங்கம் 1:3-5

மீகாவின் மூன்று பிரசங்கங்களில் முதல் பிரசங்கம் பூமியிலுள்ள அனைத்து மக்களுக்கும் கொடுக்கப்பட்டதாகும். அவர்கள் வடதிசை, தென்திசை இராஜ்ஜியங்களான இஸ்ரவேல் யூதாவுக்குக் கிடைக்கப் போகும் கசையடிகளைப் பார்க்கும்படியாகவும் அழைக்கப்பட்டனர். தேவனுடைய மக்கள் அவருடைய வழிகளில் நடவாமலிருப்பதையே தெரிந்து கொண்டபடியினால் எதிர்காலத்தில் அவர்களைத் தண்டிக்கத் திட்டமிட்டிருந்தார். *“நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன்; அதினின்று நீங்கள் கழுத்தை நீக்க மாட்டீர்கள்; நீங்கள் மேட்டிமையாய் நடப்பதில்லை; அது தீமையான காலம்”* (2:3). இந்த வசனம் பாபிலோனிய, அசீரிய வெற்றிகள் மற்றும் சிறையிருப்புகளைக் குறிப்பதைப் போலிருக்கிறது. இந்தச் சிறையிருப்புகளின் மூலமாக தேவன் இஸ்ரவேலையும் யூதாவையும் தண்டிப்பார். இந்தத் தண்டனை, பொல்லாப்பை அவர் சகிக்க மாட்டாத தன்மையையும், தமது முரட்டாட்டமுள்ள பிள்ளைகளின் தகப்பனாக அவருடைய

அன்பையும் காட்டுவதினால் அவருடைய பரிசுத்தத்தின் வெளிப்பாடு ஆகும்.

தேவன் தெரிந்து கொண்ட மக்களின் விக்ரகாராதனை, ஒழுக்கக் கேடு, ஆவிக்குரிய வீழ்ச்சி இவைகளுக்காக தேவன் தம்மக்களைத் தண்டிப்பதன் மூலம் அவர் நடக்கையில் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார் என்பதை உலகுக்குக் காட்ட விரும்புகிறார். தமது முதல் பிரசங்கத்தின் முடிவில் *"யாக்கோபின் ஜனங்களே, உங்களெல்லாரையும் நான் நிச்சய மாய்க் கூட்டுவேன், இஸ்ரவேலில் மீதியானவர்களை நிச்சயமாய்ச் சேர்ப்பேன்"* (2:12) என்று தேவனுடைய மகிமை அவருடைய மக்கள் கடைசியில் கூட்டிச் சேர்ப்பதில் வெளிப்படுத்தப்படும், என மீகா பிரசங்கித்தார்.

## மீகாவின் இரண்டாவது பிரசங்கம் 3:1-5:15

மீகாவின் இரண்டாவது பிரசங்கம் மூன்று நிலைகளிலுள்ள ஆட்சி யாளர்களான ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் அரசியல் தலைவர் களுக்குச் செய்யப்பட்டது. ஒரு ஆசாரியனின் தலையாய கடமை போதிப் பது, ஒரு தீர்க்கதரிசியின் முதல் வேலை, மக்கள் கீழ்ப்படியும்படி அவர் களுக்குப் புத்தி சொல்வது; ஒரு அதிபதியின் முதல் வேலை, தேவனு டைய பிரமாணங்களைச் செயல்படுத்துவது. மீகாவின் நாட்களில் இந்த மூன்று நிலைகளிலும் இருந்த சீர்கேடு தேவனுடைய கிரியையைத் தடுத் துக் கொண்டிருந்தது. இதுவே பிரச்சினையாயிருந்தது.

தேவன் அருளிய ஒழுக்க நெறிக்கான பிரமாணத்தை மக்களுக்குப் போதித்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக, ஆசாரியர்கள் *"கூலிக்கு உப தேசிப்பதைத்"* (3:11) தெரிந்து கொண்டார்கள். ஆசாரியர்களாய் இருக்க வேண்டிய அழைப்பை ஒரு தொழிலாக மாற்றிக் கொண்டார்கள். அவர் களின் முழு நோக்கமும் கருத்தும் அவர்கள் சம்பாதிக்கும் பணத்தைப் பற்றியதாகவே இருந்தது. ஆசாரியத்துவம், பக்திமார்க்கத்துக்கு அப் பாற்பட்டு செயல்படுவதைக் கண்ட மீகா பாதிக்கப்பட்டார். கூலிக்கு அவர்கள் உபதேசித்தது அவர்களை நம்பிக்கையைக் கைவிடச்செய்து தொழில் செய்பவர்களாக மாற்றியது.

அதேபோல், தீர்க்கதரிசியாக இருக்க அவர்கள் பெற்ற தேவனு டைய அழைப்பை, தீர்க்கதரிசிகள் விட்டுவிட்டு *"பணத்துக்குக் குறி சொல்வதைத்"* தெரிந்து கொண்டார்கள் (11). அவர்கள் தீர்க்கதரிசியாக பெற்ற அழைப்பைத் தொழிலாக மாற்றியதுமட்டுமல்லாமல் குறி சொல் லும் தொழிலாகவும் மாற்றிவிட்டார்கள். தீர்க்கதரிசன வெளிப்பாடுகளுக் குப் பதிலாக, தங்கள் சொந்த சொப்பனங்களையே பிரசங்கித்துக் கொண் டிருந்தார்கள். தாங்கள் தீர்க்கதரிசிகள் என்ற பதவி மற்றும் பெயரைப் பணம் சம்பாதிக்கப் பயன்படுத்திக் கொண்டார்கள். குறைவாகப் பணம்



கொடுக்கப்பட்டால் மக்களின் மீது பயங்கரமான நியாயத்தீர்ப்புகள் வருமென்றும், அதிகப் பணம் கொடுப்பவர்கள் கொடுத்தவர்கள் வாழ்க்கையில் நல்லவை நிகழுமென்றும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

நாட்டின் தலைவர்களும் கெட்டுப் போய் *"பரிதானத்துக்கு நியா யந்தீர்ப்பதைத்"* தெரிந்து கொண்டார்கள் (11). தங்களுக்குக் கொடுக்கப் பட்ட பணத்தின் அடிப்படையிலே, தங்களுக்குப் பணம் கொடுத்தவர்க ளுக்கு சாதகமாக அல்லது பாதகமாக தீர்ப்பு வழங்கினார்கள். அரசியல் தலைவர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் ஊழல்கள் உலகமெங்கும், எப் போதும், இன்றும் கூட பரவலாக இருந்து வருகிறது.

மீகாவின் பிரதான கவலையெல்லாம், ஆசாரியர்கள் கூலிக்கு உப தேசித்ததனால், மக்கள் குழப்பமடைகிறார்களே என்பது தான், ஏனென் றால் அங்கே தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளும் வாய்ப் பில்லை. தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறி சொல்லும்போது தேவனு டைய மக்கள் தேவசத்தத்தைக் கேட்காமலிருக்கிறார்கள். தலைவர்கள் ஊழல்மன்னர்களாக இருக்கும்போது, மக்கள் ஏமாற்றமடைந்து, அரசாங் கம், சட்டம் மற்றும் ஒழுங்கின் மீது நம்பிக்கையற்றுப் போய் விடுகிறார் கள். அரசாங்கம் நடத்தும் பொறுப்பை தேவன் மக்களுக்குக் கொடுத் திருக்கிறார். ஆனால் அதில் செயல்படுவதற்குப் பொறுப்பாயுள்ளவர் கள், அவர்கள் தேவன் கொண்டுள்ள திட்டத்தோடு சிறிதும் பிசகாமல் இசைந்திருந்தால் மட்டுமே, தேவனால் நியமிக்கப்பட்ட செயலை ஆற்ற முடியும். இந்த மூன்று நிலைத் தலைவர்களும் ஆசாரியர், தீர்க்கதரிசி, அரசாங்கத்தலைவர் ஊழல் செய்பவர்களாயின் அரசாங்கத்திற்கென தேவன் கொண்டுள்ள நோக்கங்கள் ஒன்றுமில்லாமல் போகும். மீகா வின் நாட்களிலிருந்த ஆவிக்குரிய, மற்றும் அரசியல் தலைவர்கள் தேவ னுடைய நோக்கங்களோடு ஒத்திசைந்து போகாதவர்களாயிருந்ததால், மீகா தேசத்தின் ஆவிக்குரிய மற்றும் ஒழுக்க நெறிகளின் சீரழிவுக்கு அவர்கள் மேல் குற்றம் சாட்டினார்.

## தேவனுடைய முடிவான தீர்வு

இஸ்ரவேல் மற்றும் யூதா ராஜ்யங்களின் அரசுகள் சீர்கெட்டுப் போனதைப் பலமாக எடுத்துக் கூறிய பின், தேவனுடைய மக்களுக்கும் உலகின் எல்லா தேசத்தாருக்கும், மேசியா பற்றிய தீர்க்கதரிசனம் மூல மாக நம்பிக்கையூட்டும் ஒரு செய்தியை மீகா பிரசங்கித்தார். *"அவர் நின்று கொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்; ஆகையால் அவர்கள் நிலைத்திருப்பார்கள்; அவர் இனிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார். இவரே சமாதான காரணர்"* (5:4-5).

எருசலேமிலும் சமாரியாவிலும் மனித அரசு தோற்றுப்போன அதே இடத்தில் கிறிஸ்துவின் முடிவான அதிகாரம் தோற்றுப் போகாது, அவர் தமது மக்களுக்கு மெய்யான சமாதானத்தைக் கொண்டு வருவார். அவரே தீர்க்கதரிசி, ஆசாரியன், அரசன் என்பவர்களின் குறையற்ற பரிபூரண எடுத்துக்காட்டாயிருப்பார். மீகாவின் இரண்டாம் பிரசங்கத்தின் முடிவில் கிறிஸ்துவை மிகச் சிறந்த பரிபூரண அரசனாகக் காட்டுகிறார். இறப்பு அல்லது அழிவை ஒருபோதும் காணாத ஒரு புதிய இராஜ்ஜியத்தை அவர் கொண்டு வருவார். இதனால் தான், கிறிஸ்து பூமிக்கு வந்தபோது, சீஷர்கள் அவரிடம் அடிக்கடி எப்போது தமது பரிபூரண, என்றென்றும் நிலைத்து நிற்கும் இராஜ்யத்தை நிர்மாணிப்பார் எனக் கேட்டார்கள் (அப்போஸ்தலர் 1:6).

### மீகாவின் மூன்றாவது பிரசங்கம் (அதிகாரங்கள் 6,7)

மீகாவின் மூன்றாவது பிரசங்கத்தில், தேவனுக்கும் மனிதனுக்கும் நீதி மன்றத்தில் வழக்கு இருப்பது போல உருவகப்படுத்திப் பேசுகிறார். *“கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள்; நீ எழுந்து, பர்வதங்களுக்கு முன் உன் வழக்கைச் சொல்; மலைகள் உன் சத்தத்தைக் கேட்கக்கடவது. பர்வதங்களே, பூமியின் உறுதியான அஸ்திவாரங்களே, கர்த்தருடைய வழக்கைக் கேளுங்கள்; கர்த்தருக்கு அவர் ஜனத்தோடே வழக்கு இருக்கிறது; இஸ்ரவேலோடே அவர் வழக்காடுவார்”* (6:1-2) எனப் பிரசங்கிக்கிறார்.

இஸ்ரவேலுக்கு விரோதமான தேவனுடைய வழக்கை மீகா முன் வைக்கும்போது, இஸ்ரவேலின் தேவன் தாம் அன்பு வைத்து அவர்களை எகிப்திலிருந்து வரப்பண்ணி, மோசே, ஆரோன் மீரியாம் என்பவர்களை இஸ்ரவேலுக்கு முன்பாக அனுப்பியதை இஸ்ரவேலுக்கு நினைவூட்டுகிறார்.

தேவனுடைய நன்மைக்குப் பதிலீடாக இஸ்ரவேல் மக்கள் வேறு தேவர்களை நாடி, தங்கள் சொந்த, தன்னலமான விருப்பங்களை நிறைவேற்றியதால், மீகா தேவனுடைய நீதி மன்றத்தின் முன் மனிதனின் பரிதாப நிலையை முன்வைக்கிறார். *“என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்து கொள்வேன்? தகன பலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமா?”* (6:6-7). இந்த மாபெரும் நீதிமன்ற வழக்கில் மீகா முன் வைக்கும் குற்றச்சாட்டு அவர் செய்தியைக் கேட்பவர்களை, பிரசங்கத்தின் முடிவுக்கு



ஆயத்தப்படுத்தியது. *“மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்”* (8).

மக்களுக்கு விரோதமாக தேவனுடைய குற்றச்சாட்டுகளை வைத்த பின், அவரை திருப்திப்படுத்த அவர்கள் என்ன செய்யவேண்டுமென கேள்வியும் கேட்ட பின், மனிதன் தன் பாவங்களைப் போக்க எதுவுமே செய்யக் கூடாதவன் என தேவன் மீகாவுக்குக் காட்டினார். நொறுங் குண்டு நறுங்குண்ட இருதயத்திற்கு தேவன் அருளும் கிருபையால் மட்டுமே, மனிதனுக்கு அவன் பாவங்களுக்கான மன்னிப்பு அருளப் படுகிறது.

மீகா இன்னொரு தீர்க்கதரிசன வெளிப்பாட்டுடன் தனது மூன்றாவது பிரசங்கத்தை முடித்தார். கடைசி நாட்களில், அவர் இஸ்ரவேலரிடம் *“புறஜாதிகள் கண்டு தங்களுடைய எல்லாப் பராக்கிரமத்தையுங் குறித்து வெட்கப்படுவார்கள்; கையை வாயின்மேல் வைத்துக்கொள்வார்கள்; அவர்கள் காதுகள் செவிடாய்ப் போகும்... நமது தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திகிலோடே சேர்ந்து, உனக்குப் பயப்படுவார்கள்”* (7:16, 17) என்று கூறினார்.

தேசங்களை ஆளப்போகும் தலைவராகிய மேசியாவைப் பற்றிக் காண்கிறோம். மீகா தீர்க்கதரிசனம் சொல்வது போல் இந்த அதிபதி, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட தம் ஜனங்களிடம் இரக்கமுள்ளவராயிருப்பார். *“அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார். தேவரீர் பூர்வ நாட்கள் முதல் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட சத்தியத்தை யாக்கோபுக்கும், கிருபையை ஆபிரகாமுக்கும் கட்டளையிடுவீராக”* (18-20).

மீகாவின் செய்தியின்படி தேவன் மனதுருக்கமும், இரக்கமும், நிபந்தனையற்ற அன்பும் கொண்டவர். அப்படியென்றால் நல்ல கிரியைகள் செய்து தேவனுடைய அன்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. அவர் கிருபையினால் தான் வெற்றியடைய முடியும். அது போலவே ஒரு தவறான செய்கையால் அவர் அன்பை இழக்க முடியாது. தீர்க்கதரிசிகளின் செய்தி நம்பிக்கையளிப்பது; அது தேவனுடைய அன்பையும், கிருபையையும் அடித்தளமாகக்கொண்டது. எனினும் நம் பரலோக தேவனுடைய அன்பும் கிருபையும் அவருடைய நீதியில் சமநிலைப்படுத்தப் பட்டுள்ளது. இந்த நீதியைக் குமாரனின் மரணத்தால் மட்டுமே நிலை நாட்ட முடியும். அப்போது நாம் தேவனுடைய அன்பையும் கிருபையையும் நித்தியமாக அனுபவிப்போம்.

அத்தியாயம் ஏழு

# நாகூமின் தீர்க்கதரிசனம்

## வரலாற்றுத் தொலைநோக்கு

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனப் புத்தகங்களை எழுதிய தீர்க்க தரிசிகள், எருசலேம், சமாரியா, பாபிலோன் மற்றும் நினிவே ஆகிய நான்கு நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்டதைப் பற்றி பதிவு செய்து வைத் துள்ளார்கள். எருசலேமும் சமாரியாவும் தென் திசை மற்றும் வடதிசை இராஜ்ஜியங்களென்னப்பட்ட யூதா, இஸ்ரவேல் இராஜ்யங்களின் தலை நகரங்களாகும். பாபிலோனும் நினிவேயும் அவர்கள் சத்ருக்களின் தலை நகரங்களாகும். நாம் பார்த்தபடி, யோனாவின் பிரசங்கம் நினிவேக்கு மனந்திரும்புதலையும் இரட்சிப்பையும் கொண்டு வந்தது. அதே பட்ட ணத்தின் நியாயத்தீர்ப்பையும் அழிவையும் நாகூமின் தீர்க்கதரிசனம் பறை சாற்றி அறிவிக்கிறது. வரலாற்றின்படி யோனாவுக்குப் பின் ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்குப் பின் நாகூம் வருகிறார்.

இஸ்ரவேலின் மகா கொடுமையான பகைவர்களின் மனந்திரும்பு தலைப் பற்றி யோனாவின் புத்தகத்தில் காண்கிறோம். யோனாவின் வல்லமையான பிரசங்கத்தின் பலனாக நினிவே மனந்திரும்பிய அறுபது ஆண்டுகளுக்கு அப்புறம், அசீரியர்கள் இஸ்ரவேலரின் வடதிசை இராஜ்ஜியத்தை வெற்றி கொண்டு அந்த இஸ்ரவேலின் பத்து கோத்தி ரங்களையும் அசீரியாவுக்குச் சிறை பிடித்துக் கொண்டு போனார்கள். ஏறத்தாழ இந்த அசீரியச் சிறையிருப்புக்கு அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர், வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் நினிவேயின் அழி வைக் குறித்தும் நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்தார். இந்தப் பயங்கர மான தீர்க்கதரிசனங்கள் அவைகளை நாகூம் பிரசங்கித்து இருபத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பின் அப்படியே, வார்த்தை பிசகாமல் நிறைவேறின.



வார்த்தையில் வடிக்கமுடியாத கொடூரத்தினால் உலகின் எல்லா தேசங்களையும் அசீரியர்கள் வெற்றி கொண்டு அடிமைப்படுத்தினர். பழங்கால வரலாற்றில், அவர்களின் காட்டுமிராண்டித்தனத்தைப் போல் யாருமே இருந்ததில்லை. அவர்கள் ஒரு பெரும் உலக சாம்ராஜ்யமான போது, முழு உலகமுமே அவர்கள் கொடுமைக்குப் பயந்து நடுங்கியது. அசீரிய சாம்ராஜ்யத்தின் மையப் பகுதியான நினிவே, "அகில உலக ராணி பட்டணம்" என அழைக்கப்பட்டது. இந்த மாபெரும் அகில உலக ராணி பட்டணத்தைப் பற்றித் தான் நாகூம் தீர்க்கதரிசி முன்னறி வித்தார்.

## நினிவேயின் அழிவை நாகூம் அறிவிக்கிறார் (அதிகாரம் 1)

நாகூம் புத்தகத்தின் முதல் அதிகாரம் நினிவேயின் வீழ்ச்சியை அறி விக்கிறது. அந்த நகரத்தின் இருமருங்கிலும் இரு நதிகள் ஓடி நகரத் தைப் பாதுகாத்த போதிலும் *"நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டு வரு கிற வெள்ளத்தினால் சர்வசங்காரம்பண்ணுவார்"*. இந்த இரு நதிகளும் நகரத்தைச் சுற்றி ஓடி நகரத்தை பலப்படுத்தின. ஆயினும் நகரத்தின் பாதுகாப்புக்குக் காரணமானவையே அதற்கு விரோதமாக எழும்பி, புரண்டு வந்து அழிக்கும் (1:8).

நாகூம் என்ற பெயரின் பொருள் ''ஆறுதலால் நிறைந்தது'' எனப்படும். அவருடைய செய்தி தென்திசை இராஜ்ஜியத்திற்கு அதிக ஆறுதலைக் கொண்டு வந்தது. அசீரியர்கள் ஏற்கனவே வடதிசை இராஜ்ஜியத்தை வெற்றி கொண்டு விட்டார்கள். இந்த அசீரியர்கள் தெற்கேயும் திரும்பித் தங்களையும் வெற்றி கொண்டு விடுவார்களோ வென தென்திசை இராஜ்ஜியம் பயந்தது. அதுபோலவே, வடதிசை இராஜ்ஜியத்தை வெற்றி கொண்டு அவர்களை சிறைபிடித்த பின், தெற்குப் பக்கம் திரும்பி தென்திசை இராஜ்ஜியத்தை வெற்றி கொள்ள முயன்றனர். அரண்கள் எழுப்பிய நாற்பத்தாறு பட்டணங்களை வெற்றி கொண்டு 200,000 மக்களை சிறை பிடித்துக் கொண்டு போனார்கள்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் பார்த்தபடி, அவர்கள் எருசலேமின் வாசல்களுக்கு வந்து சேர்ந்தபொழுது, அம்மாபெரும் தீர்க்கதரிசியின் ஊழியத்தினால் தென்திசை இராஜ்ஜியம் காப்பாற்றப்பட்டது. அந்த ஒரு வெற்றி கிடைத்தும் கூட தென்திசை இராஜ்ஜியம் அசீரியரின் படையெ டுப்பு இருக்குமோவென பயந்தது. *"அவர்கள் சம்பூரணமடைந்து அநே கராயிருந்தாலும் அறுப்புண்டு போவார்கள்; அவன் ஒழிந்து போவான்"* (12) என்ற நாகூமின் தீர்க்கதரிசனத்தைப் பாருங்கள்.

## நினிவேயின் வீழ்ச்சியை நாகூம் விவரிக்கிறார் (அதிகாரம் 2)

நாகூம் தீர்க்கதரிசனத்தின் இரண்டாவது அதிகாரத்தில் இந்த நகரத்தின் வீழ்ச்சியை விரிவாக விவரிக்கிறார். சத்துருவின் சேனையின் சீருடைகளின் நிறத்தைக் கூறுகிறார். அவர்கள் கேடகங்களில் சூரியன் பிரதிபலிப்பதையும் கூறுகிறார். ரதங்களின் வேகமான ஓட்டத்தையும், அழிக்கப்படும் நகரத்தில் நடக்கும் தாறுமாறான நிகழ்ச்சிகளுக்குத் தப்பி மக்கள் தெருவில் ஓடுவதையும் தெளிவாக விவரிக்கிறார் (4). இந்த இராணுவ வீரர்கள் நகரத்தை விட்டும் நாட்டை விட்டும் திரும்பிப் பார்க்காமல் ஓடுவார்கள் (8) என முன்னறிவிக்கிறார். நாகூமின் கூற்றுப்படி, அரசியின் உடை உரிந்துகொள்ளப்பட்டு, அவளை சங்கிலிகளால் கட்டிச் சிறையாக நடத்திக் கொண்டுபோனார்கள் (7). முழங்கால்கள் தள்ளாடுகின்றன; இருதயங்கள் பயங்கரத்தால் உருகிப்போகின்றன. மக்கள் பிரமித்து நிற்கிறார்கள்; பயத்தினால் முகம் வெளிறி நடுநடுங்கிப் போகிறார்கள் (10). இந்த விரிவான தீர்க்கதரிசனம் தென்திசை இராஜ்ஜியத்திற்கு அவர்கள் சத்துருவின் நகரத்தின் அழிவு சமாதானத்தையும் ஆறுதலையும் கொண்டு வரும் என்பதைக் காட்டுகிறது.

## நினிவேயின் அழிவை நாகூம் நியாயப்படுத்துகிறார் (அதிகாரம் 3)

தேவனுடைய உக்கிர கோபாக்கினை நினிவேயின் மேல் ஊற்றப்படுவதற்கான பல காரணங்களை நாகூம் பட்டியலிடுகிறார். இரத்தம் சிந்துதல், பொய் பேசுதல், நகரங்களைக் கொள்ளையிடுதல், வேசித்தனம் போன்றவைகளைச் செய்ததாகக் குற்றஞ் சாட்டினார். பழங்கால வரலாற்றின் ஆராய்ச்சியாளர்கள், அசீரியர்கள் தாங்கள் வெற்றி கொண்ட மக்களின் தேசப் பெருமையை அழிப்பதற்காக மற்ற நாடுகளுக்குக் கொண்டு போய்விட்டு விட்டார்கள். அவர்கள் சிறைபிடித்த மக்களுக்கு விரோதமாய் சொல்லொணாக் கொடுமைகளை இழைத்தார்கள். சிறைபிடித்தவர்களை உயிரோடு தோலுரித்தார்கள். ஒரு நகரை வெற்றி கொண்டால் நகரின் பாதி ஜனத்தொகையை அழித்து, நகரத்தின் வாசலில் மண்டையோடுகளை ஒரு குவியலாகக் குவித்து வைத்து, நகரத்தில் உயிர் வாழும் மீத மக்களை பயப்படுத்துவார்கள்.

பூமியிலிருந்த ஒவ்வொரு தேசமும் குரூரமான அசீரியர்கள் கையில் துன்பம் அநுபவித்ததால், தேவபக்தியற்ற அவர்களின் மிருகத்தனமான கொடுமைக்கு தேவனின் பதிலை நாகூம் இப்படிக் கூறினார்: *“இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத்தையும், ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப் பண்ணுவேன்.”* (3:5) *“உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை; உன் காயம் கொடியது; உன் செய்தியைக் கேட்பவர் யாவரும் உன் பேரில் கைகொட்டுவார்கள்”* (3:19).



## நாகூம் தேவனுடைய நற்குணத்தைப் பற்றிக் கூறுகிறார்

இந்த சிறிய புத்தகம் தேவனுடைய அன்பு மற்றும் உக்கிர கோபத்தைப் பற்றிப் போதிக்கிறது, எபிரெய மொழியில் உக்கிர கோபத்திற்கான வார்த்தை ‘கரை கடப்பது’ என்ற கருத்தைக் கொடுக்கிறது. தேவனுடைய தலையாய பண்பு அன்பு. ஆனால் மக்களின் பொல்லாப்பும், தேவனற்றதன்மையும் அவருடைய நற்குணத்தின் மற்றொரு பகுதியான பரிசுத்தம் மற்றும் முழுமையான நீதி என்னும் பண்புகளைக் காட்ட அவரை வற்புறுத்துகின்றன. அந்த சமயத்தில் அன்பு என்னும் கரையிலிருந்து உக்கிரகோபம் மற்றும் நியாயத்தீர்ப்பு என்னும் கரைக்குக் கடக்கிறார்; ஏனென்றால் பொல்லாப்பு அல்லது துன்மார்க்கம் தேவனுடைய பரிசுத்தத்தோடு இணைந்திருக்க முடியாது.

தன் ஏழு வயது மகளைக் கற்பழித்து கொலை செய்த மனிதன் காவல் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டபொழுது, அன்பான, மிருதுவான தகப்பன் கட்டுக்கடங்காமல் கோபப்படும்போது பல காவலர்கள் சேர்ந்து அவரைப் பிடித்து வைத்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். அன்பு மிருதுத்தன்மை ஆகிய பண்புகளினின்று ஆக்ரோஷத்திற்கு அந்தத் தகப்பன் மாறியது போல தேவனும் தம் குணத்தில் மாறக் கூடியவரா?

தேவனுடைய அன்புக்குப் பாத்திரமானதை அழிக்கும் காரியத்தை அழிக்கக் கூடிய பூரண அன்பினால் ஏற்பட்ட விளைவு என்றும் தேவனுடைய கோபத்தை சொல்லலாம் : “இங்கே தேவனுடைய அன்புக்குரியவர்கள் யாரெனில் வடதிசை இராஜ்ஜியமான இஸ்ரவேல் கைதிகளைப் போல அசீரியர்களால் சித்திரவதைக்குட்பட்டவர்கள்.

தென்திசை இராஜ்ஜிய தேவனுடைய மக்களான யூதாவைப் போல, பூரண அன்பின் வடிவாக இருக்கிற நம் தேவன் முடிவில், கொடுமைக்குள்ளான தம் மக்களுக்காகத் தம் கோபத்தை வெளிப்படுத்துவார் என்ற நிச்சயத்தில் நாம் ஆறுதலடையலாம். அவருடைய பூரண பரிசுத்தம் மற்றும் பூரண நீதியை வெளிப்படுத்துவதன் மூலமாய்ப் பொல்லாதவர்களை அழித்துப் போடுவார்.

## அத்தியாயம் எட்டு

# ஆபகூக்கின் தீர்க்கதரிசனம்

இந்தச் சின்ன தீர்க்கதரிசி ஆபகூக்கை அறிந்தவர்கள் அவரை, அநேக கேள்விகள் கேட்கும் ஆனால், விடை கொடுக்காத தீர்க்கதரிசி என்று எண்ணுகிறார்கள். அவருடைய மூளையே கேள்விக்குறி போல் வளைந்திருப்பது போல் தெரிகிறது. அவருடைய தீர்க்கதரிசனத்தின் மூன்று சிறிய அதிகாரங்களில் திரும்பத் திரும்ப அவர், தேவனிடம் "ஏன்?" என்று கேள்விகளைக் கேட்கிறார். இதனாலேயே சிலர் ஆபகூக்கை 'நம்பிக்கையற்ற தீர்க்கதரிசி' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இந்தத் தீர்க்கதரிசிகளை நான் பார்க்கும்போது நான் கண்டு பிடித்தது என்னவென்றால், தேவன் பல தரப்பட்ட வாழ்க்கையிலிருந்து இந்தத் தீர்க்கதரிசிகளை அழைத்தார். கர்த்தரைத் துதிக்கும்படியாக தாவீது தானே செய்த இசைக்கருவிகளை மீட்டி கர்த்தரைத் துதிக்கும் வேலையை மட்டும் செய்ய, நாலாயிரம் ஆசாரியர்களை நியமித்தான் என்று பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்களிலிருந்து அறிகிறோம் (1 நாளாகமம் 23:5). ஆராதனை மற்றும் இசை ஆகிய ஊழியங்களைச் செய்த லேவியர்கள் அநேக சங்கீதங்களை எழுதினர். ஆபகூக் அந்த லேவிய இசைக்கலைஞர்களில் ஒருவர். நம்முடைய கலாச்சாரத்தின்படி, அவர் ஒரு இசைக்குழுத் தலைவர் அல்லது ஆராதனையை நடத்துபவர் என்று சொல்லலாம்.

## ஆபகூக்கின் காவல் கோபுரம்

பிரசங்கிகள் எப்போதும் மக்கள் கேட்காத கேள்விகளுக்கு பதில் சொல்கிறார்கள் என்று சிலர் கூறுகின்றனர். பிரசங்கிகளாகிய நம்மில் சிலர், சில வேளைகளில் இக்குற்றச் சாட்டை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. ஏனெனில் நம்மைக் குற்றப்படுத்தப் போதுமான ஆதாரம் உள்ளது. ஆனால் ஆபகூக் அப்படிப்பட்ட நிலையில் இல்லை.



ஆபகூக், எரேமியாவுடன் சமகாலத்தவர். அந்த மாபெரும் தீர்க்கதரிசிக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கண்டவர். ஆபகூக் அறிவு பூர்வமாக சிந்தித்தார். யூதாவின் மக்கள் எரேமியா போன்ற மாபெரும் தீர்க்கதரிசியை அவ்வளவு மோசமாக நடத்தக் கூடியவர்களெனில் தேவனிடத்திலிருந்து அவர்களுக்கு ஒரு செய்தியை வைத்திருக்கிறேன் என்று சொல்லும் இசைக்குழு நடத்துனரை எப்படி நடத்துவார்கள் என சிந்தித்தார்.

தம்முடைய தீர்க்கதரிசனத்தை உரைக்கும்போது, மக்கள் கேட்கக் கூடிய விதமாக ஒரு மிக புத்திசாலித்தனமான இலக்கிய முறையை ஆபகூக் உருவாக்கினார் என திட்டமாய் நம்புகிறேன். தேவன் அவர்களுக்குக் கூறும்படி ஆபகூக்குக்குக் கொடுத்த வார்த்தையை யூதா தேசத்து மக்கள் ஏற்றுக்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்த அப்படிச் செய்தார். யூத மக்கள் தேவனிடமும், தங்களில் ஒருவருக்கொருவரிடமும் கேட்ட கேள்விகளையே ஆபகூக் கேட்டாரென நம்புகிறேன்.

பாபிலோனிய சேனைகள் சடுதியில் வந்து விடுவார்களென எருசலேம் நகரத்திலுள்ள யூத மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய காவல் கோபுரங்களில் காவல்காரர்கள் தரித்து நின்றார்கள். அவர்கள் பயந்துகொண்டிருந்த பாபிலோனியர்கள் வரும் முதல் அடையாளம் மற்றும் சத்தம் இவைகளை கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆபகூக் ஒரு ஆவிக்குரிய "காவல் கோபுரத்தைக்" கட்டப் போவதாக அறிவித்தார். அந்தக் காவல் கோபுரத்தில் அவரே நின்று கொண்டு அவரது (உண்மையில் மக்களின்) கேள்விகளையெல்லாம் கேட்கப் போவதாகக் கூறினார். பின்னர் அவர் தேவன் தன் கேள்விகளுக்கு (அவர்களுடைய) பதில் தருவதற்காய் காத்திருக்கப் போவதாகவும் கூறினார்.

மக்களெல்லாருடைய இருதயங்களிலும் கனத்துக் கொண்டிருந்த இந்தக் கேள்விகளை தேவனிடம் கேட்கும்படி அவர்கள் ஆபகூக்கை அவருடைய காவல் கோபுரத்திற்குச் செல்லும்படி ஊக்கம் கொடுத்தார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆபகூக் காவல் கோபுரத்தில் தன் நிலையிலே நின்று கொண்டு, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களை அழிப்பதற்கு ஒரு பொல்லாத தேசமாகிய பாபிலோனை தேவன் பயன்படுத்தியது குறித்துக் கேள்வி கேட்டார். *"கர்த்தாவே, நீர் பூர்வகால முதல் என் தேவனும், என் பரிசுத்தருமானவர் அல்லவா? நாங்கள் சாவதில்லை; கர்த்தாவே, நியாயத்தீர்ப்புச் செய்ய அவனை வைத்தீர். கன்மலையே தண்டனை செய்ய அவனை (பாபிலோனியர்) நியமித்தீர். தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?"* (1:12, 13).

யூதாவை அதன் பாவங்களுக்காக தண்டிக்க தேவன் பாபிலோனியர்களை உபயோகித்தார் என்ற கடினமான உண்மையை ஆபகூக்கும் யூதா மக்களும் அறிந்திருந்தார்கள். ஆனாலும் கூட, தம்முடைய மக்களைக் கண்டிக்க தேவன் ஏன் ஒரு தேவபக்தியற்ற தேசத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்களுக்குப் புரிந்து கொள்வது கடினமாயிருந்தது. யூத மக்களின் அவபக்தியை விட, பாபிலோனியர்களின் தேவனற்ற நிலைமை அதிகமாயிருந்ததே என அவர் (அவர்கள்) சிந்தித்தார். தம்முடைய மக்களை தண்டிக்க தேவன் ஏன் ஒரு தேவபக்தியற்ற ஜனத்தைப் பயன்படுத்த வேண்டும்? தங்களை நெருங்கி வந்து கொண்டிருக்கும் பாபிலோனியரின் வெற்றி அவர்களின் சிறைபிடிப்பு இவற்றிற்கு நியமிக்கப்பட்டிருக்கும் யூத மக்கள் அனைவரின் உள்ளத்திலும் ஆபகூக்கின் உள்ளத்திலும் எழும்பிய கேள்விகளையே, இந்தச் சந்தர்ப்பத்தில் ஆபகூக் கேட்டார். ஆபகூக் கவனித்துக் கொண்டும், கேட்டுக்கொண்டும், தம்முடைய (அவர்களுடைய) கேள்விகளுக்கு தேவனிடமிருந்து வரும் பதில்களுக்காகக் காத்துக்கொண்டும் இருந்தார். *“நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலை கொண்டிருந்து, அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னைக் கண்டிக்கும்போது என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன்”* (2:1) என்று அறிவித்தார்.

## ஆபகூக்கின் செய்தி

தன்னுடைய காவல் கோபுரத்திலே நின்று, தேவனுடைய செய்தியைக் கேட்டதாக ஆபகூக் அறிவித்தபோது மக்களின் பரவசம் எப்படி இருந்திருக்குமென்று கற்பனை செய்து பாருங்கள். சரியான நேரத்தில் கொடுக்கப்பட வேண்டிய அவர் செய்திக்கு என்ன புத்திசாலித்தனமானதொரு முறையைக் கையாண்டிருக்கிறார். தேவன் தன் கேள்விகளுக்கு விடையளித்து விட்டதாக ஆபகூக் பிரசங்கித்தார். தேவ பக்தியற்ற தேசத்தைப் பயன்படுத்தி, யூதாவின் தவறுக்காக தேவன் தண்டித்தாலும், பாபிலோனியர்கள் வெகுகாலம் உலகளாவிய சாம்ராஜ்யமாக இருக்க மாட்டார்கள் என தேவன் ஆபகூக்கிற்குப் பதிலளித்தார். நாம் பார்த்தபடி, பாபிலோனிய சாம்ராஜ்யம் எழுபது ஆண்டுகளுக்கு மட்டுமே நிலைத்தது.

காவல் கோபுரத்திலிருந்த ஆபகூக்கினிடம் தேவன், பாபிலோனியரின் உள்ளத்திலேயே அழிவின் விதையைப் பெற்றிருந்தார்கள் எனக் கூறினார். பாபிலோனியர் தங்கள் இருதயங்களில் கோணலானவர்கள் என தேவன் ஆபகூக்கிடம் கூறினார். “பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்” என இயேசுவானவர் போதித்ததையே தேவன் ஆபகூக்கிடம் சொன்னார். அவர்களின் மிருகத்தனமான கொடூரமான அவபக்தியினாலே அவர்கள் அழிந்து போவார்கள். *“இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். அவன் மதுபானத்தினால் அக்கிரமஞ்செய்து அகங்காரியாகி, வீட்டிலே தரியாமல், அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப் போல விரிவாக்கித் திருப்தியாகாமல், மரணத்துக்குச் சமானமாய்ச் சகல ஜாதிகளையும் தன் வசமாகச் சேர்த்து, சகல ஜனங்களையும் தன்னிடமாகக் கூட்டிக்’*கொள்ளுகிறான் (2:4-5).



இங்கு தேவன் கூறும் “அகங்காரி” பாபிலோனாக இருக்க வேண்டும். அவனுடைய இருதயம் அல்லது ஆத்துமா அவனுக்குள் செம்மையாய் இல்லை. விசுவாசி அல்லது நீதிமான்கள், தேவனை அறிந்தவர்கள், அவருடைய வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசம் வைத்தவர்கள் பிழைப்பார்கள் (4).

“விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்” என்பதற்கு அர்த்தம் ஒன்று. ஆனால் வாழ்க்கைப் பாடங்கள் பல உண்டு. ஆபகூக்கின் கேள்விக்கு தேவன் எதிர்காலத்தில் யூதாவுக்கு நம்பிக்கையுண்டு என வாக்குக் கொடுத்தார். ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளிடம் அதிலும் முக்கியமாக எரேமியாவிடம் அவர்களுக்கு விசுவாசம் இருந்ததென்றால், அவர்கள் ஒரு ஜனமாக வாழ்ந்து தங்கள் நாட்டுக்குத் திரும்புவார்கள். பாபிலோன் அவர்கள் மேல் இறுதியாக வெற்றிகொள்ள முடியாது என்பதைக் குறிப்பது இது.

இரண்டாவதாக, ஆனால் முக்கியமான வாழ்க்கைப் பாடமாக இந்த ஆபகூக்கின் வசனம் புதிய ஏற்பாட்டில் மூன்று முறை மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. மார்ட்டின் லூத்தர் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் பவுல் ரோமருக்கு எழுதிய முதல் அதிகாரத்தில், இந்த வசனத்தைக் (ரோமர் 1:17) கண்டபொழுது புராட்டஸ்டன்ட் மறுமலர்ச்சி பிறந்தது. அந்த மறுமலர்ச்சியின் இறையியல், பவுல் ரோமர், கலாத்தியர் நிருபங்களுக்கு லூத்தர் எழுதிய விளக்கவுரைகளில் காணப்படுகிறது. மூன்றாவதாக, இந்த வசனம் காணப்படும் இடம் புதிய ஏற்பாட்டில் மகத்தான விசுவாச அதிகாரம் ஆரம்பமாகும் சூழ்நிலை ஆகும் (எபிரெயர் 10:38).

## ஆபகூக்கின் பாடல்

மிக தைரியசாலியான இந்த இசைக்குழுத் தலைவருக்கு என்ன நேர்ந்தது என்று நமக்குச் சொல்ல எந்த ஆதாரமும் இல்லை. எருசலேம் போன்ற நகரங்கள் வீழ்ந்தபோது, பாதித் தொகை மக்கள் கொல்லப்பட்டார்கள். உயிரோடிருந்தவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டனர். பாபிலோனிய வெற்றியும் சிறையாக்குதலும் நெருங்கி வருகிறதையும், அது எழுபது ஆண்டுகள் நீடிக்கும் என்பதையும் ஆபகூக் அறிந்திருந்தாலும், தன் செய்தியைத் துதியின் பாடலோடு நிறைவு

செய்தார். எதிர்காலம் தனக்கு என்ன வைத்துள்ளது என்பதை அறிய வழியே இல்லாவிடினும் அவரது தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை இருந்தது. எழுபது ஆண்டுகளுக்குப் பின் யூதா திரும்பி வரும், பாபிலோன் வீழும். யூதா தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகத் தொடர்வார்கள்.

நம்பிக்கையிழந்தவனாக, பெருமூச்சுடன் சந்தேகத்துடன் ஆபகூக் தனது தீர்க்கதரிசனத்தைத் துவங்கினாலும் துதியின் பாடலோடும் ஆராதனை மற்றும் ஒரு தீர்மானத்தோடும் தம் தீர்க்கதரிசனத்தை முடிக்கிறார். அவர் தமது தீர்க்கதரிசனத்தை முடிக்கிற விதத்திலே, ஒவ்வொரு தலைமுறையிலும் கலாசாரத்திலுமுள்ள தேவனுடைய மக்களுக்கு நம்பிக்கையிழந்த நிலைமையில் ஏற்படும் துன்பமான சூழலை எப்படித் துதியின் பாடலாக மாற்றுவது எனக் காட்டினார்.

தேவனைத் தன் தேவைகளை நிறைவேற்றுபவராக மட்டும் பயன்படுத்தும் விசுவாசத்திற்கு முற்றிலும் வேறுபட்டதாக ஆபகூக்கின் பாடலும் முன்மாதிரியும் அமைந்துள்ளது. தன் தேவைகளுக்காக மட்டும் விசுவாசிக்கிறவன், மின்சாரம் தண்ணீர் மற்றும் பொது வாகனங்களை நம் தேவைக்குப் பயன்படுத்துவது போல, தேவனைப் பயன்படுத்துகிறான்.

ஆபகூக்கின் கடைசிப்பாட்டு தாம் தெரிந்துகொண்ட மக்கள் மூலம் மேசியாவைக் கொண்டுவரும் தம் திட்டத்தை தேவன் கைவிடமாட்டார் என்பதை அறிந்த ஒரு விசுவாச வீரனைக் காட்டுகிறது. ஆபகூக் விசுவாசித்தபடி, தேவனுடைய வார்த்தைகள் உண்மையெனில் தேவனுடைய மக்கள் முற்றிலும் கைவிடப்பட மாட்டார்கள். அவர்கள் நாடு கடத்தப்படலாம், அவர்கள் பாவங்களுக்காக தண்டிக்கப்படலாம். ஆனால் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டுமானால் அவர்கள் ஒருபோதும் அழிக்கப்படமாட்டார்கள்.

யோபுவின் பயங்கரமான வேதனையின் மத்தியில் தேவன் அவருக்கு ஆச்சரியமான வெளிப்பாடு தந்தது போல, எரேமியா தன் புலம்பல்களை எழுதும்போது வெளிப்பாடு தந்தது போல, ஆபகூக்கின் வாழ்க்கையின் மிக இருண்ட பகுதியில் தேவன் இந்த மகத்தான பாடலை அவருக்குக் கொடுத்தார்.

"கர்த்தாவே நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன்,
நீர் செய்யப் போகும் பெரிய காரியங்களுக்காக
உம்மை துதிக்கிறேன்.
கர்த்தாவே கடினங்கள் மத்தியில்
உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்,
வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்



கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்.

அத்திமரம் துளிர்விடாமற் போனாலும்,
திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும்,
ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும்,
வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும்
கிடையில் ஆட்டு மந்தைகள் மரித்துப் போனாலும்
தொழுவத்திலோ மாடு இல்லாமற் போனாலும்
நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்.

என் இரட்சிப்பின் தேவனில் களிகூருவேன்
ஆண்டவராகிய கர்த்தரே என் பெலன்;
அவர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி,
உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்."

*(இசைக்குழு நடத்துனருக்கு ஒரு குறிப்பு: பாடகர் குழு இதைப் பாடும்போது கம்பி வாத்தியங்கள் மீட்டப்பட வேண்டும்.)*

## நம் சொந்த வாழ்க்கைக்கான பாடங்கள்

ஆபகூக் சந்தித்த இக்கட்டான நிலைமைகள் நம்மில் வெகு சிலருக்கே ஏற்பட்டிருக்கலாம், பிரச்சினைகள் அதிகமாகும்போது சரீரத்திலுள்ள சக்தி மற்றும் உணர்ச்சிகள், ஆவிக்குரிய சக்திகள் எல்லாவற்றையும் நம் பிரச்சினைகளை மேற்கொள்ளுவதற்காக பயன்படுத்தலாம். அல்லது ஒரு ஆவிக்குரிய காவல் கோபுரத்தைக் கட்டி, தேவன் நம் வாழ்க்கையில் கிரியை செய்வதைப் பார்க்கும் வரை காவலிலே தரித்து நிற்கலாம். தேவன் நம் வாழ்க்கையில் கிரியை செய்வதைக் கேட்கும் வரை நாம் கவனித்துக் கேட்கலாம். பின்பு, ஆபகூக்கைப் போல நம் வாழ்க்கையில் கிரியை செய்யும் தேவனை, தொழுது கொள்ளலாம்.

நீ எப்பொழுதாவது காவல் புரிய, காத்திருக்க, தேவனிடமிருந்து செய்தியை நீ கேட்கும் வரை கவனித்துக் கொண்டிருக்க ஒரு ஆவிக்குரிய காவல் கோபுரத்தைக் கட்டியதுண்டா? நாம் ஒரு ஆவிக்குரிய காவல் கோபுரத்தைக் கட்டி, நம் கேள்விகளோடு தேவனை அணுக வேண்டும் என ஆபகூக்கின் புத்தகம் நமக்குப் போதிக்கிறது. அவருக்காக நாம் கவனித்துக் கேட்கும், காத்திருக்கும் அமைதியான வேளைகளில், அவர் நமக்குப் பதில் தருவார். முந்தைய தலைமுறையிலிருந்த ஒரு தேவபக்தியுள்ள போதகர் இப்படிச் சொன்னார். "ஆபகூக்கிடம் தேவன் பேசியது போல் இன்று தேவன் தம் மக்களிடம் பேசுவதில்லை என சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆபகூக் தேவன் கூறியதை கவனித்துக் கேட்டது போல இன்றைய தேவனுடைய மக்கள் தேவனுக்காகக் காத்திருந்து கேட்பதில்லை என்று சொல்வது தான் சரியாயிருக்கும்."

## அத்தியாயம் ஒன்பது

# செப்பனியாவின் தீர்க்கதரிசனம்

யோவேல் தீர்க்கதரியைப் போல, செப்பனியாவும் கர்த்தருடைய நாளைப் பற்றிக் கூறினார். கடந்த கால, நிகழ்கால, வருங்கால கர்த்தருடைய நாளைப் பற்றி யோவேல் அழுத்திக் கூறினார். ஆனால் செப்பனியாவோ, இயேசு, தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் பிற்காலத்தில் கூறப் போகும் கடைசிக் காரியங்களில் ஒன்றான, கர்த்தருடைய கடைசி நாளைப் பற்றி மட்டுமே தீர்க்கதரிசனம் உரைப்பதில் கருத்தாயிருந்தார்.

### கர்த்தருடைய நாளில் நடப்பது (அதிகாரம் 1)

கர்த்தருடைய நாளில், படைப்பின் ஒவ்வொரு நிலையிலும் பேரழிவுக்கான சம்பவம் நிகழும் என செப்பனியா பிரசங்கித்தார். *"தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன். மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன்; நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், இடறுதற்கேதுவானவைகளையும், துன்மார்க்கரோடே கூட வாரிக்கொண்டு, தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம் பண்ணுவேன்"* என தேவன் அறிவித்தார் (1:2-3).

செப்பனியாவின் கூற்றுப்படி, கர்த்தருடைய நாள் இறுதியானதாகவும், பயங்கர மாற்றத்தைக் கொண்டுவருவதாகவும் இருக்கும். இது யூத மக்களையும் அவர்களைச் சிறையாக்கின பாபிலோனியர்களை மட்டுமல்ல, பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதன், மிருகம், பறவைகள், கடலிலுள்ள மச்சங்கள் என சர்வத்தையும் பாதிக்கும்.

அடுத்த சில வசனங்களில், மற்ற தீர்க்கதரிசிகளைப் போலவே செப்பனியாவும் கர்த்தருடைய இறுதி நாள் பற்றிய தீர்க்கதரிசனத்துடன், பாபிலோனிய சிறையிருப்பு பற்றிய அவனது தீர்க்கதரிசனத்தைக் கலந்து தேவனுடைய வார்த்தைகளைப் பேசினார்: *"நான் யூதாவின் மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டி... கர்த்தருடையயாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன், வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன்"* (1:4, 8-9).



செப்பனியா, மீகாவுடன் சேர்ந்து, மக்களின் ஆவிக்குரிய அவிசுவாசம் மற்றும் ஒழுக்கச் சீர்கேட்டிற்காக, ஆவிக்குரிய தலைவர்களையும், அரசியல் தலைவர்களையுமே குற்றப்படுத்தி, கண்டித்தார். இந்த இரு சின்ன தீர்க்கதரிசிகளின் கூற்றுப்படி, ஆவிக்குரிய தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் பாவங்களின் விளைவாக, அனைத்து மக்களுக்குமே தேவன் நியாயத்தீர்ப்பை வழங்கப் போகிறார். தலைவர்களிலிருந்து சாதாரண மக்கள் வரை அனைவருக்கும் வரும் தேவனுடைய இந்த நியாயத்தீர்ப்பு, மக்களின் நல்வாழ்வுக்காக தேவன் முன் தலைவர்கள் கொண்டிருக்கக் கூடிய பொறுப்புகளை தேவன் வலியுறுத்துகிறார் என்பதைக் காட்டுகிறது.

### கர்த்தருடைய நாள் எப்படியிருக்கும்? (அதிகாரம் 2)

துவக்கத்தில் செப்பனியா யூதாவின் பாவங்களுக்காக அதன் மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி அறிவித்தாலும், எல்லா தேசங்களுக்கும் விரோதமாக, அதிலும் யூதா மக்களை உபத்திரவப் படுத்திய மக்களுக்கு விரோதமாக வரும் கர்த்தருடைய நாளைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார். பயங்கரமான அந்த நாளிலே, பூமியின் மனிதரெல்லாரும், பூமியிலே தங்கள் செய்கைகளுக்காகக் கணக்குக் கொடுப்பார்கள். தேவன் இறுதித் தீர்மானம் எடுப்பார். தங்கள் வாழ்க்கையில் ஒரே மெய்யான தேவனை ஆராதித்தவர்கள் மட்டுமே அந்தக் கடைசி நாளிலே தேவனுடைய கோபத்துக்குத் தப்புவார்கள் என்று செப்பனியா அறிவித்தார்.

இந்த சத்தியத்தைக் கூறும்பொழுது செப்பனியா தேசங்களை மனந்திரும்பும்படியாகப் புத்தி கூறுகிறார். *"விரும்பப்படாத ஜாதியே, கட்டளை பிறக்குமுன்னும், பதரைப் போல நாள் பறந்து போகுமுன்னும் கர்த்தருடைய உக்கிர கோபம் உங்கள் மேல் வருமுன்னும், நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்"* (2:1-2).

யூதாவுக்கு விரோதமாக, தேவ பக்தியற்ற தேசங்கள் தேவனால் பயன்படுத்தப்பட்டாலும், அவர்கள் ஒரே ஒரு மெய்யான ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் அல்ல. கர்த்தருடைய கடைசி நாளில் தேவன் கொண்டு வரும் அக்கினிக்குத் தப்பிக் கொள்ள செப்பனியா அவர்களை மனந்திரும்புதலுக்கு அழைத்தார்.

கர்த்தருடைய நாள் வருவதற்குக் காரணமாயிருப்பது தேசங்களின் அவபக்தியும் பாவமுமே. யூத மக்களையும் தேவபக்தியற்ற தேசங்களையும் பற்றிக் கூறும்போது செல்வத் திரட்சியினால் வரும் பாவம், அசட்டையாயிருத்தல், அவிசுவாசம், கீழ்ப்படியாமை, முரட்டாட்டம், தேவனற்ற நிலைமை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட தேவனுடைய மக்கள் மற்றும் தேவபக்தியற்ற மக்கள் ஆகியோரின் பாவங்கள் தேவனுடைய கோபத்தைக் கிளப்பிவிட்டு, கர்த்தருடைய கடைசி நாள் வருவதற்குக் காரணமாய் அமைவதாக செப்பனியா கூறுகிறார்.

சமுத்திரக்கரை தேசங்களின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்றும் செப்பனியா முன்னறிவிக்கிறார். *"அந்தத் தேசம்... யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும்; அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள்; அஸ்கலோனின் வீடுகளிலே சாயங்காலத்திலே படுத்துக் கொள்வார்கள்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்"* (7). செப்பனியா மோவாபுக்கும் அம்மோனுக்கும் விரோதமாக, அதே போல் எத்தியோப்பியருக்கும் அசீரியருக்கும் விரோதமாகப் பிரசங்கித்தான். தேவபக்தியற்ற தேசங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பைத் தாங்க மாட்டார்கள் என்பதைக் காட்டும்படியாக இப்படிச் செய்யப்பட்டது.

### கர்த்தருடைய நாளில் புது சிருஷ்டி (அதிகாரம் 3)

செப்பனியா யூதருடைய துன்மார்க்கத் தலைவர்கள் மற்றும் தேவனை எதிர்த்து நிற்பவர்களையும் கண்டித்ததோடு அதனால் தான் பாபிலோனியச் சிறையிருப்பு நேர்ந்தது என்றும் கூறினார். கர்த்தருடைய கடைசி நாளில் யூதாவுக்கு நம்பிக்கையுண்டு என்ற செய்தியையும் அளித்தார். அந்த நாளில், பூமியின் எல்லா தேசங்களும் கர்த்தரை தேவனென்று ஏற்றுக் கொள்வார்கள் (8-11); இஸ்ரவேலில் மீதியானவர்கள் உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவார்கள். *"இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை; வஞ்சக நாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை; அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப்படுத்துக் கொள்வார்கள்"* (13).

யூதாவின் மக்கள் தேவனுக்கு உண்மையாயிருக்கத் தவறியிருந்தாலும், தேவன் அவர்களைக் காப்பாற்றுவார். கடைசி நாட்களில் அவர்களைச் சிறையிருப்பிலிருந்து மீட்டுக் கொள்வார்; மீதியாக வைக்கப்படும் உண்மையுள்ள மக்கள், புதிய அழகான படைப்புக்களாக என்றென்றும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பார்கள் எனக் கூறினார். இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியதை எஸ்றா, நெகேமியா புத்தகங்களில் காண்கிறோம். நாம் பார்க்கப் போகும் கடைசி மூன்று தீர்க்கதரிசிகளிலும் இதைக் காணலாம். பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து பிழைத்து, மீந்தவர்களுக்கு ஊழியம் செய்தவர்கள் இந்த சிறையிருப்புக்குப் பின் வந்த தீர்க்கதரிசிகள்.



கர்த்தருடைய இறுதி நாளைப் பற்றியே செப்பனியா பேசுவதால் அவர் தீர்க்கதரிசனம் கூறும் சிறுமையும் எளிமையுமான நீதியுள்ள மீதியான ஜனம், உயிரோடெழுந்து ஜீவிக்கிற கிறிஸ்துவின் சபை என்று பலர் நம்புகிறார்கள். அப்போஸ்தலர்கள் அனைவரும் யூதர்கள். மறுபடியும் பிறந்த புறஜாதியார் அனைவரும் ஆபிரகாமின் புத்திரர் என்று பவுல் எழுதுகிறார் (கலாத்தியர் 3:7). யூத மக்களை தேவன் தம்முடன் திரும்ப சேர்த்துக் கொள்வார் என முன்னுரைக்கும் பவுலும் ஒரு தீர்க்கதரிசியாகிறார். *''இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்''* (ரோமர் 9:11).

அத்தியாயம் 10

# ஆகாயின் தீர்க்கதரிசனம்

இதுவரை நீங்கள் பார்த்த தீர்க்கதரிசிகள் எல்லாருமே பாபிலோனியச் சிறையிருப்பின்போது அல்லது அதற்கு முந்திய காலத்தில் வாழ்ந்து பிரசங்கித்தவர்கள். ஆகாய், சகரியா மற்றும் மல்கியா தீர்க்கதரிசிகள் “சிறையிருப்புக்குப் பின்னுள்ள தீர்க்கதரிசிகள்” என அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு அவர்கள் பிரசங்கித்தார்கள். பழைய ஏற்பாட்டின் பன்னிரண்டு வரலாற்றுப் புத்தகங்களும் தீர்க்கதரிசிகள் எழுதிப் பிரசங்கித்த வரலாற்றுச் சூழலை விளக்குகிறது. இதை விளங்கிக் கொள்ள எஸ்றாவின் புத்தகத்தை அல்லது அதைப் பற்றி நான் எழுதிய குறிப்புகளைப் (புத்தகம் 3 மற்றும் 4) படியுங்கள். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மூன்று தடவைகளில், திரும்பி தனியாக வந்ததை அவை நம் நினைவுக்குக் கொண்டு வரும்.

ஆகாயும் சகரியாவும் நாடு கடத்தப்பட்டு, பாபிலோனிலிருந்து திரும்பிய முதல் கூட்ட மக்களுக்கு பிரசங்கித்தார்கள். பாபிலோனிய சாம்ராஜ்ஜியம் மேதியர், பெரிசியரிடம் தோற்றுப் போன அந்த சமயத்தில் முதல் கூட்ட மக்கள் நாடு திரும்பினார்கள். அப்படி முதலில் நாடு திரும்பிய மக்கள் செய்ய வேண்டிய வேலை தெளிவாக சொல்லப்பட்டிருந்தது. சாலொமோனின் ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதே அவர்களின் தரிசனமாக இருந்தது. அந்தப் பணியின் நோக்கமே ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகளின் செய்திகளின் ஒரே மையக் கருத்தாக இருந்தது.

ஏசாயாவின் அற்புதமான தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி பெரிசிய அகில உலக சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியான மாமன்னன் கோரேசு, ஆலயத்தைத் திரும்பக் கட்ட தேவையானவற்றையும், நாடு கடத்தப் பட்டிருந்த யூத மக்கள் நாடு திரும்ப அனுமதியும் கொடுத்துக் கட்டளை பிறப்பித்தான். ஆலயத்தைத் திரும்பக் கட்ட மக்கள்



திரும்பியது பெரிய அற்புதம் என்றாலும், அவர்களின் பயணம் அப்படி மகிமைகரமானதாக இல்லை. பரிதாபமான கந்தல் உடையில் ஐம்பதாயிரம் அகதிகள் ஆலயத்தைத் திரும்பக் கட்ட நாடு திரும்பினார்கள். இன்று நாம் கேள்விப்படுகிற அகதிகளைப் போலத்தான் அவர்களும் இருந்திருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் அவர்கள் ஆறு லட்சம் வீரர்கள் கொண்ட சக்தி வாய்ந்த சேனையாயிருந்தார்கள்; இவர்களுக்கு மக்கள் பயந்தார்கள் (யோசுவா 2:9-14). இப்பொழுது அவர்களுக்கு சேனை கிடையாது; அவர்கள் ஒரு தேசமாகக் கூட இல்லை. இவைகளோகூட அவர்களுக்கு அதிர்ச்சியும் ஏமாற்றமும் காத்திருந்தது. அவர்கள் நல்வாழ்வை விரும்பாத புறமத மக்கள் அவர்கள் நாட்டிலே குடியிருந்ததையும் கண்டார்கள். இப்போது ஆகாயும் சகரியாவும் எதிர்கொண்ட சவால்களையும் அவர்கள் காலத்து வரலாற்றுச் சூழலையும் பார்த்தோம்.

## ஆகாயின் செய்தி

நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்த மக்கள் எருசலேமிலும் யூதேயாவிலும் இருந்தவர்கள், பாபிலோனியர் தோற்கடித்த மற்ற நாடுகளிலிருந்து யூதா நாட்டில் கொண்டு வந்து விடப்பட்டவர்கள் என்பதைக் கண்டு கொண்டார்கள். அவர்கள் ஆலயம் கட்டப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்த யூதர்களை ஒரு காலத்தில் பலமான தேசமாக்கிய வல்லமை அந்த ஆலயத்தில் இருப்பதாக உறுதியாக நம்பிய அந்த மக்கள், கட்டிடம் கட்டத் துவங்கியதும் யூத மக்களைத் தொந்தரவு பண்ணவும், உபத்திரவப்படுத்தவும் செய்தார்கள். இந்தக் கடுமையான எதிர்ப்பினால் அதிகமாக பயமுறுத்தப்பட்டு, யூதர்கள் பதினைந்து ஆண்டுகள் ஆலயம் கட்டும் வேலையை நிறுத்தி விட்டார்கள். தாங்கள் செய்ய வந்த வேலையின் நோக்கத்தினின்று திசை திரும்பியவர்களாய் தங்கள் சொந்தக் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தார்கள். இப்பொழுது ஆகாய் வருகிறார்!

தேவனுடைய வேலைக்கு ஏற்பட்ட தடை நீங்கி, வேலை முற்றுப் பெறும் வரைக்கும், தேவனுடைய வேலைக்கு வந்த தடைக்கு விரோதமாகக் குரலெழுப்புவதே ஒரு தீர்க்கதரிசியின் வேலையாயிருந்தது. ஆகாய் வாழ்ந்து பிரசங்கித்த காலத்தில் ஆலயத்தைத் திரும்பக் கட்டியெழுப்புவது தான் தேவனுடைய வேலையாயிருந்தது. யூத மக்கள் முன்னுரிமை கொடாதது தேவனுடைய வேலையைத் தொடராததுதான். ஆகாய் பிரசங்கித்த நாலு பிரசங்கங்களின் பயனாக ஆலயம் எழும்பி நின்றது.

## ஆகாயின் முதல் பிரசங்கம்: "உங்கள் முன்னுரிமையை ஒருமுகப்படுத்துங்கள்" (அதிகாரம் 1)

ஆகாயின் சிறிய புத்தகத்தில் பாதி அவருடைய முதல் பிரசங்கத்தின் விளைவுகளைக் கூறுகிறது. இந்தப் பிரசங்கத்தில் யூதா மக்களுக்கு ஆகாய் சவால் விடுகிறார். *"உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்."* முழு வேதாகமத்தின் செய்தியும் சாரமும் இரண்டே வார்த்தைகளில் அடங்கியுள்ளன. *"முதலிடம் தேவனுக்கே!"* ஆகாய், நாடுகடத்தப்பட்டுத் திரும்பி வந்த மக்களுக்குக் கொடுத்த செய்தி இதுவே. "உங்கள் நேரத்தையும் தேவனுடைய நேரத்தையும் சிந்தித்துப் பாருங்கள், உங்கள் வீட்டுக் காரியங்களைச் செய்ய நேரம் இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கோ உங்களுக்கு நேரம் இல்லை."

தேவனுக்காகப் பேசும் ஆகாய், *"என்னுடைய வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ கொஞ்சம் கிடைத்தது; நீங்கள் அறுத்து வீட்டுக்குக் கொண்டு வந்தும், நான் அதை ஊதிப் போடுகிறேன்; எதினிமித்தமென்றால், என் வீடு பாழாய்க் கிடக்கும்போது, அவனவன் தன் தன் வீட்டிற்கு ஓடிப் போகிறீர்களே, இதினிமித்தமே"* (1:9). அவர்கள் பணத்தை ஓட்டைகள் உள்ள காலுறையில் போடுவதாக ஆகாய் கூறுகிறாரென்று ஒரு மொழி பெயர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய வழிகளை சிந்தித்துப் பார்க்கும்படி தேவனே அவர்கள் காலுறையில் ஓட்டை போடுகிறார் என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி அறைகூவல் விடுக்கிறார்.

நாடு கடத்தப்பட்டு மீண்டவர்களை, அவர்கள் என்ன செய்கிறார்கள் எனவும் தேவன் என்ன செய்கிறார் எனவும் சிந்தித்துப் பார்க்கச் சவால் முன்வைக்கிறார். அவர்களது தவறான முன்னுரிமைகளின் காரணமாக, அவர்கள் வேலைகள் எல்லாவற்றின்மேலும் யூத மக்கள் மேலும் தேவன் வறட்சியை வருவித்தார் (10, 11). அவர்களுக்கு மழையை அனுப்பாமல் பஞ்சத்தை அனுப்பினார். அவர்கள் கடினமாக உழைத்தும், அந்த உழைப்பு ஒன்றையும் கொடுக்கவில்லை. இதெல்லாமே அவர்கள் தேவனை முதலாக வைக்க மறுத்ததன் நேரடி விளைவுதான்.

ஆகாய் ஒரு வல்லமையான பிரசங்கியாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் மக்கள் கீழ்ப்படிய வேண்டுமென உற்சாகப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் தங்கள் முன்னுரிமைகளை ஒன்றாய்க் குவித்து ஆலய வேலையைத் திரும்பவும் தொடங்கினார்கள். ஆகாயின் முதல் பிரசங்கம் இரண்டு பகுதிகளாக வந்தன. இரண்டாவது பகுதி அவர்களுடைய கீழ்ப்படிதலுக்குப் பதில் தருவதாக அமைந்தது. அந்தப் பகுதியின் சாராம்சம் என்னவெனில் *"நான் உங்களோடே இருக்கிறேன்"* (13). அவர்கள் தங்கள் முன்னுரிமைகளை சரியாக வரிசைப்படுத்தினவுடனேயே தேவன் அவர்களோடு இருந்தார். தேவனை அவர்கள் முதலாவது வைத்த உடனே, தேவன் அவர்களையும் அவர்கள் வேலையையும் ஆசீர்வதித்தார்.



## ஆகாயின் இரண்டாவது தீர்க்கதரிசனம் - உங்கள் தொலை நோக்குப் பார்வையை ஒருமுகப்படுத்துங்கள் (2:1-9)

முதன் முதலில் கட்டப்பட்ட சாலொமோனின் ஆலயம் மிகவும் விலையுயர்ந்த பொருள்களால் - தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த ரத்தினங்கள் முதலியவற்றால் - கட்டப்பட்டது. சாலொமோனின் சர்வ மகிமையும் சர்வ செல்வமும் முதல் ஆலயத்தைக் கட்டப் போதுமானதாயிருந்தது. ஆனால் நாடு திரும்பிய அகதிகளோ சாலொமோனின் ஆலயத்தைத் திரும்ப கட்டும்போது ஏழைகளாயிருந்தார்கள். அவர்களுக்கிருந்த பொருள்களெல்லாம் இடிபாடுகளிலிருந்து பொறுக்கி எடுத்தவையும், பெரிசிய மாமன்னன் கோரேசினால் தரப்பட்டவையும் தாம்.

இரண்டாவது ஆலயத்தைக் கட்டியவர்களில் அநேகர் முதல் ஆலயத்தைப் பார்த்ததில்லை. ஏனென்றால் அவர்கள் நாடுகடத்தப்பட்ட காலத்தில் பிறந்தவர்கள். முந்தின ஆலயத்தைப் பார்த்திருந்த முதியவர்கள், முதலாவதைப் போல் இந்த ஆலயம் ஒருபோதும் அவ்வளவு மகிமைகரமாக இருக்காது என்றறிந்து, அழுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர் (எஸ்றா 3:12, 13).

மூத்த அகதிகள் ஆநுபவித்துக் கொண்டிருந்த துக்கம், சோர்வு இவைப்பற்றி, இரண்டாவது பிரசங்கத்தில் ஆகாய் குறிப்பிட்டுப் பேசினார். ஆலயத்தின் முக்கியத்துவம் ஆவிக்குரியதேயன்றி அதன் கட்டடத்திலல்ல என்றார் (வனாந்தரத்தில் சாட்சிக் கூடாரம் கூடாரமாகத் தானே இருந்தது!) மேலும் தேவன் அவர்களோடிருப்பதை ஆகாய் நினைவுபடுத்தினார்.

ஆகாய் இரண்டாவது பிரசங்கத்தில் மக்களின் தொலை நோக்குப் பார்வைக்கான அவசியத்தைச் சுட்டிக் காட்டினார். தொலைநோக்குப் பார்வை என்பது ஒரு காரியத்தில் இருப்பவையெல்லாம் கடந்து பார்ப்பது. நாம் மனதில் கொள்ளும்படியாக வேத வசனங்கள் நம்மை ஊக்கமளிக்கும் நேரங்கள் உண்டு. வேறு சில நேரங்களில் பின்னானவைகளை மறந்துவிட வேண்டும் என்று தெளிவாக வேதவசனம் மூலம் போதனை கொடுக்கப்படுவதுமுண்டு.

சில சமயங்களில் நாம் பின்நோக்கிப் பார்ப்பது அழிவைக் கொண்டு வருமளவிற்குப் போய்விடுகிறது. ஆகவே ஆகாய் போன்ற தீர்க்கதரிசிகள் மூலமாக நாம் "மலைக்குகைப் பாதை பார்வை" கொண்டிருக்க வேண்டுமெனக் கூறுகிறார். அதாவது தடைகள் மற்றும் நம் கவனத்

தைச் சிதறடிப்பவை எல்லாவற்றையும் மறந்து, நிகழ்காலத்தினூடாக எதிர் காலத்தில் நாம் அவருக்காக என்ன செய்ய வேண்டுமென தேவன் விரும் புகிறார் என பார்க்க வேண்டும். ஆகாயின் இரண்டாவது பிரசங்கத்தின் செய்தியின் சாரம் அது தான்.

## ஆகாயின் மூன்றாவது பிரசங்கம் - உங்கள் ஊக்கத்தை ஒருமுகப்படுத்துங்கள் 2:10-19

எபிரெய மக்கள் ஆலயத்தைத் திரும்பக் கட்ட ஆரம்பித்த உட னேயே, ஆகாயின் முதல் பிரசங்கத்தின் இரண்டாம் பகுதியில் அவர்கள் வேலையினால் வரக்கூடிய தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பற்றிக் கூறிய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைக் காண விரும்பி னார்கள். இலையுதிர் காலம், குளிர் காலம் என பல மாதங்களாக வேலை செய்தும், அவர்கள் எதிர்பார்த்த ஆசீர்வாதத்தைப் பெறவில்லை.

ஏமாற்றமடைந்த மக்கள் முன் ஆகாய் இரண்டு கேள்விகளை வைத் தார். மக்களின் வேத வசனங்கள் பற்றிய கேள்விகளுக்கு ஆசாரியர்கள் பதில் கூறியதால், ஆசாரியர்களிடமே ஆகாய் தன் கேள்விகளைக் கேட் டார். முதலாவது, *"ஒருவன் தன் வஸ்திரத்தின் தொங்கலிலே பரிசுத்த மாம்சத்தைக் கொண்டு போகையில் தன் வஸ்திரத்தின் தொங்கல்... எதை யாகிலும் தொட்டால் அது பரிசுத்தமாகுமா?" என்று கேட்டார். அதற்கு ஆசாரியர்கள் "பரிசுத்தமாகாது" என்றார்கள். "தீட்டுப்பட்டவன் தொடும் பொருள்கள் தீட்டுப்படுமோ?" என இரண்டாவதாகக் கேட்டதற்கு, ஆசாரியர்கள் "தீட்டுப்படும்" என்றார்கள்.*

இந்தக் கேள்விகள் மூலம் நாட்டுக்கு மீண்டும் வந்த பின் மக்களில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை விவரித்தார். நாடு கடத்தப்படுவதற்கு முன் அவர்கள் தீட்டுப்பட்டிருந்தார்கள். அவர்கள் பாவங்களின் விளைவால், அவர்கள் தொட்ட எல்லாமே அசுத்தமாய் இருந்தன. ஆனால் நாடுக டத்தப்பட்ட தண்டனையால் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டுவிட்டார்கள். இப்பொழுது ஆலயத்தைத் திரும்பக் கட்டும் அவர்களுடைய செயல் கள் பரிசுத்தமானவை எனக் கருதப்பட்டன.

அவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால் பரிசுத்தம் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவுகிறதில்லை. பாவமே அப்படிப் பரவுகிறது. ஆனால் பரிசுத்தமாவதற்குக் காலம் ஆகி றது. நம் கீழ்ப்படிதலின் மூலம் ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படுமானால், தேவனுடைய ஆசீர்வாதங்கள் கிருபையினாலல்ல, நமது கிரியைகளின் பலன் என்பதாகும். பரிசுத்தத்தை நோக்கி நாம் ஊக்கமடைவது, தேவன் மீது நாம் கொண்டுள்ள பயபக்தியினால் மட்டுமே இருக்கவேண்டும் - ஆசீர்வாதத்திற்காக நாம் கொண்டுள்ள ஆசையல்ல. அவர்கள் ஊக்கத்தை, ஆலயத்தைத் திரும்பக் கட்டி தேவனை சேவிப்பதில்



குவிக்கும்படி ஆகாய் தமது மூன்றாம் பிரசங்கத்தில் அவர்களைக் கேட்கிறார்.

## ஆகாயின் நான்காவது பிரசங்கம் (2:21-23)

அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, தங்களைப் பாது காத்துக் கொள்ள அவர்களிடம் ஒன்றுமே இல்லை. எழுபது ஆண்டு கள் சிறையிருப்பு மற்றும் அடிமை வேலைக்குப் பின், திரும்பவும் தேசங்களால் சிறைபிடிக்கப்பட்டு அடிமையாக்கப்படுவார்களோ என்று பயந்தார்கள்.

ஆகாயின் நான்காவது பிரசங்கம் அவர்கள் பயங்களைப் பற்றியது. அவர்கள் பயப்படும் தேசங்களை தேவன் விழத்தள்ளுவார் என்றும் வானங்களையும் பூமியையும் அசையப் பண்ணும் அவருடைய திட்டங் கள் பற்றியும் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார்.

தேவன் பூமியை அசையப் பண்ணுவார், அசைக்கப்படக் கூடாத வைகள் மட்டுமே பூமியில் மீந்திருக்கும் என ஆகாய் தமது நாலாவது பிரசங்கத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தார். எபிரெயர் நிருபத்தின் ஆக்கி யோன் ஆகாயின் இரண்டாவது பிரசங்கத்திலிருந்து மேற்கோள் காட்டு கிறார். *"நாம் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்கள்"* (எபிரெ யர் 12:26-29). அது தான் ஆகாயின் நாலாவது பிரசங்கத்தின் சாரம்.

## தனி நபருக்கு வாழ்க்கைப் பாடம்

இம் மாபெரும் தீர்க்கதரிசியின் பிரசங்கத்தை இன்று உன் வாழ்க் கைக்குப் பயன்படுத்திப்பார். உன்னுடைய முன்னுரிமைகள் யாவை? தேவன் உன் வேலையை ஆசீர்வதிக்கிறாரா? உன் ஆவிக்குரிய ஜீவி யத்தில் நீ எப்படி இருக்கிறாய்? இந்த நாடுகடத்தப்பட்டு மீண்டு வந்த வர்களின் தவறான முன்னுரிமைகளின் மீது வந்த தேவனுடைய நியா யத்தீர்ப்பில் மோசமான பகுதி என்னவென்றால் மனுஷர் மேலும் அவர் களுடைய கையின் கிரியைகளின் மேலும் வறட்சியை வருவித்தார். உன்னுடைய வாழ்க்கையிலும் ஆவிக்குரிய வறட்சியை அனுபவித்த தாக எப்போதாவது உணர்ந்திருக்கிறாயா? உன்னுடைய கரங்களின் பிர யாசத்தை தேவன் ஆசீர்வதிக்கவில்லையெனில் ஆவிக்குரிய வறட்சி யான இடங்கள் ஒன்றில் இருப்பதாக நீ கண்டால், உன் பக்திக்கடுத்த ஆகாயின் செய்தி என்னவெனில் "உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங் கள்" என்பதே.

உன்னுடைய தொலைநோக்குப் பார்வை எப்படி இருக்கிறது? உனது சரியான "மலைக்குகைபாதை பார்வை" எப்படி இருக்கிறது? நீ தொடர்ந்து எப்போதும் பின்னோக்கிப் பார்த்து உன் வாழ்க்கையில் தேவனுடைய கடந்த காலக் கிரியையை ஒப்பிட்டுப் பேசுகிறாயா? எனினும்,

ஆண்டவர், அவர் இன்றும் நாளையும் செய்யும் கிரியை மீது உன் கண் பதிய வேண்டும் என விரும்புகிறார்.

தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு ஊக்கத்தோடு இருக்கிறாயா? கர்த் தருக்காக உழைக்கும்போது உடனடி ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கி றாயா? உடனே உனக்கு பலன் கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கி றாயா?

உன்னுடைய பயங்கள் யாவை? உன் பாரங்கள் யாவையும் அவர் மேல் வைத்து விடு. ஏனென்றால் அவர் உன்னை விசாரிக்கிற வராயி ருக்கிறார் (1 பேதுரு 5:7) என் ஆகாய் பேதுருவோடு சேர்ந்து சொல்கி றார். ஆகாயின் தீர்க்கதரிசனத்தை உன் தொலை நோக்குப் பார்வை, உன் நோக்கங்கள் மற்றும் பயங்களைப் பற்றிப் பார்க்கட்டும்.

---



### அத்தியாயம் 11

## சகரியாவின் தீர்க்கதரிசனம்

ஆகாய், தன் சிறந்த செய்திகளைப் பிரசங்கித்தபோது, அவரை விட இளையவரான சகரியா தீர்க்கதரிசி, மூத்த தீர்க்கதரிசியான ஆகா யிடம், "ஆகாய், பாதுகாப்பற்ற எளிய மக்களுக்குத் தங்களைக் காத் துக் கொள்ள வழியே இல்லாதபோது அவர்கள் நம்பிக்கையற்று சோர்ந்து போகும்போது, உதவியற்று, தோற்றுப் போன மக்கள் பயமுறுத்தப்ப டும்போது, "திடன் கொண்டு வேலை செய்யுங்கள்," என்ற செய்திக்கும் மேலாக செய்தி தேவை" என்று கூறினார். மக்கள் ஒரு இக்கட்டான சூழ்நிலையை அல்லது ஒரு இழப்பை அனுபவிப்பதால் மிகவும் சோர் வடைந்து போகும் போது, அவர்கள் பார்க்கக் கூடியதெல்லாம், அவர் களுக்கு வந்த இக்கட்டினால் ஏற்பட்ட துக்கம் நிறைந்த சர்ந்தர்ப்ப சூழ்நிலைகள் தாம்.

தீர்க்கதரிசிகள் "ஞானதிருஷ்டிக்காரர்கள்" என அழைக்கப்பட்டார் கள், ஏனெனில் தேவன் ஒரு உச்சக்கட்டத்திற்குப் பின்னாலும், அதற்கு அப்பாலும் கிரியை செய்வதை அவர்களால் காண முடிந்தது. மற்ற மக் கள் காணாததை ஞானதிருஷ்டிக்காரன் கண்டான்; ஏனென்றால் அவன் தேவனைக் கண்டான். முழு வேதாகமத்திலும் உள்ள ஞானதிருஷ்டிக்கா ரர்களில் சகரியா மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒருவராவார்.

உடைந்து நொறுங்கிப் போன உள்ளம் கொண்ட யூதா மக்களுக்கு தங்களோடிருந்து, தங்களை பலப்படுத்தக் கூடியவரும், தங்களுக்கா கப் போரிடக் கூடியவருமான சர்வ வல்லமையுள்ள தேவனைப் பற்றிய தரிசனம் தேவையாயிருந்தது என சகரியா நம்பினார். தோற்றுப்போன, சோர்வடைந்த துன்பத்திலிருந்த அகதிகளுக்கு, தேவனைப் பற்றிய அப் படிப்பட்ட தரிசனத்தைத் தர, தேவன் சகரியாவின் பிரசங்கத்தைப் பயன் படுத்தினார்.

## சகரியாவின் இலக்கிய வடிவம்

இந்த நாடுகடத்தப்பட்டு மீண்ட மக்களோடும், உங்களோடும் என்னோடும் எட்டுத் தரிசனங்களில் தீர்க்க தரிசனத்தை சகரியா பகிர்ந்து கொள்கிறார். சிறையிருப்பிலிருந்து தப்பிய யூதர்களின் சோர்வு மற்றும் தளர்ச்சி அடைந்த பிரச்சனையைச் சுட்டிக் காட்டுவார். பின்னர் ஒரு கற்பனைத் திரையை விலக்கி, அந்தப் பிரச்சினைக்குப் பின்னால் தேவன் எவ்விதம் கிரியை செய்கிறார் என்ற வெளிப்பாட்டைப் பகிர்ந்து கொள்வார். செயல்திறம் மிக்க இந்த தீர்க்கதரிசனத்தில் எட்டு முறை அப்படிச் செய்வார். இதுவே சகரியா புத்தகத்தின் இலக்கிய வடிவம்.

## சகரியாவின் செய்தி

“என்னிடம் திரும்புங்கள் நானும் உங்களிடத்தில் திரும்புவேன்,” என்பதே சகரியாவின் மூலம் தேவன் தரும் செய்தி. இன்று இஸ்ரவேல் நாட்டிலுள்ள யூதர்கள் போல, இந்த நாடு கடத்தப்பட்ட மக்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்புவதை அநேக தீர்க்கதரிசிகள் முன்னறிவித்ததை போல அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். சகரியாவின் பிரசங்கத்தின் மூலமாக, தேவன் தம்முடைய மக்கள், ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு பட்டணத்திற்கோ ஆலயத்திற்கோ அல்ல, தம்மிடத்திற்கே திரும்பும்படிக் கேட்கிறார். அது இன்றைய இஸ்ரவேல் மக்களிடம் நடக்காவிடினும், சகரியா, பிற தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் முன்னுரைப்பது என்னவெனில் *“இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்”* என்பதே, (சகரியா 8:20-23; ரோமர் 11:26; ஏசாயா 59:20, 21).

ஐம்பத்தி மூன்று முறை சகரியா ‘சேனைகளில் கர்த்தர்’ என்ற பதத்தை உபயோகிக்கிறார். தேவதூதர், நட்சத்திரங்கள் மற்றும் அனைத்து இயற்கை சக்திகள் ஆகியவற்றை தம் நோக்கங்களை நிறைவேற்ற தேவன் பயன்படுத்துகிறார். இவையெல்லாவற்றையும் குறிக்கும் சொற்றொடரே “சேனைகளின் கர்த்தர்” என்பது. சகரியாவின் தீர்க்கதரிசனங்கள் அனைத்தையும் இந்தச் சொற்றொடர் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. ஏனென்றால், தேவனுடைய மக்கள் அரசியல்ரீதியாகவும், இராணுவத்தி லும் முற்றிலும் பலமற்றவர்களாக இருந்த காலத்தில், தன் எல்லாத் தரிசனங்களிலும் தேவனை “சேனைகளின் கர்த்தராகவே” சகரியா கண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

தேவனுடைய மக்கள் சார்பாக, சேனைகளின் கர்த்தர் மூன்று வழிகளில் கிரியை செய்வதை சகரியா கண்டார். முதலாவது, சேனைகளின் கர்த்தரே அங்கிருந்தார். இரண்டாவதும் மிக முக்கியமானதுமான வழி என்னவெனில் ‘கிளை’ என சகரியாவால் அழைக்கப்படும் ஒரு புருஷனால் மக்கள் திரும்ப அவரிடம் வருவார்கள். ஏசாயாவிலுள்ள அறுபத்தி ஆறு அதிகாரங்களைத் தவிர்த்து, மற்றெந்த தீர்க்கதரிசியையும் விட, சகரியாவின் பதினான்கு அதிகாரங்களில் மேசியாவின் தீர்க்கதரிசனங்கள் அதிகம் காணப்படுகின்றன. சகரியாவின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக மேசியா வந்த பொழுது தேவனுடைய மக்களிடம் கிறிஸ்து தெளிவாகவும், அழுத்தம் திருத்தமாகவும் *“நானே வழி... என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”* (யோவான் 14:6) எனக் கூறினார்.

சகரியா பிரசங்கித்த மூன்றாவது வழி என்னவென்றால் தேவன் நம்மிடம் திரும்பி வந்து, நம்மை அவருடன் சேர்த்துக் கொள்ளும் பெந்தெகொஸ்தே வாக்குத்தத்தம்: *“பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்”.* - பெந்தெகொஸ்தே நாளின் மாபெரும் அற்புதத்தையும், அந்த நாளில் தேவனுடைய மக்கள் மேலும் வரும் அனைத்து ஆசீர்வாதங்களையும் சகரியா முன்னறிவித்தார்.

இவ்விதமாக, திரித்துவத்தை சகரியா அழகாகப் படமெழுதிக் காட்டுகிறார். சேனைகளின் கர்த்தர் பிதாவாகிய தேவன்; பிதாவாகிய தேவனிடம் குமாரன் எனும் கிளை மூலமாகத் திரும்ப வேண்டும். தேவனுடைய மக்கள் குமாரன் மூலமாகப் பிதாவினிடம் வரும்போது, குமாரன் அவர்களுக்குப் பெந்தெகொஸ்தே வல்லமையைத் தருவார்.

## சகரியாவின் எட்டு தரிசனங்கள்

‘அப்போகாலிப்ஸ்’ என்ற கிரேக்க பத்திற்கு ‘வெளிப்பாடு’ என்று பொருள். வெளிப்பாடு என்றால் திரையை விலக்குதல் “அப்போகாலிப்ஸ்” என்றால் “திரையை பின்னுக்குத் தள்ளி, மற்றபடி பார்க்க முடியாததை வெளிப்படுத்துவது” என்று பொருள். சகரியா எட்டு முறை திரையைப் பின்னுக்குத் தள்ளி, திரைக்குப் பின்னால் தேவன் செயலாற்றும் காட்சியை தேவனுடைய மக்களுக்குக் காட்டுவது. பலமிழந்த தேவனுடைய மக்களுக்குப் பெலனளிக்கவும், நம்பிக்கையற்று வருந்தும் தேவனுடைய மக்களுக்கு நம்பிக்கையளிக்கவும் தேவன் சகரியாவுக்கு அந்தத் தரிசனங்களை அளித்தார்.

### தரிசனம் ஒன்று: பள்ளத்தாக்கில் இருக்கிற மிருதுச் செடிகள் தரிசனம் (1:7-17)

வேத பண்டிதர்களின் கூற்றுப்படி, பள்ளத்தாக்கில் மிருதுச் செடிகளுக்குள்ளே நின்ற மனிதன், இந்த நாடுகடத்தப்பட்டு மீண்டு வந்த மக்களின் நிலைமையில் கடினமான அனுபவத்தைக் குறிப்பவனாக இருந்தான். அடிமை வேலை மற்றும் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து அற்புதமான விதமாகத் திரும்பி வந்தது, மற்றும் இடிபாடுகளை மாற்றி ஆலயமாகக் கட்டியெழுப்புவது ஆகிய இரண்டிற்குமிடையே உள்ள

காலம் இந்த மக்களுக்கு அதிகமாக சோர்வைத் தந்தது. அதாவது,அவர்கள் பள்ளத்தாக்கின் அடிமட்டத்தில் இருந்தார்கள். கண்ணுக்குத் தெரியுமாப்போல் ''திரைக்கு முன்னால்'' இருக்கும் பிரச்சினை (தடை) என்னவெனில் அவர்கள் ஒரு தேசமாகவே இல்லை என்பது, மேலும் அவர்கள் பரிதாபமாகக் காட்சியளிக்கும் அகதிகளாக இருந்தார்கள். இவை அவர்களைச் சோர்வடையச் செய்தன. நாமெல்லாருமே அனுபவிக்கும் மாற்றங்களின் பயங்கரமான காலங்களொன்றிலே அவர்கள் இருந்தார்கள்.

சகரியா திரையைப் பின்னுக்குத் தள்ளியபோது, சேனைகளின் கர்த்தரைக் கண்டார். தேவன் தம்முடைய மக்களின் மாறிவரும் காரியத்தைக் கண்டார்; அது அவருக்குத் தெரிந்திருந்தது. தம் மக்களின் சிறையிருப்பை இயற்கைசக்திக்கும் மேலாக நின்று ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். தமது நேரத்தில், தமது வழியில் அவருடைய மக்களை முழுவதுமாகப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து, அவர்களுடைய ஆத்துமாக்களையும் திருப்பி, தேவன் அவர்களுக்காகக் கொண்டுள்ள தமது திட்டத்தை நிறைவேற்றுவார்.

தேவன் நம் வாழ்க்கையில் ஒரு புதிய காரியத்தைச் செய்ய விரும்பினால், ஒரு புதிய இடத்துக்கு நம்மை அழைத்தால், நம்மில் அநேகர், மூன்று தடைகளைச் சொல்வோம். அடிப்படையில் நாம் பாதுகாப்பு விரும்பும் மக்கள். நாம் இப்பொழுது வாழ்ந்து, ஊழியம் செய்து கொண்டிருக்கும், பழகிப்போன பாதுகாப்பான கூட்டை விட்டுச் செல்ல நாம் விரும்புவதில்லை. ஆகவே அவர் நம்மைப் புதிய இடத்திற்குக் கூட்டிச் செல்லுமுன், பழைய இடத்திலிருந்து நம்மைக் கிளப்ப வேண்டும். ஆகவே தான் தேவனுடைய அழைப்புக்கு எப்போதும் இரு பக்கங்கள் உண்டு என்கிறோம் - முன்னாலிருந்து இழுப்பது; பின்னாலிருந்து ஒரு தள்ளு தல்ளுவது. வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், நம்மைப் புதிய இடத்திற்குக் கொண்டு போவதற்கு தேவன் நம்மைப் பழைய இடத்திலிருந்து பெயர்த்தெடுக்க வேண்டியுள்ளது. உன்னில் அந்த அற்புதத்தை அவர் செய்த நேரங்களை உன்னால் நினைக்க முடிகிறதா? அந்த அற்புதங்களை நான் ''தெய்வீக இடைபடுதல்'' என்கிறேன்.

நாம் பழையதிற்கும் புதியதிற்கும் இடையே இருக்கும்போது, நம் தேவன் நாம் தொடர்ந்து செல்லும்படிச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் நமது நிலையிலிருந்து அவர் நம்மைக் கரைசேர்க்க முடியும். புதிய இடத்தில் நம்மை அமர்த்துவதற்கும், நம் வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் புதிய காரியத்தைச் செய்வதற்கும் அவர் நம்மைச் சீர்ப்படுத்த வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்த நேரத்தில், தேவன்



அவர்களை வாக்குத்தத்த பூமிக்குக் கொண்டு வர விரும்பினபோது அந்த அற்புதத்தை இப்படிச் சொன்னார். *''தேசத்துக்கு எங்களை அழைத்துக் கொண்டு போய், அதை நமக்குக் கொடுக்கும்படி எங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப் பண்ணினார்''* (உபாகமம் 6:23).

## தரிசனம் இரண்டு: நான்கு கொம்புகள் (1:18-21)

வேதத்தில் கொம்புகள், வல்லமையின் அடையாளம். அவர்கள் பயத்தை அதிகப்படுத்திய, திரைக்கு முன்னாலிருந்த, தடை என்னவெனில், அவர்கள் பலம் வாய்ந்த தேசமாயிருந்தபொழுது, அவர்களை வெற்றி கொண்டு அடிமைப்படுத்திய உலக சாம்ராஜ்யங்களின் பயங்கரமான வல்லமைதான். உலக வல்லரசுகள் அவர்களை மறுபடியும் எளிதாக வென்று அடிமைப்படுத்த முடியும்.

சகரியா திரையைப் பின்னுக்கு இழுத்து, திரைக்குப் பின் அவர் கண்டதை, இந்த மக்களுக்குச் சொன்னது, அவர்களுக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது. திரைக்குப் பின்னால், தங்களை வென்று அடிமை கொள்வார்கள் என்று பயந்த உலக வல்லரசுகளை- அந்த ''கொம்புகளை'', சேனைகளின் கர்த்தர் அழிக்கப் பயன்படுத்தப் போகும் வல்லரசுகளை சகரியா காட்டினார்.

## தரிசனம் மூன்று: எருசலேம் நகரம் (2:1-4, 10-13)

ஒரு காலத்தில் அழகான நகரமாயிருந்த எருசலேம் நகரம் இடிபாடுகளாய்க் கிடப்பது தான் திரைக்கு முன்னாலுள்ள பிரச்சினை (தடை) சகரியா திரையைப் பின்னுக்கிழுத்தபோது, திரைக்குப் பின் அழகாய் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட எருசலேமை அவர் கண்டு, மக்களுக்கு வெளிப்படுத்தினார் இந்த வெளிப்பாடு, வெறும் குப்பை கூளமாக இருந்த இடம் ஒரு மாபெரும் நகரமாக - மதில்கள் தேவைப்படாத எருசலேமாக இருக்கப் போகிறது என்று காட்டியது.

எருசலேமும் தேவாலயமும் நகரத்தில் மீண்டும் கட்டப்பட்டன. இந்த தேவாலயத்திற்கு இயேசுவானவர் அநேக முறை சென்றார். இயேசுவானவருக்கு நாற்பது ஆண்டுகளுக்குப் பின் ரோம சாம்ராஜ்யம் எருசலேம் நரகரத்தைத் தரைமட்டமாக்கியது. பின்னர் இன்று இருப்பது போல அது திரும்பக் கட்டியெழுப்பப்பட்டது. கி.பி. 70ல் ரோமாபுரி எருசலேமை அழித்தபோது, மிருகங்களை பலியிட்டு நடைபெறும் வழிபாட்டு முறை முழுவதும் கைவிடப்பட்டது. கிறிஸ்துவுக்கு முன் எருசலேம் மீண்டும் கட்டப்பட்டபோது, சகரியாவின் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியது. இந்த தீர்க்கதரிசனம், அப்போஸ்தலனாகிய யோவானால் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட புதிய எருசலேமில் முழுமையாக நிறைவேறும். (வெளிப்படுத்தல் 21:2).

## தரிசனம் நான்கு - சகோதரரைக் குற்றப்படுத்துபவன் (3:1-2, 8-10)

பிரதான ஆசாரியனான யோசுவா அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் காட்சியளித்த தரிசனம் மக்களை சோர்வடையச் செய்தது; திரைக்கு முன்னாக சகரியா காட்டிய பிரச்சினையும் இதுவே. இந்தத் தரிசனத்தில் சாத்தான் யோசுவாவைக் குற்றப்படுத்திக் கொண்டிருந்தான். விக்ரகாராதனைப் பாவத்தின் பயங்கரமான கறை, சிறையிருப்பின் அனுபவத்தின் மூலம் கழுவப்பட்டு மன்னிக்கப்பட்டிருந்தது. அதைத் தான் பொல்லாங்கன் குற்றஞ் சாட்டுவதற்குச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கலாம்.

சாத்தான் பாவத்தின் கறைகளை அல்லது மன்னிக்கப்பட்ட பாவத்தின் விளைவுகளைச் சுட்டிக்காட்டி இரவும் பகலும் சகோதரரைக், குற்றப்படுத்துகிறான். வெளிப்படுத்தல் புத்தகத்தில், பொல்லாங்கனின் இந்தக் காரியங்கள் தோற்கடிக்கப்பட்ட பின் இரட்சிப்பும் வல்லமையும், நமது தேவனுடைய ராஜ்யமும், கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கும் (வெளிப்படுத்தல் 12:10) எனக் கூறப்பட்டுள்ளது.

சகரியா திரையைப் பின்னுக்கிழுக்கும்போது திரித்துவத்தைப் பற்றிய வெளிப்பாட்டைக் கண்டு மக்களுக்கு வெளிப்படுத்துகிறான். - சேனைகளின் கர்த்தர் என நாம் அழைக்கும் மேசியாவின் மூலம் தேவனுடைய அன்பும், வல்லமையும் வெளிப்படும். அவர் பரிசுத்த ஆவியானவரையும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் ஒரு பகுதியான வருங்கால அற்புதங்களையும் காண்கிறார்.

## தரிசனம் ஐந்து: பொன்னாலான குத்து விளக்கு எண்ணெயுள்ள கிண்ணங்கள், அகல்கள் மற்றும் குழாய்கள் (4:1-7)

நாடு கடத்தப்பட்டு மீண்டு வந்த யூத மக்களின் கீழ்த்தரமான ஒழுக்கக்கட்டுப்பாட்டுக்குக் காரணமாக, திரைக்கு முன்னால் இருந்த பிரச்சினை என்னவெனில் தேவனுடைய வார்த்தையை உலகெங்கும் பகிர்ந்து கொள்ள தேவன் அளித்த பொறுப்பு. தேவாலயத்தின் இடிபாடு, நகரம், அவர்கள் தேசம், அவர்களுடைய சொந்த வாழ்க்கை - இவை எல்லாமே, தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் ஆசிரியர்களாக அல்லது முன் மாதிரிகளாக வைப்பதில் தவறிப்போனவர்கள் என்று அவர்களை உணரச் செய்தது.

வியாதி, மனச்சோர்வு அல்லது பொல்லாங்கன் உனக்கு விரோதமாய்க் கூறும் இந்த குற்றச்சாட்டுகளினாலுண்டான வேறு விதமான ஆவிக்குரிய தோல்விகள் மூலமாக ஆவிக்குரிய வனாந்தரத்தில்



எப்போதாவது இருந்திருக்கிறாயா? அப்படிப்பட்ட பலவீனமான நேரங்களில், "நீ உலகத்துக்கு மாதிரியாக இருக்க வேண்டியவன் நீ பூமிக்கு உப்பாகவும் உலகுக்கு ஒளியாகவும் இல்லையா?'' என்று அவர் மெல்லக்கேட்பது உன் காதில் விழுகிறதா?

சகரியா திரையை விலக்கிய போது பரிசுத்த ஆவியைக் குறிக்கும் எண்ணெய் உள்ள ஒலிவ மரங்கள், குழாய்கள், கிண்ணங்கள் அகல்களைக் கண்டார். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்'' (4:6). எதைச் செய்யும்படியாக தேவன் அவர்களை அழைக்கிறாரோ, எதைச் செய்யும்படியாக அவர்களை அவர் அழைக்கிறாரோ அதைப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாகச் செய்ய தேவன் அவர்களைப் பலப்படுத்துவார் என்ற நிச்சயத்தை இந்த தரிசனம் தந்தது. இங்கே தான் யோவேல் தீர்க்கதரிசியைப் போல சகரியாவும் அற்புதமான பெந்தெகொஸ்தே நாளைப் பற்றி அருமையான தீர்க்கதரிசனத்தைத் தருகிறார்.

## தரிசனம் ஆறு: பறக்கும் சுருள் (5:1-4)

இந்தத் தரிசனத்தில், திரைக்கு முன்னால் இருக்கும் பிரச்சனை என்னவெனில் நாடு திரும்பிய மக்கள் தீமையின் வல்லமை மற்றும் பிரச்சினையில் மூழ்கிப் போனார்கள். நாம் வாழும் உலகின் ஒரு பகுதி மோசமாயிருக்கும்போது, ஞானமற்ற செயலாயிருந்தாலும் கூட, தீமையின் பயங்கரமான வல்லமையில் மூழ்கிப்போவது சுலபந்தான். தீமையின் பயங்கரமான அலைக்கழிப்பும் கொடுமையும் தேவனுடைய மக்கள், "தீமையான படைகளின் பயங்கரமான வல்லமையை, தேவனுடைய படைகளோ நன்மையான சக்திகளோ ஒருபோதும் மேற்கொள்ள முடியாது'' என நினைக்க வைக்கின்றன.

சகரியா, அவர் கற்பனையினாலான திரையை திரும்பவும் நீக்கிய பொழுது, திரைக்குப் பின்னால் பார்த்ததை, பிரசங்கத்தின் மூலம் மக்களுக்குத் தெரிவித்தார் - சேனைகளின் கர்த்தர் தீமையின் சக்திகளை மேற்கொள்ள தம்முடைய மக்களை ஆயத்தப்படுத்தக் கூடியவர். சகரியாவின் இந்த தரிசனத்தின்படி, தேவன் தீமையைக் கட்டுப்படுத்துகிறார், மட்டுப்படுத்துகிறார், எப்படியோ தம்முடைய மகிமைக்கெனவும், தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றவும் தீமையைப் பயன்படுத்துகிறார். தீமையில் நன்மை எதுவுமே இல்லையென்றாலும், தம்முடைய மக்களைப் பொறுத்த விஷயத்தில், நன்மைக்கேதுவான தமது திட்டத்தில் தீமையை தேவன் பொருந்தச் செய்கிறார் (ஏசாயா 45:7; ரோமர் 8:28).

## தரிசனம் ஏழு: மரக்காலில் உட்கார்ந்திருந்த ஸ்திரீ (5:5-11)

சகரியா திரையைப் பின்னுக்கு இழுத்த போது, இந்தத் தரிசனத்தில் திரைக்கு முன்னால் சகரியா கண்ட பிரச்சினை உலகின் சந்தையிடங்களிலிருந்த நேர்மையற்ற நிலை. சகரியா திரையை விலக்கியபொழுது, சந்தையிடங்களிலுள்ள நேர்மையற்ற நிலை சேனைகளின் கர்த்தரால் மட்டுப்படுத்தப்பட்டு கடைசியில் தடுக்கப்படுகிறது.

நமக்கு விளங்காவிடினும், தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றவும், தம்மை மகிமைப்படுத்தவும் தீமையைப் பயன்படுத்துகிறார். நகை வியாபாரி தன் வைரங்களைப் பார்வைக்கு வைக்கக் கருப்புப் பின்னணியைப் பயன்படுத்துவது போல, இவ்வுலகின் சந்தையிடங்களிலுள்ள தீமை என்னும் இருண்ட பின்னணியில், தேவன் நிபந்தனையற்ற தம் அன்பை வெளிப்படுத்துகிறார். தம் மக்களை மன்னித்து, சிறையிருப்பிலிருந்து விடுவிப்பதிலே அந்த அன்பு வெளிப்பட்டது; நாம் தேவனிடத்தில் திரும்பவும், தேவன் நம்மிடத்தில் திரும்பவும் ஏதுவாயிருக்கும் இரட்சிப்பின் மூலமாக இன்னும் அவை வெளிப்படுத்தப்படும்.

## தரிசனம் எட்டு: நாலு இரதங்கள் (6:1-8)

இந்தத் தரிசனத்தில் சகரியா முன் வைக்கும் பிரச்சினை சீர்கெட்டுப்போன மனித அரசாங்கங்களினால் தேவனுடைய மக்கள் மனித ஆட்சியில் நம்பிக்கை அற்றுப் போகுமளவிற்கு மனித ஆட்சி கெட்டுப் போயுள்ளது. இன்று உலகம் முழுவதிலுமே லஞ்சமும், அரசியலில் ஊழலும் பெரிய அளவிற்கு நிறைந்திருப்பதால், நேர்மையுள்ள ஆட்கள் அரசியல் நடை முறையிலும், அரசியல் தலைவர்களிலுமுள்ள தங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள்.

திரைக்குப் பின் சகரியா பார்த்ததும் மீகா தீர்க்தரிசியின் செய்தியும் ஒரே மாதிரி தான் இருக்கிறது. மாசற்ற ஒரே அரசாங்கம் தேவனுடைய ராஜ்ஜியம் தான். ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும் அரசாட்சி செய்யும் வரை ஏதாவது ஓரளவுக்காவது மாசு இல்லாத அரசு இருக்காது, இருப்பினும் முந்திய இரண்டு தரிசனங்கள் போல் தேவன் பொறுப்பேற்றுள்ளார். சேனைகளின் கர்த்தர் இறையாண்மை பெற்றவர். தேவனுடைய இராஜ்ஜியத்தின் அரசாங்கம் சீரான அமைப்புடைய, ஒழுங்கான, பூரண ஒற்றுமையுள்ள நிர்வாகமாயிருக்கும்.

## சகரியாவின் மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள்.

தேவனுடைய மக்களின் தலைவர்கள் மேசியா விடுவிப்பவர் என்று நம்பவில்லை. அப்படி நம்பிய மக்கள், அவர்கள் நம்பாததால் சோர்வடைந்தார்கள். சகரியாவின் மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள், தேவனே ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் அரியணையிலேறி



கடைசியில் தீர்க்கதரிசி, ஆசாரியன், ராஜா என்ற வேலைகளை ஒன்றாய் இணைத்து ஆயிர வருட அரசாட்சி செய்வார்.

மேசியாவின் முதல் வருகையைப் பற்றி முன்னறிவிக்கப்பட்ட சகரியாவின் தீர்க்கதரிசனங்களில் சில: 3:8; 9:9,16; 11:11-13; 12:10; 13:1,6 மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள் மேசியாவின் இரண்டாம் வருகையைப் பற்றியும் கூறியுள்ளன. (6:12; 8:20-23; 14:1-9) இந்தத் தீர்க்கதரிசனங்களில் ஒன்று யூதர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் திரும்பி வருவது. அறிஞரில் சற்றுப் பழமைவாதிகள் இந்த தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி பெந்தெகொஸ்தே நாளிலும் கடைசி நாட்களின் காலத்திலும் நிறைவேறும் (8:20-23) என்று நம்புகின்றனர்.

அத்தியாயம் 12

# மல்கியாவின் தீர்க்கதரிசனம்

கடந்த சில ஆண்டுகளாக, வட அமெரிக்காவில் ஆவிக்குரிய தலைவர்களிடம் ஒழுக்கம் சீர்கேடும் ஆவிக்குரிய தோல்வியுமான தொற்று வியாதி காணப்படுகின்றது. ஆவிக்குரிய தலைவர்களுக்கான செய்தியை பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் தருகிறது. *"ஜனங்களுக்கு எப்படியோ ஆசாரியனுக்கும் அப்படியே"* (ஓசியா 4:9) அல்லது ஆசாரியன் எப்படியோ அப்படித் தான் ஜனங்களும் என ஓசியா மிகச் சரியாகச் சொல்லியுள்ளார். தேவனுடைய மக்களுக்கும், தேவனுடைய ஊழியத்திற்கும் மற்றும் தேவனுடைய மகிமைக்கும் பேரழிவைக் கொண்டு வருவது ஆவிக்குரிய தலைவர்களின் வீழ்ச்சி தான். ஒரு ஆவிக்குரிய தலைவனின் வீழ்ச்சியின் உள்ளமைப்பை (anatomy) மல்கியா விவரித்துக் கூறுகிறார். தேவனுடைய மக்கள், அந்த மரணத்திற்கேதுவான வழியை எப்படித் தடுக்கலாம்; அவர்கள் வீழ்ந்து விட்டால் தேவனோடு அறுந்த தொடர்பை திரும்ப எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் எனக் காட்டுவதே அவர் நோக்கமாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன் ஆகாயும் சகரியாவும் கூறியதையும், பத்து ஆண்டுகளுக்கு முன் நெகேமியா கூறியதையும் மல்கியா தொடர்ந்து கூறினார். நெகேமியா சந்தித்த அதே பிரச்சினைகள் தொற்று வியாதிபோல் இருப்பதை மல்கியாவும் சந்தித்தார் - விவாகரத்து, ஒழுக்கச் சீர்கேடு சீர் கெட்டுப்போன ஆசாரியத்துவம் முதலியன (நெகேமியா 13:23-25). இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் சீர்கெட்ட ஆசாரியத்துவத்தைக் காரணம் காட்டி, யூத மக்களின் மேய்ப்பர்களாயிருந்த ஆவிக்குரிய தலைவர்களுக்கென்றே மல்கியா தம் செய்திகளை அமைத்தார்.

ஆசாரியர்கள் தேவனுடைய வழிகளை விட்டுவிட்டனர், தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. அவபக்தியான அவர்கள் ஆலோசனையினால் அநேகரைப் பாவஞ்செய்யப் பண்ணுகிறார்கள்; எல்லா மக்களுக்



கும் முன்பாக ஆசாரியர்களின் நடக்கை அற்பத்தனமாய், கேடானதாக இருந்தது. அவர்கள் ஆசாரியத்துவத்தை போலியான கேலிக்கூத்தாய் மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

தேவனுடைய மக்கள் பக்தியற்ற மதசடங்காச்சாரத்தைப் பின்பற்றி, தேவனுடன் இருக்க வேண்டிய தொடர்பை 'இல்லை' என்றாக்கிக் கொண்டிருந்த காலத்தில் மல்கியா தீர்க்கதிரிசியாயிருந்தார். ஆவியிலே குளிர்ந்தவர்களாய், பக்தியுள்ள தீர்க்கதரிசிக்கு வேதனை தரக்கூடிய அளவிற்கு நிர்விசாரிகளாய் இருந்தார்கள். யூத மக்களின் ஆவிக்குரிய தலைவர்களுக்கு மல்கியா ஒரு எச்சரிப்பாக, ஜீவனற்ற ஒழுங்கும் அமைப்பும் உயிரற்ற சடலம் போன்றதே என தீர்க்கதரிசனம் உரைத்தார்.

பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி, சகரியாவைப் போல் தரிசனங்களையோ அல்லது ஆகாயைப் போல் தேவாலயத்தைக் கட்டச் சொல்லி அறைகூவல் விடுக்கவோ இல்லை. தேவன் தம்முடைய மக்களோடு அன்பினால் தொடர்பு கொள்ள விரும்பினார். ஆனால் ஆசாரியர்களும் யூதா மக்களும் தேவனை அறிந்துகொள்வதிலோ அவரை நேசிப்பதிலோ அக்கறை காட்டவில்லை என்பதே மல்கியாவின் இருதயத்தின் பாரமும் செய்தியுமாயிருந்தது. தேவனுடைய மக்கள் உலக சிநேகம் எனும் ஆவிக்குரிய விபசாரம் எனும் பாவத்தைச் செய்து கொண்டிருப்பதாக, ஓசியாவைப் போல் மல்கியாவும் நம்பினார்.

உயிர்த்தெழுந்த, ஜீவிக்கின்ற கிறிஸ்து எபேசுப் பட்டணத்திலிருந்த முதல் தலைமுறை சபைக்கு நிருபம் எழுதியபோது *"நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்"* என அவர்களைக் கடிந்து கொண்டார். இந்த பக்தியுள்ள தீர்க்கதரிசி சுட்டிக்காட்டின பிரச்சினை - என்னவெனில், யூதர், அதிலும் விசேஷமாக அவர்களுடைய ஆசாரியர்கள், தங்கள் ஆதி அன்பை விட்டுவிட்டார்கள். தேவனோடு அவர்கள் கொண்டிருந்த உறவை மறந்து - அவர்கள் பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அவர் தமது தீர்க்கதரிசனத்தை இந்த அழகான வார்த்தைகளோடு ஆரம்பிக்கிறார்: *"மல்கியாவைக் கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம். நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"* (1:1, 2). மக்கள் வேதத்தை முழுவதுமாக வாசித்து வருகையில், புதிய ஏற்பாட்டுக்கு வரும்வரை தேவனுடைய அன்பைப் பற்றி வாசிக்க எதிர்பார்க்கிறதில்லை - முக்கியமாக, மலைப் பிரசங்கம். தீர்க்கதரிசிகளின் வார்த்தையில் தேவனுடைய அன்பு பற்றிய கருத்தை அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. ஏரேமியாவின் புலம்பல், ஓசியா, யோனா, மல்கியா போன்ற புத்தகங்களின் தீர்க்தரிசன எழுத்துக்களில் தேவனுடைய அன்பே மையக் கருத்தாயுள்ளது.

மல்கியாவின் தீர்க்கதரிசன பாரம். தேவன் யூத மக்களையும் ஆசாரியர்களையும் நேசித்தார் என்பது. மல்கியா பிற தீர்க்கதரிசிகளோடு

சேர்ந்து தம் இருதய பாரத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது, நிபந்தனை ஏதுமின்றி தேவன் தமது மக்களை நேசிக்கிறார் என்றும் அவர்களோடு அன்பிலே உறவு கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினா ரென்றும் அறிவித்தார்.

தேவனுடைய அன்பு நிபந்தனையற்றதாயிருப்பினும், தேவன் பக்க மாய் அவர்கள் இருதயம் கடினமடைந்து, அவர்கள் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்ததால், ஆசாரியர்களும், யூத மக்களும் தேவனுடைய அன் பான இருதயத்தைக் காயப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என மல்கியா பிரசங்கித்தார். விசுவாசத்தைக் கைவிட்ட, குளிர்ந்த இருதயமுள்ள, பாவம் செய்யும் ஆசாரியர்கள் மற்றும் யூத மக்களுக்கு, தேவனோடு அவர்கள் கொண்டிருந்த உறவு எப்படி முறிந்து போனது என்றும், அந்த உறவை எப்படி மீண்டும் புதுப்பிக்கலாம் என்றும் காட்டுவதே மல்கியாவின் பார மாயிருந்தது. மல்கியாவின் தீர்க்கதரிசனப் பணியின் நோக்கம் ஆசாரி யர்களின் இருதயங்களிலும், அவர்கள் பாதுகாக்க வேண்டிய மக்களு டைய இருதயங்களிலும் எழுப்புதல் வரவேண்டும் என்பது.

### மல்கியாவின் இலக்கியப் பாணி

ஆபகூக்கைப் போலவே திறமையான இலக்கியப் பாணியை மல் கியா கையாண்டார். முரட்டாட்டம் பண்ணும் விடலைப் பையனிடம் (teen ager) பெற்றோராக, பேச முயன்றிருக்கிறீர்களா? அப்படியானால், தேவன் தமது மக்களுக்குச் சொல்லும்படி மல்கியாவுக்குக் கொடுத்த செய்தியை சொல்ல, மல்கியா தெரிந்து கொண்ட இலக்கியப் பாணியை (கூறும் விதம்) நீங்கள் மெச்சிக் கொள்வீர்கள். ஆபகூக்கைப் போல, மல்கியாவுடைய பாணியும் ஒரு இலக்கிய 'விவாதம்' போல் அமை ந்துள்ளது.

ஆசாரியர்களும் யூத மக்களும் எங்கு, எப்படி தேவனோடு தாங் கள் கொண்டிருந்த தொடர்பிலிருந்து வழி விலகிப் போனார்கள் என்று காட்ட மல்கியா தம் தீர்க்கதரிசனத்தில் எடுத்துக் கூற முயல்கிறார். அவர் இப்படிச் செய்யும் ஒவ்வொரு தடவையும் தேவனுடைய மக்கள் அதை மறுக்கிறார்கள் - இளைஞனிடம் பெற்றவர் ஏதாவது கேட்டால், "யார் ? நானா?" அல்லது "எப்போது நாங்கள் அப்படிச் செய்தோம்?" என்பது போல மறுத்தார்கள். தேவன் இந்தக் குற்றச் சாட்டுகளை வைக்கிறார் என தீர்க்கதரிசி கூறுகிறார். மக்களோ அனைத்துக் குற்றச்சாட்டுகளை யும், தங்கள் அன்பான பரம தகப்பனின் குற்றச்சாட்டுகள் உண்மை என்பதையும் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

இப்படி எதிர்த்துப் பதில் பேசும் ஏழு எடுத்துக்காட்டுகள் இலக்கிய மேடையாகவும், இப்புத்தகத்தின் முக்கியமான பகுதிகளாகவும் உள்ளன. ஒரு அற்புதமான வேதாகம விரிவுரையாளர் இந்த ஏழு எடுத்துக்காட்டு களையும் "தேவனிடமாய்க் குளிர்ந்து போய்க் கொண்டிருக்கும் ஓர் இதயத்தின் ஏழு முணுமுணுப்புகள்" எனக் கூறினார்.



## அத்தியாயம் 13

# தேவனிடமாய் கடினப்பட்டுப் போய்க் கொண்டிருக்கும் ஓர் இருதயத்தின் மென்குரல்

### மென்குரல் பேச்சு ஒன்று : தேவனுடைய அன்பை சந்தேகித்தல் (1:1-5)

மல்கியா தன் தீர்க்கதரிசனத்தை இந்த அறிக்கையோடு துவங்குகி றார்: *"மல்கியாவைக் கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த் தையின் பாரம். நான் உங்கலைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லு கிறார்."* யூதா மக்கள் மீது தேவன் கொண்டுள்ள அன்புக்குப் பல சான் றுகளை தீர்க்கதரிசி காட்டுகிறார்.

ஒவ்வொரு அன்பின் உறவுக்கும் இரு பரிமாணங்கள் உண்டு. அவை, அன்பைக் கொடுப்பதும் அன்பைப் பெற்றுக்கொள்வதும் தான். இங்கு அறிவுக்கூர்மையான ஒரு கேள்வி எழும்புகிறது: 'நீ முன்பு போல் தேவ னிடம் நெருக்கமாயில்லையென்றால், யார் தள்ளிப் போனது?' - இதுவே அந்தக் கேள்வி அல்லது "தேவனோடு ஒரு காலத்தில் அன்பின் உறவு இருந்தது, இப்பொழுது அது இல்லை என்றால் யார் அன்பு காட்டுவதை நிறுத்தியது?" என்றும் கேட்கலாம். தேவன் நம் மீது கொண்டுள்ள அன்பை சந்தேகித்தால், தேவன் மீது நாம் கொண்டுள்ள அன்பில் ஏதோ தவறு இருக்கிறது என்பது பொருள்.

வெளிப்படுத்தல் புத்தகத்தில், ஆயிர வருட அரசாட்சியில் தேவ னுடைய மக்களுக்கு மேய்ப்பர்களாக இருக்கும் தலைவர்கள் மோட்சத் தில் ஒரு பெரிய சிங்காசனத்தைச் சூழ உள்ள சிறு சிங்காசனங்கள் மேல் உட்கார்ந்திருக்கும் இருபத்தி நான்கு மூப்பர்களாகச் சித்தரிக்கப்பட்டி ருக்கிறார்கள். இந்த மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுக ளில் பொன் முடி சூடியிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு சுர மண்டலத்தையும், தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்

துக் கொண்டிருந்தார்கள் என்றும் வாசிக்கிறோம் (வெளிப்படுத்தல் 4:4; 5:8).

இந்த மூப்பர்களின் வெண் வஸ்திரம் சன்மார்க்க பரிசுத்தத்தைக் குறிக்கிறது அல்லது அவர்கள் இறுதி வரை நன்றாக ஓடியிருக்கிறார்கள் என்ற உண்மையைத் தெரிவிக்கிறது. பொன்முடிகள், விசுவாசத்தில் அவர்கள் கண்ட ஆவிக்குரிய வெற்றிகளுக்கு அடையாளமாயிருக்கின்றன. தூபவர்க்கத்தால் நிறைந்த அவர்களுடைய பொற்கலசங்கள் பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மூப்பரிடமும் சுரமண்டலம் இருப்பது அவர்கள் ஆராதிப்பவர்கள் என்பதைக் காட்டுகிறது.

மல்கியா, தேவனிடமாய்க் கடினப்பட்டுப் போன இருதயமுடைய, சீர்கெட்டுப் போன ஆவிக்குரிய தலைவர்களுக்கென்றே தீர்க்கதரிசனம் உரைத்தார். தேவனோடு ஆவிக்குரிய தலைவர்கள் தாம் கொண்டிருந்த உறவில் குளிர்ந்து போனதால் ஏற்பட்ட பயங்கரமான விளைவுகளைக் குறித்து அவர் அதிகமாக பாரமடைந்தார். தனி தியான ஜீவியம் அற்ற ஆவிக்குரிய தலைவர்கள் அல்லது *"தங்கள் சுரமண்டலங்களைத் தொலைத்து விட்டவர்கள்"* மல்கியாவின் கூற்றுப்படி, கடைசியில் எல்லாவற்றையுமே இழந்து விடுவார்கள்.

தேவனுடைய மக்கள் எங்ஙனம் ஆவியில் உயிரற்றுப் பொகிறார்கள்? மல்கியாவின் கூற்றுப்படி மரணத்தைத் தரும் இந்தப் பாதை, ஆவிக்குரிய தலைவர் மீது தேவன் கொண்டுள்ள அன்பை சந்தேகித்து, தேவன் மீது அவர் கொண்டுள்ள அன்பைக் காட்டும் ஒழுங்கான தியானத்தை அசட்டை செய்வதோடு துவங்குகிறது. இந்த உண்மை ஆவிக்குரிய தலைவருக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசிக்கும் பொருந்தும்.

## மென்குரல் பேச்சு இரண்டு: தேவனுடைய நாமத்தை வெறுப்பது (1:6-2:4)

மல்கியாவின் மூலம் தேவன் கூறும் அடுத்த குற்றச்சாட்டு தேவனிடமாய்க் குளிர்ந்து போன இதயத்தின் மென்குரல் அல்லது முணுமுணுப்பு. ஆவிக்குரிய தலைவன் அல்லது விசுவாசி தேவனுடைய நாமத்தை வெறுக்கும்போது இரண்டாவது மென்குரல் பேச்சு வருகிறது. "உமது நாமத்தை எப்பொழுது எதினாலே அசட்டை பண்ணினோம்?" என்ற மறுப்பும் எதிர்த்துப் பேசுதலும் தொடர்கிறது. இதற்கு மறுமொழியாக "கர்த்தருக்கு விலையுயர்ந்தது எதையும் கொடுக்க அக்கறைப் பட வேண்டாம் என நீங்கள் சொல்லும் ஒவ்வொரு தடவையும் தான்" வருகிறது.

"குருடும், கால் ஊனதுமான மிருகங்களை நீங்கள் ஏற்றுக் கொண்டு, அவற்றை தேவனுக்கு ஏற்ற பலிகள் என பலியிடுவதால் தேவனுடைய நாமத்தை அசட்டை பண்ணுகிறீர்கள்" என மல்கியா இந்த ஆசாரியர்களுக்குச் சொல்கிறார். மல்கியா தனது கடுமையான பிரசங்கங்கள் ஒன்றிலே, தேவனுக்காக ஆசாரியர்களிடம் பேசுகிறார்.

*"உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன்; அதனோடே கூட நீங்களும் தள்ளுபடியாவீர்கள்"* (2:3). *"உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்?"* (1:10).

தேவன் யார் அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவருடைய நாமம் காட்டுகிறது. வேதத்திலுள்ள தேவனுடைய நாமங்களைக் கருத்தாய்ப் படிப்பது, தேவனுடைய சுபாவத்தையும், அவருடைய பண்பையும் படிப்பதாகும். பத்துக் கற்பனைகளில் மூன்றாவது கற்பனை நாம் அவரது நாமத்தை வீணிலே வழங்கக் கூடாது என எச்சரித்துள்ளது (யாத்திராகமம் 20:7). இந்தக் கற்பனை தேவன் யார் அவர் எப்படிப்பட்டவர் என்ற பயபக்தி இல்லாமல், ஆராதனையில் அவர் நாமத்தை ஒருபோதும் உச்சரிக்கக்கூடாது என்பது. இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தபோது, தேவனை "பரமபிதாவே" என்றழைக்க வேண்டும் என்று கூறிய பிறகு, அவர்களது முதல் விண்ணப்பம் "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்றிருக்க வேண்டும் எனக் கற்பித்தார்.

யூத மக்கள் தரம் குறைந்தவைகளை பலிகளாகக் கொண்டு வந்தபோது, ஆசாரியர்கள் அவைகளை ஏற்றுக் கொண்டார்கள். அவைகளைக் கொண்டு வந்த தேவனுடைய மக்கள், தேவனுடைய நாமத்தை அசட்டை பண்ணினார்கள். விலை மதிப்புள்ள எதற்கும் தேவன் தகுதியுள்ளவரல்ல என்று சொன்னார்கள். மல்கியாவின் கூற்றுப்படி, தேவனிடமாய்க் குளிர்ந்து போன இருதயத்தின் இரண்டாவது முணுமுணுப்பு தேவனுடைய நாமத்தை அசட்டை செய்வதாகும்.

இந்த இருதய மென்குரல்களில் நீ உன்னைக் காண்கிறாயா? நீ தேவனோடு தனிப்பட்ட, உனக்கு மட்டுமேயுள்ள, மிக நெருங்கிய அன்பின் உறவு கொண்டுள்ளாயா? உன் ஆராதனையின் மூலம், நீ தேவனை நேசிக்கிறாயென்றும், அவர் யார் அவருடைய தகுதி என்ன எனக் கண்டு அவரை விலைமதிக்கிறாயா?

## மென்குரல் பேச்ச மூன்று: உடைந்துபோன அர்ப்பணிப்பு (1:13)

ஒரு ஆவிக்குரிய தலைவன் அல்லது ஒரு தேவபக்தியுள்ள விசுவாசி, தனிப்பட்ட ஆராதனையில் தேவனோடு உள்ள அன்பின் உறவை வெளிப்படுத்தாமல், தன் செய்கைகளினால் தேவன் யார், எப்படிப்பட்டவர் என்பதன் சாரத்தையே அசட்டை பண்ணினானென்றால், அவர்கள் இருதயத்தின் அடுத்த மென்குரல் தேவனுடைய ஊழியத்தை மிகக் கடினமானதாக காண்கிறான் என்பதாகும். அவருடைய தீர்க்கதரிசனத்தின்

இந்த இடத்தில், ஆசாரியர்களிடம் அறிவு பூர்வமாக இன்னொரு கேள்வியை மறைமுகமாகக் கேட்கிறார்.

ஆகாய் தீர்க்கதரிசனத்தில் முன்வைக்கப்பட்டதும், வேதாகமம் முழுவதிலும் காணப்படுவதுமான அந்த இரு வார்த்தைகளை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன். *"தேவனுக்கு முதலிடம்."* ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை நமக்கு முன் வைக்கப்பட்ட சவால் தேவனை முதலாவதாக வைத்து, அவரை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்பதே, இரண்டுபட்ட இருதயத்தோடு ஒரு ஆவிக்குரிய தலைவன் தேவனை சேவிப்பானேயானால், கூடிய சீக்கிரத்தில் அவன் தேவனுடைய வேலை மிகக் கடினமானது என்பான். உலகிலேயே மிகப் பரிதாபமான மக்கள் யாரென்றால், முழு அர்ப்பணிப்போடு சேவிக்க வேண்டிய தேவனை அதற்கும் குறைவான அர்ப்பணிப்போடு சேவிக்கும் ஆவிக்குரிய தலைவர்களே.

கீழே கொடுக்கப்பட்ட சத்தியத்தை வேதாகமம் முழுவதும் தேடிக் கண்டுபிடியுங்கள். "தேவன் உனக்கு ஏதோ ஒன்றாயிருக்கிறார் என்றால், அவரே உனக்கு எல்லாமுமாயிருக்கிறார். தேவன் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக ஆகாதவரை உண்மையில் அவர் உனக்கு எதிலுமே இல்லாதவர் போலத் தான் இருக்கிறார்.'' கர்மேல் பர்வதத்திலே தேவனுடைய மக்களுக்கு எலியா சவால் விட்டதைப் பாருங்கள் "எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்" என்றார். மேலும் உயிரோடெழுந்து ஜீவிக்கும் கிறிஸ்து லவோதிக்கேயா சபைக்கு எழுதுவதைக் கேளுங்கள்: *"உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; ... இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்''* (வெளிப்படுத்தல் 3:15, 16).

இரு மனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனா யிருக்கிறான் என யாக்கோபு கூறுகிறார். நான் முன்னதாகவே சொன்னபடி, ஒரே மனது அல்லது நோக்கம் மகிழ்ச்சி நிரம்பிய வாழ்க்கைக்கு வழி நடத்துகிறது. ஆனால் ஆவியிலே இரு வேறு பார்வை பயங்கர இருள் அல்லது துக்கத்திற்கு வழி நடத்தும். பிரிக்கப்படாத, பிளவுபடாத இருதயங்களோடு நாம் தேவனை சேவிக்க வேண்டும் என வேதாகமம் முழுவதும் தேவனுடைய வார்த்தைகளால் நிரம்பியிருக்கிறது.

### ஒரு ஆசாரியனின் வாழ்க்கைச் சுருக்கம் (2:5-9)

இரண்டாவது அதிகாரத்தில், நாலாவது குற்றச்சாட்டை வைக்க சந்தர்ப்ப சூழ்நிலையை உருவாக்கும் மல்கியா தேவனுடைய ஒரு



உண்மையான ஆசாரியன் எப்படி இருக்க வேண்டுமென விவரிக்கிறார். மோசே ஆசாரியர்களுக்குத் தகப்பனான லேவியைப் பற்றி கூறிய வார்த்தைகளை இங்கு மேற்கோள் காட்டுகிறார். *"சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை, அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்''* (மல்கியா 2:6; உபாகமம் 33:10).

உண்மையாக ஆராதனை செய்து போதகர்கள் பல ஆண்டுகளாக உழைத்திருந்த சில சபைகளில் மேற்கண்ட மோசேயின் வசனத்தைத் தகட்டில் பொறித்து பின்வரும் சந்ததியினர் வாசிப்பதற்கெனப் பதித்து வைத்திருப்பார்கள்.

மல்கியா ஆசாரியனைப் பற்றிப் பின்னும் தொடர்ந்து சொல்கிறார்: *"ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்."* ஆசாரியன் இருக்க வேண்டிய மாதிரியோடு, அனலற்ற குளிர்ந்த இருதயத்துடன், நம்பிக்கையை விட்டு விலகிய கெட்டுப்போன ஆசாரியர்களை ஒப்பீடு செய்து நாலாவது குற்றச் சாட்டை முன்வைக்கிறார்.

### மென்குரல் பேச்சு நான்கு : திருமண வாக்குத்தத்தங்களும் அர்ப்பணிப்பும் உடைக்கப்பட்டன (2:10-16)

முதலில் ஆசாரியர்களும், யூத மக்களும் முற்றிலும் பரிபூரண பரிசுத்த தேவனோடு செய்த உடன்படிக்கை அல்லது அர்ப்பணிப்பின் நெறிமுறைகளை விட்டுக் கொடுத்தார்கள். அதன்பின் தங்கள் வாழ்க்கைத் துணையோடு கொண்ட உடன்படிக்கையிலும் நெறிமுறைகளைத் தாங்களே தளர்த்தி விட்டார்கள். இந்த இருதய மென்குரலின் தத்துவார்த்த விளைவுகளைப் பாருங்கள். மேலே வானத்திலுள்ள தேவனோடு செய்த உடன்படிக்கையில் மாசு ஏற்படில், மக்களோடு கொண்டுள்ள உடன்படிக்கைகளும் உடைத்துத் தூளாக்க வேண்டிய ரொட்டி போல் தான் இருக்கும்.

விவாகரத்து என்னும் பிரச்சனையை மல்கியா இப்பொழுது கையிலெடுக்கிறார். விவாகரத்துக்காக நீதிமன்றங்களுக்குப் போகும் விவாகங்களில் பிறந்த பிள்ளைகளுக்காக நெகேமியாவைப் போல இவரும் அக்கறை கொள்கிறார் (நெகேமியா 13:23-25). பிள்ளைகள் உலகத்திற்குள் போய், தாங்களே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு முன், அவர்கள் பராமரிக்கப்படுவதற்கென தேவன் ஏற்படுத்திய திட்டமே விவாகம் என ஆசாரியர்களுக்கும் யூதாவின் மக்களுக்கும் அவர் நினைவூட்டுகிறார். அதனால் தான் தள்ளி விடுதலை தேவன் வெறுக்கிறார் (15).

பெற்றோர் வில் போன்றவர்கள் என்றும் பிள்ளைகள் அம்புகள் போன்றவர்களென்றும் சாலொமோன் சொல்கிறார். பிள்ளைகள் வாழ்க்கையில் காலடி எடுத்து வைப்பது பெற்றோர்களிடமிருந்து அவர்கள் பெறும் ஊக்கத்தையும், வழிநடத்துதலையும் பொறுத்தது.

தேவனோடுள்ள ஐக்கியத்தில் குளிர்ந்து போய்விட்ட ஒரு இருதயத்தின் மென்குரலைத் தான் மல்கியா குறித்துக் கொண்டு வருகிறார் என்பதை நினையுங்கள். தேவனோடு அவர்கள் தொடர்பு முறிந்துபோனால், மக்களுக்கு அவர்கள் கொடுத்த வாக்குத்தத்தங்களும் முறிந்து போகும்.

ஆசாரியர்களின் இருதயங்கள் தேவனிடமாய்ப் படிப்படியாக் குளிர்ந்து போய், பின்பு விவாகரத்தை வெகு சாதாரணமான காரியமாக எடுத்துக் கொண்டு, அந்த மக்கள் கொடுக்கும் காணிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் அளவிற்குப் போனதை மல்கியா சுட்டிக் காட்டுகிறார். இந்த விவாகரத்து செய்த மக்கள் பலிபீடத்தைக் கண்ணீரால் மறைத்து, தேவன் அவர்கள் வாழ்க்கையிலிருந்து ஆசீர்வாதத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டார் எனக் குறை சொல்கிறார்கள். யூத மக்கள் தங்கள் மனைவியரை விவாகரத்து செய்ததன் மூலம் அவர்களுக்குத் துரோகம் இழைத்திருக்கிறதால், தேவன் தமது ஆசீர்வாதத்தை அவர்களை விட்டு எடுத்துப் போட்டார் என மல்கியா விளக்குகிறார். அவர்களின் இளவயதிலிருந்தே அவர்களின் மனைவியர் அவர்களுக்கு உண்மை யாயிருந்திருக்கிறார்கள். சுகத்திலும் துக்கத்திலும் மரணம் அவர்களைப் பிரிக்கும்வரை தங்கள் மனைவியரோடு வாழப் போவதாக, தேவனோடும் மனைவியரோடும் பயபக்திக்குரிய உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அதை முறிப்பதென்றால் அது துரோகம் என மல்கியா கூறுகிறார்.

### மென்குரல் பேச்சு ஐந்து: சார்புடைய ஒழுக்க முறை (Relative morality) (2:17- 3:7)

அவர்கள் குற்ற உணர்வினால் உண்டான வலிக்கு மருந்தாக, நேர்மையிழந்து வாழ்வதைச் சரி செய்ய ஒரே வழி ஒழுக்கமுறையைக் கண்டுபிடிப்பது. அவர்களது புது ஒழுக்கமுறை அல்லது சார்புடைய ஒழுக்கம், குற்ற உணர்வினாலுண்டான ஆவிக்குரிய பிளவிலிருந்து சிதைவிலிருந்து விடுதலை தந்தது; அது ஒரு புதுவித ஆறுதலைத் தந்தது. அது அவர்கள் பாவமான மதிப்பீடு மற்றும் வாழ்க்கை முறையோடு வாழ்வதற்கு சாத்தியமாக்கிக் கொடுத்தது.

மோசேக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய சட்டத்தின் பரிபூரண, முழு முதல் ஒழுக்க நெறியை நினைவில் கொண்டால், ''புது ஒழுக்கமுறை'' அல்லது "சார்புடைய ஒழுக்கம்'' என்ற எண்ணமே ஒரு



இறையியல் மிருகத்தனம் தான். சார்புடைய ஒழுக்கம் அல்லது இருபத்தோராம் நூற்றாண்டின் நீதிசாரா ஒழுக்கநெறி என்பது சமீபத்திய ஒழுக்க நெறி வளர்ச்சி என நாம் நினைக்கிறோம். தீர்க்கதரிசனங்களை வாசித்து, அவைகளை விசுவாசிப்பீர்களெனில், அனைத்து தீர்க்கதரிசிகளுமே மல்கியாவுடன் சேர்ந்து சார்புடைய ஒழுக்க நெறி என்னும் இப்பிரச்சினைக்குள் ஈடுபடுவதைத் தெரிந்து கொள்வீர்கள்.

சார்புடைய ஒழுக்கநெறியைத் தங்கள் குற்ற உணர்வுக்கு மருந்தாகப் பயன்படுத்துவோருக்கு மறுப்புத் தெரிவிக்க இருவாதங்களை மல்கியா பயன்படுத்தினார்.

முதலில், மல்கியா மேசியாவின் முதல் வருகையைக் குறித்துப் பேசினார் (3:1-6). *"அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்"* தேவனுடைய ஊழியக்காரர்களைச் சுத்திகரிப்பார். பரிசுத்த நகரத்தில் காரியங்களைச் சரிப்படுத்துவார் (3:4,5). மேசியா வரும்போது, தேவன் ஒருபோதும் மாறுகிறதில்லை என்றும் ஒழுக்கத்தைப் பற்றிய காரியங்களில் அவர் எப்போதும் ஒரே மாதிரி தான் இருக்கிறார் (3:6) என்றும் மேசியா பிரசங்கிப்பார்.

மல்கியாவின் விவாதத்தின் இரண்டாவது பாகத்தை 4வது அதிகாரத்தில் காண்கிறோம். அதில் மேசியாவின் இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறுகிறார் (4:1, 2; 3:18). வேதாகமத்தில் அழுத்தந்திருத்தமாய்க் கூறப்பட்டிருக்கும் அடிப்படையான, மாற்ற முடியாத தேவனுடைய சட்டதிட்டங்களில் ஒன்றைப் பற்றி மல்கியா பிரசங்கித்தார் - அதாவது ஒழுக்க நெறியைக் குறித்து அவர் கவலையற்றவராய் இருப்பதில்லை. ஆகவே நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுக்கிறோம்.

### மென்குரல் பேச்சு ஆறு : தேவனை வஞ்சிப்பது (3:8-12)

தேவனிடமாய்க் குளிர்ந்து போன இருதயத்தின் முணுமுணுப்பைக் குறித்து மல்கியா கூறும் குற்றச் சாட்டு என்னவெனில், ஆசாரியர்களும் யூத மக்களும் தேவனை வஞ்சிக்கிறார்கள் என்பது. எதிர்த்துப் பேசுதல் இப்போதும் தொடர்கிறது. "எதிலே உம்மை வஞ்சித்தோம்?" எனக் கேட்கிறார்கள். அதற்கு மறுமொழியாக, தசமபாகத்தையும், காணிக்கையையும் கொடுக்காமல் வைத்திருக்கும்போதெல்லாம் அவர்கள் வஞ்சிக்கிறார்கள் எனச் சொல்லப்பட்டது.

'டைத்' (Tithe) என்ற எபிரேய வார்த்தைக்குப் "பத்தில் ஒன்று" எனப் பொருள். பக்தியுள்ள விசுவாசி வாழ்க்கையில் பெறும் ஒவ்வொன்றிலும்

முதல் பத்து தேவனுக்கே என்பது முக்கியம். தசமபாகம் என்பது வேதாகமம் முழுவதும் கற்பிக்கப்படும் “தேவனுக்கு முதலிடம்” என்ற கொள்கையைக் கற்றுக் கொள்வதற்கும், எந்த அளவிற்கு அதை நாம் கடைப்பிடிக்கிறோம் என நம்மை நாமே அளந்து கொள்வதற்கும் ஒரு தருணத்தைத் தருகிறது. வாக்குத்தத்த பூமிக்குள் அவர்கள் படையெடுத்துச் சென்ற போது, அவர்கள் வென்ற முதல் பட்டணத்தின் கொள்ளைப் பொருள்கள் தேவனுக்குச் சொந்தமாயின. தங்கள் முதற்பேறான குமாரனைக் கூட தேவனுக்குக் கொடுத்தனர்.

தசம பாகத்திற்கும் மேலாக, விசுவாசி காணிக்கைகளும், பலிகளும் கொடுக்க வேண்டுமென தேவன் அறிவுறுத்தினார். பலியைப் பற்றி தாவீது இப்படி எழுதினான்: *“நான் இலவசமாய் வாங்கி என் தேவனுக்கு பலி செலுத்தமாட்டேன்”* (2 சாமு 24:24). தசம பாகத்தைப் பற்றி மல்கியா கூறும் முக்கியத்துவம் என்னவென்றால், அவர்கள் பெறும் எல்லாவற்றிலும் முதல் பத்திலொன்று திட்டந்தெளிவாக தேவனுக்குரியது, தசமபாகத்தைக் கொடுக்காமல் வைத்துக் கொள்வது தேவனுக்குரியதை தேவனிடமிருந்து திருடிக் கொள்வது என்று பொருள் என்பதாகும்.

தேவனிடமாய்க் குளிர்ந்து போன இதயத்தின் முணுமுணுப்பு எந்த சந்தர்ப்பத்தில் என்று சிந்தியுங்கள். அப்பொழுது இந்தத் தீர்க்கதரிசி குறிப்பிடும் விசுவாசத்தினின்று வழிவிலகுதல் படிப்படியாக வளர்ந்த தந்திரத்தை விளங்கிக் கொள்வீர்கள். தேவன் மீது அன்பு என்ற பக்திக்குரிய வெளிப்பாடு இனிமேல் இல்லை. தேவன் யார், எப்படிப்பட்டவர், அவர் எதற்குத் தகுதியானவர் என்பதை அவர்கள் விளங்கி ஏற்றுக் கொண்டதாக அவர்கள் செயல்கள் காட்டுவதில்லை. தேவனுடன் ஒரு முறிந்த அர்ப்பணிப்பு மேலே உள்ள தேவனிடம் செய்த உடன்படிக்கையில் குறை ஏற்பட்டதால் அதைத் தொடர்ந்து மக்களிடமும் உடன்படிக்கை முறிந்தது; நேர்மைக் குறைவுக்கு மருந்தாக சார்பு ஒழுக்க நெறி வந்தது.

முதல் ஐந்து முணுமுணுப்புகளையும் கேட்ட பிறகு தசமபாகத்தையும் காணிக்கைகளையும் கொடுக்காமல் வைத்துக் கொள்ளும் நிலைமையை நாம் எதிர்பார்க்கலாம். ஆறாவது முணுமுணுப்பு சற்றுப் பிந்தி வருவதாலும், தீர்க்கதரிசி தம் செய்தியை கெட்டுப்போன ஆசாரியர்களுக்கென்றே கொடுப்பதாலும் ஆசாரியர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கைகளைத் தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறுகிறார் என்று நாம் எண்ணலாம்.

## மென்குரல் பேச்சு ஏழு: அவிசுவாசம் (3:13-15)

தேவனைப் பற்றிய விஷயத்தில் முற்றிலும் குளிர்ந்து போன இருதயத்தின் ஏழாவது முணுமுணுப்பு அவிசுவாசம். தேவன் சார்பில்



பேசும் மல்கியா ஆசாரியர்கள் மற்றும் யூதா மக்களை ஏழாவது குற்றச்சாட்டைக் கூறிச் எதிர்கொள்ளும்போது அவிசுவாசம் அவர்களிலிருந்து வெளிவருகிறது. அவர்கள் எதிர்த்துப் பேசுகிறார்கள். *“நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் என்கிறீர்கள். தேவனை சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்.”*

இந்த ஆசாரியர்கள் இப்பொழுது விசுவாசிப்பதில்லையென்றாலும், அவர்கள் ஆசாரியர்களாகப் பிறந்ததினால் ஆசாரியத்துவத்தை விட முடியவில்லை. ஆகவே ஆசாரியர்களாக தொடர்ந்து வேலை செய்தார்கள். ஆசாரியர்களின் வேலைகளில் ஒன்று வேதத்தைப் போதிப்பது. அவர்கள் வேதத்தை விசுவாசிப்பதில்லை என்றால், எதைப் போதிக்கப் போகிறார்கள். மல்கியாவின் கூற்றுப்படி “அகங்காரிகளைப் பாக்கியவான்கள்” என்று போதித்தார்கள்.

உங்களுக்கு வேதாகமம் நன்றாகத் தெரிந்திருந்தால் தேவன் பெருமையையும் மனமேட்டிமையையும் எவ்வளவு வெறுக்கிறார் என்று தெரிந்திருக்கும். பெருமையே அனைத்துப் பாவங்களுக்கும் தாய்.

வேதாகமத்திற்கு முற்றிலும் முரண்பாடான போதனையை நாம் கேட்கும்போது அவிசுவாசத்தின் இந்த நிலைக்கு எப்படி வந்தோம் என ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. மல்கியா தெளிவாகக் கூறும் பதில் என்னவெனில் நம் இருதயங்களின் மெதுவான பேச்சுக்குச் செவிகொடுக்க ஆரம்பிக்கும் போது தான். ஒரு விசுவாசி அல்லது ஒரு ஆவிக்குரிய தலைவனிடம் இந்த ஏழு மென்குரல்களும் கேட்கப்படும். இதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம்.

கொதிக்கும் நீருள்ள பாத்திரத்தில் ஒரு தவளையைப் போட்டால், அது வெளியே குதித்துவிடும். ஆனால் தவளையைக் குளிர்ந்த நீரில் போட்டு, மெதுவாக வெப்பத்தை அதிகரித்துக் கொண்டு வந்தால், தவளை சீக்கிரத்தில் வெந்து போய்விடும். மல்கியா சுட்டிக் காட்டிய அமைதியான முறை அப்படித்தான் இருக்கிறது மெதுவாக வேலை செய்கிறது. ஆனால் இறுதியில் முடிவோ - கெட்டுப் போன ஆவிக்குரிய தலைவர்கள், விவாகரத்து என்ற தொற்று வியாதி, சார்பு ஒழுக்கநெறி மற்றும் அவிசுவாசம்.

அத்தியாயம் 14

# முடிவுரை (மல்கியா 3:16-4:4)

மேற்குறிப்பிட்ட வேத வாக்கியங்களைக் கருத்தாய்ப் படித்தால் மல்கியாவின் பிரசங்கம் மூன்றாம் அதிகாரம் பதினைந்தாம் வசனத்தில் முடிவடைகிறதைக் காணலாம். மல்கியாவின் மீதி தீர்க்கதரிசனம் அவருடைய இந்த மகத்தான பிரசங்கத்திற்குக் கடினப்பட்டுப் போன இருதயங்கொண்ட விசுவாசிகள் கொடுத்த பதில்களை விவரித்துள்ளது. ஆனால் தேவனுக்குப் பயந்த மக்கள் தேவனோடுள்ள தொடர்பையும் விட்டுவிடவில்லை, விசுவாசத்தையும் விட்டு விடவில்லை.

தேவனிடமாய்க் குளிர்ந்து போன, கடின இதயமுள்ள ஆசாரியர்கள் மற்றும் யூத மக்களின் கற்பனை எதிர்த்துப் பேசுதலுக்கு தேவன் மறுமொழி கொடுத்ததை மல்கியாவின் தீர்க்கதரிசனம் முழுவதிலுமே கேட்டிருக்கிறோம். இந்த அழகான முடிவுரையில், மெய்யான தேவனுடைய மக்களுக்கு தேவன் அருளும் அன்பான மறுமொழியைக் கேட்கிறோம். கர்த்தருக்குப் பயந்து அவரை நேசித்தவர்கள் மல்கியாவின் மகத்தான பிரசங்கத்தை ஆமோதித்தார்கள். அவர்கள் தங்கள் ஆதி அன்பை விட்டுவிடாத தேவனுடைய மக்கள் அல்லது மல்கியாவின் பிரசங்கத்தின் மூலமாய் மனந்திரும்பி கர்த்தர் மேல் திரும்பவும் தங்கள் அன்பைச் செலுத்தத் திரும்பி வந்தவர்கள்.

*“அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிற வர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது,”* என்று வாசிக்கிறோம்.

ஒரு ஆவிக்குரிய எழுப்புதலின் மூலமாக, தேவன் தம் மக்களோடு கொண்டிருக்க விரும்பும் அன்பின் உறவை மீண்டும் புதுப்பிப்பதே மல்கியாவின் பணியின் நோக்கமாகும். மல்கியா தன் நோக்கத்தை



அடைந்து விட்டதாகக் கூறி மல்கியாவின் புத்தகம் முடிவடைகிறது. ஏனென்றால் இந்த வார்த்தைகள் ஒரு எழுப்புதலைத்தான் விவரிக்கின்றன.

உண்மையுள்ள ஆசாரியர்கள் மற்றும் தேவனுடைய மக்களின் இந்த மறுமொழிக்கு தேவன் தரும் அழகான பதிலையும் முடிவுரையில் காண்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி மல்கியா இவ்விதம் கூறுகிறார். “என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்.” ஆனால் அவருடைய அதிகமான தீர்க்கதரிசனத்தைப் பெற்ற குளிர்ந்த இருதயமுள்ளவர்களுக்குக் கடுமையான நியாயத்தீர்ப்பு வரும். அப்பொழுது சார்பு ஒழுக்கநெறி குறித்து தேவன் எவ்விதம் பார்க்கிறார் என்று தெரிந்துகொள்வார்கள் என அம்மக்களிடம் கூறுகிறார்.

## முடிவாக ஒரு தீர்க்கதரிசனம் (4:5, 6)

மல்கியா தமது பிரசங்கத்தை முடிக்கும்போது, கிறிஸ்துவுக்கு முன்பு எலியா போன்ற ஒரு தீர்க்கதரிசியின் வருகையைப் பற்றியும் அவர் இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துவார் என்றும் கூறுகிறார். யோவான் ஸ்நானன் தான் அந்தத் தீர்க்கதரிசி என இயேசுவானவர் தெளிவாகச் சொல்வார் (மத்தேயு 11:7-14). எலியாவின் மறு அவதாரம் தான் யோவான் என யாரும் நினைத்துவிடக் கூடாதென யோவான் அது சாத்தியமில்லை என அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறான் (யோவான் 1:21).

மல்கியா தன் தீர்க்கதரிசனத்தை “இன்னும் நானூறு வருடங்களுக்குப் பிறகு தொடரும்!'' என முடித்திருக்கலாம். இந்த யூதர்களுக்கு தீர்க்கதரிசியோ தேவனுடைய வார்த்தையோ இல்லாத நானூறு அமைதலான ஆண்டுகளுக்குப் பிறகு யோவான்ஸ்நானன் பிரசங்கிக்க வந்தான். ஆசாரியர்கள், ஆவிக்குரிய தலைவர்கள் மற்றும் யூதாவின் மக்கள் தீர்க்கதரிசிகளிலெல்லாம் பெரிய தீர்க்கதரிசிக்குச் செவிகொடுக்கப் பல மணி நேரங்களைச் செலவழித்தார்கள்.

இயேசுவானவர் பிரசங்கித்த போதும் இதே பக்தி மார்க்கத் தலைவர்கள் தங்கள் மேசியா கூறியதைக் கேட்க பலமணி நேரங்களைச் செலவழித்தார்கள். அவர்களில் சிலர் அவர் மீது கல்லெறிய முயன்றார்கள். ஆனால் சிலர் *“நாங்கள் மேசியாவைக் கண்டோம்!”* என மகிழ்ச்சியோடு கூறினார்கள். அவரில் விசுவாசம் வைத்து, அவரைப் பின்பற்றி, அவருடைய அப்போஸ்தலரானார்கள்.

உங்களோடு பழைய ஏற்பாட்டை ஆராய்ச்சி செய்தது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இரண்டு சவால்களை உங்கள் முன் வைத்து நிறைவு செய்கிறேன். (1) நீங்கள் கற்றுக் கொண்டதை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள்? மேசியாவைக் கல்லெறிந்து உங்கள் வாழ்க்கையிலிருந்து விலக்கப் போகிறீர்களா அல்லது அவரைப் பின்பற்றப் போகிறீர்களா? (2) நாம் புதிய ஏற்பாட்டை ஆராய்ச்சி செய்யத் துவங்கும்போது, இந்தப் பரிசுத்த புத்தகத்தை எங்களோடு சேர்ந்து தொடர்ந்து படிப்பீர்களா?